வெளியீடு 15-9-2001 Issued 15-9-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மே 29, 2001 – தொகுதி 2 – எண் 1**

**Tuesday the 29th May, 2001 – Volume 2 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

292
2001

V2 N, 31 P01.
P01. 2.1.
222387

29 0 200
292/2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகரவரிசைப்படி) | xvii - xxvii |
| **1. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| முக்கியப் பிரமுகர்கள் கைது | 1 - 24 |
| * திரு. லா. சந்தானம் | 2, 3 - 4 |
| * பேராசிரியர் க. அன்பழகன் | 2 - 3, 4, 12-13, 19-20 |
| மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா | 3, 5 - 11, 13 - 15, 16, 17 - 19, 20, 21, 23 |
| **2. அறிவிப்பு—** | |
| கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கு துறையினர் ஏழு நாட்களுக்குள் பதிலளித்தல் | 24 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 25 - 126 |
| * திரு. இரா. திருமாவளவன் | 25 - 38 |
| திரு. கா.பூ. முனுசாமி | 39 - 43 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | |
| * திரு. ஜி. பழனிசாமி | 44 - 53 |
| * திரு. தங்க தமிழ்ச்செல்வன் | 53 - 59 |
| திரு. மு.அ. ஹக்கீம் | 60 - 70 |
| * திரு. கு. ஜெயக்குமார் | 70 - 76 |
| திரு. எச். ராஜா | 76 - 83 |
| * செல்வி க. நாகலட்சுமி | 85 - 90 |
| * திரு. த. முருகவேல் ராஜன் | 90 - 99 |
| திரு. செ.கு. தமிழரசன் | 99 - 105 |
| * திரு. கோ. இரவிராஜ் | 105 - 109 |
| * திரு. வை. பெருமாள் | 109 - 126 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 126 - 127 |


222387



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. நிதி மற்றும் சட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**3. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

D
V2, 31'P01
P01.2.1

**4. மின் துறை அமைச்சர்** - **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. அய்யாறு வாண்டையார்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**6. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:**

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**9. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**10. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.



**11. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

**12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**13. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

**14. செய்தி, விளம்பரம் வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**15. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

கூட்டுறவு.

**16. உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைச் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

### GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J. Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:** Finance, Planning, Election and Legislature, Law, Courts, Prisons, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Eiectricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru Ayyaru Vandayar:** Hindu Religious and Charitable Endowments. |

| | |
|---|---|
| **6. Minister for Industries..** | **The Hon. Thiru V. Jayaraman:**<br>Industries, Iron and Steel Control, Mines and Minerals and Electronics. |
| **7. Minister for Health ..** | **The Hon. Thiru S. Semmalai:**<br>Health, Medical Education and Family Welfare. |
| **8. Minister for Local .. Administration** | **The Hon. Thiru C. Durairaj:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **9. Minister for Agriculture ..** | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development. |
| **10. Minister for Revenue ..** | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses. |
| **11. Minister for Public .. Works** | **The Hon. Thiru N. Thalavai Sundaram:**<br>Public Works, Highways, Irrigation including Minor Irrigation. |



| | |
|---|---|
| **12. Minister for Labour ..** | **The Hon. Thiru A. Anwer Rhazza:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs. |
| **13. Minister for Rural .. Industries** | **The Hon. Thiru K. Pandurangan:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| **14. Minister for Information .. and Publicity and Forests and Environment** | **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control. |
| **15. Minister for .. Co-operation** | **The Hon. Thiru P. Dhanabal:**<br>Co-operation. |
| **16. Minister for Food and .. Civil Supplies and Consumer Protection** | **The Hon. Thiru R. Viswanathan:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| **17. Minister for Backward .. Classes and Milk and Dairy Development** | **The Hon. Tmt. R. Saroja:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities and Milk and Dairy Development. |
| **18. Minister for Social .. Welfare** | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |

19. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru V. Subramanian:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

20. **Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**

Fisheries and ... ıdry.

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru ... ım:**

Commercial T...

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru ... nathan:**

Handlooms ar...

24. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru**

Housing, Ho... ment, Town Planning, Sl... Accommo- dation Contro... opment and Chennai Me... velopment Authority.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru ... am:**

Tourism and ... velopment Corporation.

---



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள்

திரு. கா.பூ. முனுசாமி

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி. யசோதா

திரு. ஐ. கணேசன்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாள |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாள (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாள |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல் | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா | .. | தலைமை நிருபர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கி. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |

**17. பிற்படுத்தப்பட்டோர், பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**18. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.*

**19. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**

*ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.*

**20. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.*

**21. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

*மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.*

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*வணிக வரிகள்.*



**23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**24. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**

*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

**25. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. வெங்கடாசலம்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

| | | |
|---|---|---|
| 67. | காளிமுத்து, டாக்டர் கா. | - திருமங்கலம் |
| 68. | கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. | - அரூர் (செ.வ.) |
| 69. | கிருஷ்ணன், திரு. ஆர். | - அந்தியூர் (செ.வ.) |
| 70. | குமாரதாஸ், டாக்டர் தே. | - கிள்ளியூர் |
| 71. | குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | - ஆண்டிமடம் |
| 72. | கோதண்டராமன், திரு. ஜி. | - முகையூர் |
| 73. | கோபிநாத், திரு. கே. | - ஓசூர் |
| 74. | கோவிந்தசாமி, டாக்டர் ஆர். | - விருத்தாசலம் |
| 75. | கோவிந்தராஜ், திரு. வெ. | - கிருஷ்ணகிரி |
| 76. | கோவை தங்கம், திரு. | - வால்பாறை (செ.வ.) |
| 77. | சக்திவேல் முருகன், திரு. எம். | - அம்பாசமுத்திரம் |
| 78. | சக்ரபாணி, திரு. ஆர். | - ஒட்டன்சத்திரம் |
| 79. | சசிகலா, திருமதி ஆர். | - கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 80. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | - ஸ்ரீவைகுண்டம் |
| 81. | சண்முகம், திரு. சி. | - பூந்தமல்லி |
| 82. | சண்முகம், திரு. சி.வி. | - திண்டிவனம் |
| 83. | சண்முகவேலு, திரு. சி. | - உடுமலைப்பேட்டை |
| 84. | சந்தானம், திரு. லா. | - உசிலம்பட்டி |
| 85. | சந்திரசேகரன், திரு. எம்.எஸ். | - இராணிப்பேட்டை |
| 86. | சந்திரமோகன், திரு. நா. | - சீர்காழி (செ.வ.) |
| 87. | சந்திரன், திரு. வீ. | - சிவகங்கை |
| 88. | சம்பத், திரு. எம்.சி. | - நெல்லிக்குப்பம் |
| 89. | சரவணன், திரு. துரை. கி. | - சிதம்பரம் |
| 90. | சரோஜா, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆ.வா.) |



| | | |
|---|---|---|
| 91. | சாமி, திரு. ஆர். | - மேலூர் |
| 92. | சாமிநாதன், திரு. மு.பெ. | - வெள்ளக்கோவில் |
| 93. | சிதம்பரம், திரு. ப. | - பவானிசாகர் |
| 94. | சிவகாமி, திருமதி வி. | - தாராபுரம் (செ.வ.) |
| 95. | சிவசாமி, திரு. கே.கே. | - அருப்புக்கோட்டை |
| 96. | சிவசாமி, திரு. செ. | - திருப்பூர் |
| 97. | சிவசுப்பிரமணியன், திரு. டி.என் | - கரூர் |
| 98. | சிவபுண்ணியம், திரு. வை. | - மன்னார்குடி |
| 99. | சிவபெருமாள், திரு. அ. | - ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 100. | சிவராஜ், திரு. சு. | - ரிஷிவந்தியம் |
| 101. | சின்னசாமி, திரு. மா. | - பழனி (செ.வ.) |
| 102. | சீனிவேல், திரு. எஸ்.எம். | - திருப்பரங்குன்றம் |
| 103. | சுதர்சனம், திரு. கே. | - கும்மிடிப்பூண்டி |
| 104. | சுதர்சனம், திரு. டி. | - திருவள்ளூர் |
| 105. | சுந்தரம், திரு. பி.ஆர். | - ராசிபுரம் |
| 106. | சுந்தராம்பாள், திருமதி செ. | - மேட்டூர் |
| 107. | சுப்பிரமணியன், திரு. வீ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 108. | சுப்பையா பாண்டியன், திரு. எம். | - கடையநல்லூர் |
| 109. | சூரியகலா, திருமதி சி.எம். | - குடியாத்தம் |
| 110. | செம்மலை, திரு. செ. | - ஓமலூர் |
| 111. | செல்லையா, திரு. வி.ஏ. | - மருங்காபுரி |
| 112. | செல்வம், திரு. எஸ்.கே. | - வீரபாண்டி |
| 113. | செல்வராஜ், திரு. ஆ. | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 114. | செல்வராஜ், திரு. ஏ.கே. | - மேட்டுப்பாளையம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | .. திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | .. நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | .. திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | .. திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | .. கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | .. மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | .. திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | .. மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | .. அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | |
|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | .. திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | .. செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |
| 51. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. து. | .. தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. பொன்னேரி (செ.வ.) |
| 54. | கந்தசாமி, திரு. க.ரா. | .. சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | .. குன்னூர் (செ.வ.) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | .. சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | .. சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. குளத்தூர் (செ.வ.) |
| 61. | கலாவதி, திருமதி கு. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 62. | கனகதாரா, செல்வி. சி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. திருப்போரூர் (செ.வ.) |
| 64. | காசாம்பு, திருமதி பூ. | .. சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | .. தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | .. சேலம்—2 |

163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
164. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
165. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
166. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
167. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
168. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
169. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திக்குளம்
170. பெருமாள், திரு. வை. - சைதாப்பேட்டை
171. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
179. மணி, திரு. டி. - விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. - முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
185. மில்லர், திரு. அ. - கடலூர்



186. முரளிதரன், திரு. கே.வி. - தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
190. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. - சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிச்செட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
197. ராமச்சந்திரன், திரு. கே. - ஆரணி
198. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
199. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
200. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
201. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
202. ராஜா, திரு. எச். - காரைக்குடி
203. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
204. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
205. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
207. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
208. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

115. செல்வி முருகேசன், திருமதி . - காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. - ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி திருமதி ஆர். - மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
125. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. - காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
137. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
138. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி



139. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
140. நடராஜன், திரு. வது. - இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி - போளூர்
144. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
145. நாகலெட்சுமி, செல்வி. க. - திண்டுக்கல்
146. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
147. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
148. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
149. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
150. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி—1
151. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
159. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. - தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர்.. தொண்டாமுத்தூர்

| | | |
|---|---|---|
| 209. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 210. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 212. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 214. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்கா நகர் |
| 216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 218. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 220. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்—1 |
| 221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 222. வேலுசாமி, திரு. செ.மா. | - | பல்லடம் |
| 223. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 224. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 226. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |
| 227. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | - | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | - | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | - | பொள்ளாச்சி |
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |



| | | |
|---|---|---|
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | - | மதுரை மத்தி |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 234. # | - | எழும்பூர் (செ.வ.) |
| 235. (வெற்றிடம்) | - | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| (வெற்றிடம்) | - | தலைமை வழக்கறிஞர் |

# திரு. பரிதி இளம்வழுதி 30-5-2001 வரை பதவிப் பிரமாணம்/ உறுதிமொழி எடுத்துக்கொள்ளவில்லை.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 15, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 மே 29, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா

பிற்பகல் தாமே வரும்".

ஒருவர் பிறருக்குத் தீயவற்றை ஒரு பகலின் முற்பகுதியிற் செய்வாராயின் அதன் விளைவாகத் தமக்குத் தீயவை அப்பகலின் பிற்பகுதியில் அவர் செய்யாமல் தாமே வரும்.

[**குறிப்பு:**ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

### முக்கியப் பிரமுகர்கள் கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக பேரவையில் எழுப்புவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்கள் இன்று எனது அறைக்கு வந்து அனுமதி கேட்டார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்தப் பொருள் குறித்து சுருக்கமாகப் பேசுமாறு மாண்புமிகு உறுப்பினரை அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

என்பவரால் ஒரு வடநாட்டு வியாபாரி ஜகதீஷ் புனாமியா என்பவர் மிரட்டப்பட்டார், தனக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உயிருக்கே ஆபத்தை உண்டாக்குகிற நிலையை ஏற்படுத்தினார் என்பதை எடுத்துச் சொல்லி...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்கள் அதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. சந்தானம் அவர்கள் பிரச்சினைக்கு உள்ளே போகவில்லை. பத்திரிகைகளில் வந்திருக்கின்ற செய்திகளை வைத்து, ஆட்சியிடத்திலே, அரசிடத்திலே தகவல் கேட்கிறார்.

**திரு. லா. சந்தானம்:** காவல் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இவை தவறான தகவல்கள் என்றும், பழி வாங்கும் நடவடிக்கையாக எடுக்கப்படுகின்ற வழக்குகள் என்றும் எதிர்க்கட்சிகள் சொல்கிறார்களே, அதனுடைய உண்மை நிலைமையை தமிழக மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான், இந்த அவையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நான் இந்த வாதத்தைக் கிளப்புகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லி அமருகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினை sub-judice என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் அதை அனுமதிப்பதாக இருந்தால் அது வேறு; ஆனால், sub-judice ஆக இருப்பதை, அனுமதிக்கக்கூடாது என்பது பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்கு அறிவித்தது. இரண்டாவது, ஒரு வழக்கு பொய் வழக்கா; அல்லவா; என்பதை நீதிமன்றத்திலேதான் நிரூபிக்க முடியும். நாம் இங்கே விசாரணை செய்து அதை நிரூபிக்க நமக்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். அதிலே ஒன்றும் இல்லை. அவர் கேட்பது, பத்திரிகைகளில், இது பழி வாங்கும் போக்கு என்று வந்திருக்கிறதே, அதற்கு ஆட்சித் தரப்பிலே என்ன விளக்கம் என்றுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



* **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகுதான் அது sub-judice ஆகிறது. அந்த நிலையை இந்த வழக்குகள் இன்னும் அடையவில்லை. புகார் கூறப்பட்டுள்ளது; குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது; அந்தப் புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் சிலரைக் கைது செய்து இருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள், தங்களை விடுவிக்க வேண்டுமென்று ஜாமீன் மனு போட்டிருக்கிறார்கள். அந்த நிலையிலேதான் வழக்குகள் இருக்கின்றனவே தவிர, வழக்குக்கு உள்ளே போகவில்லை; வழக்கு விசாரணை இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல, இது sub-judice அல்ல. இருப்பினும் சில தவறான தகவல்கள் வெளியே பரப்பப்படுவதால் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையைப் பற்றி மட்டும் இந்த அவையில் நான் உண்மை நிலவரத்தை, உண்மை விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலில், தி.மு.க. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பரசுராமன் கைது பற்றிய குறிப்பை, சென்னை மாநகரக் காவல் துறை கமிஷனரிடமிருந்து பெறப்பட்ட குறிப்பை, இங்கே இந்த அவையில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

சென்னை, கே.கே. நகர், இரண்டாவது செக்டார், 8-வது தெரு, 68 ஆம் இலக்கமிட்ட வீட்டில் வசிக்கும் திரு. டி.ஜி. தெய்வசிகாமணி என்கிற நபர், 26-5-2001 ஆம் தேதியன்று மாலை 7-00 மணியளவில், ஆர். 7, கே.கே. நகர் காவல் நிலையத்தில் தி.மு.க. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பரசுராமன், முன்னாள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. தா. கிருட்டிணன், சென்னை மாநகர மேயர், திரு. மு.க. ஸ்டாலின், அண்ணா நகர் ரமேஷ் மற்றும் பத்து நபர்கள் மீது ஒரு புகார் கொடுத்துள்ளார். திரு. டி.ஜி. தெய்வசிகாமணி கொடுத்த புகாரில், பின்வரும் விவரங்கள் கூறப்பட்டுள்ளன:

முற்பகல் 10-10

திரு. டி.ஜி. தெய்வசிகாமணி என்பவர் Paver Finish Road Builders Association மற்றும் Civil Engineering Contractor என்ற நிறுவனத்தில் தலைவராக உள்ளார். இவர் சென்னை, கே.கே. நகர், இரண்டாவது செக்டார், பிளாட் எண் 68 என்ற இலக்கமிட்ட வீட்டில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். மேற்கூறிய நிறுவனம், சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெடுஞ்சாலை சீரமைப்பு

மற்றும் சாலை அமைத்தல் போன்ற பெரிய contract-களை எடுத்து நடத்தி வருகின்றது. இதுபோல, பழைய மகாபலிபுரம் சாலையில் contract எடுப்பதற்காக மேற்கூறிய திரு. தெய்வசிகாமணி தனது உறவினரும், திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கே. பரசுராமன் என்பவரை நாடியுள்ளார். அவரும் சென்னை நகர மேயர் திரு. மு.க. ஸ்டாலினுக்கு நெருங்கிய தொடர்புடைய திரு. ரமேஷ் என்பவரை அறிமுகப்படுத்தியுள்ளார். திரு. ரமேஷ் மேற்படி contract-ஐப் பெற்றுத் தரவேண்டுமாயின், அந்தக் contract-ன் மொத்தத் தொகையில் 5 சதவீதம் commission-ஆகத் தரவேண்டுமென்றும், இந்தத் தொகை தனக்கும், சென்னை நகர மேயர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் அப்போதைய அமைச்சர் திரு. தா. கிருட்டிணனுக்கும் போய்ச் சேர வேண்டுமென்றும் நிபந்தனையிட, அதற்கு திரு. தெய்வசிகாமணி ஒப்புக்கொண்டு 7 கோடி ரூபாயைப் பல்வேறு தேதிகளில் மேற்கூறிய ரமேஷின் மூலம் சென்னை நகர மேயர் மு.க. ஸ்டாலின் மற்றும் அப்போதைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. தா. கிருட்டிணன் ஆகியோருக்குக் கொடுத்துள்ளார். இதனால், இந்தப் பெரிய contract இவருக்குக் கொடுக்கப்பட்டது. இதற்கிடையில் முன்னாள் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் பரசுராமன், தனக்கும் ஒரு பகுதி commission தரவேண்டுமென்று தெய்வசிகாமணியிடம் வற்புறுத்திக் கேட்க, அவரும் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 5 இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளார். இதில் திருப்தி அடையாத பரசுராமன் ஒரு கோடி ரூபாய் தரவேண்டுமென்று வற்புறுத்தவே, தெய்வசிகாமணி தன்னால் மிகப் பெரிய தொகையைத் தர இயலாது என்றும், வேண்டுமானால் ரமேஷிடம் கேட்டு வாங்கிக் கொள்ளுமாறும் கூறினார். இதனால் ஆத்திரமடைந்த பரசுராமன், பல்வேறு சந்தர்ப்பங்களில் தெய்வசிகாமணியைத் தொலைபேசி மூலமாகவும், ரௌடிகளை விட்டும் மிரட்டி வந்துள்ளார்.

26-5-2001 அன்று காலை சுமார் 7-00 மணியளவில் தன் வீட்டு அலுவலக அறையில் தெய்வசிகாமணி இருக்கும்போது, சுமார் 10 நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்து அவரை மிரட்டி, அவர்கள் வந்த டி.என்.09-ஜி.59 என்ற பதிவு எண் கொண்ட ஜீப்பில் கடத்திச் சென்றுள்ளனர். செல்லும்போது, பல இடங்களில் டாட்டா சுமோ வாகனம், அம்பாசிடர் கார் மற்றும் ஜீப் ஆகிய வாகனங்களில் மாறிமாறிக் கடத்திச் சென்றுள்ளனர். கடைசியாக மகாபலிபுரம் வரை சென்று, திரும்பவும் மாலை 3-00 மணியளவில் அவரது வீட்டின் அருகே அவரைக் கொண்டுவந்து இறக்கி உள்ளனர். இதற்கிடையில் பரசுராமன்,



தெய்வசிகாமணியின் மூத்த மகன் மற்றும் அவரது மைத்துனர் ஆகியோருடன் பேரம் பேசி 45.00 இலட்சம் ரூபாய் தருமாறு கூறியுள்ளார்.

அந்தப் புகாரைப் பெற்றுக்கொண்ட கே.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர், ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 7, 8 மற்றும் 9, அத்துடன் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 362, 365, 385 மற்றும் 506 (2) பிரிவுகளில் கே.கே. நகர் காவல் நிலைய குற்ற எண் 973/2001-ல் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். இந்தப் புகாரில் பூர்வாங்க ஆதாரம் இருப்பதைக் கண்டறிந்த காவல் துறையினர் 26-5-2001 அன்று இரவு திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பரசுராமனைக் கைது செய்து 27-5-2001 அன்று நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி உள்ளனர். மேலும், புலன் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது; மற்ற எதிரிகளும் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நான் தெரிவித்த விவரங்களிலிருந்தே இது sub-judice அல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிந்து கொள்ளலாம்.

முற்பகல் 10-15

அடுத்து, சட்டப் பேரவை முன்னாள் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி மீது பதிவு செய்யப்பட்ட மூன்று வழக்குகள் பற்றிய குறிப்பை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

முதல் வழக்கு, சென்ற தமிழக பொதுத் தேர்தல் வாக்குப் பதிவு நாளான 10-5-2001 மாலை சுமார் 6-00 மணியளவில் திரு. டேவிட் என்பவர் ஜி-1, வேப்பேரி காவல் நிலையத்தில் அளித்த புகாரில், அன்று பிற்பகல் சுமார் 2-30 மணியளவில், தான் எழும்பூர் தொகுதி வேட்பாளர் திரு. ஜான் பாண்டியன் அவர்களின் தேர்தல் முகவராக ஈ.வி.கே. சம்பத் சாலையிலுள்ள அகர்வால் வித்யாலயா பள்ளியிலுள்ள வாக்குச் சாவடியில் பணியில் ஈடுபட்டிருந்தபோது, எழும்பூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் பெயர் தெரியாத சில நபர்கள், தான் திரு. ஜான் பாண்டியனின் தேர்தல் முகவராகப் பணி செய்வதைக் கண்டித்து, அவருடன் தகராறு செய்து, ஆயுதங்களால் தாக்கி, வெட்டுக் காயத்தை ஏற்படுத்தினர் எனக் கூறி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருந்தார்.

திரு. டேவிட் என்பவரின் புகாரின்மீது G-1 வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண் 960/2001-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 323 மற்றும் 324-ன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர்,

மேற்கூறிய வழக்கானது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 323, 324, 307 மற்றும் 506 (2)-க்கு மாற்றப்பட்டது. புகாரை விசாரித்த காவல் துறையினர் அடிப்படை ஆதாரம் இருப்பதையறிந்து திரு. பரிதி இளம்வழுதி மற்றும் பெரம்பூர் கே. கந்தன் ஆகியோரை 17-5-2001 அன்று பிற்பகல் 2-30 மணியளவில் இராஜா அண்ணாமலைபுரம், கிரீன்வேஸ் சாலை, பொதிகை இல்லத்தின் பிரதான நுழைவுவாயில் அருகில் கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி, வேலூர் மத்திய சிறைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதர குற்றவாளிகளான தனசிங், அறிவுநிதி, இராமலிங்கம் என்கிற பொய்யாமொழி, கிருஷ்ணமூர்த்தி என்கிற பூட்டோ, முனியாண்டி, நித்யா, இளங்கோவன் மற்றும் இளஞ்செழியன் ஆகியோர் 21-5-2001 அன்று எழும்பூர் 5-வது நடுவர் நீதிமன்றம் முன்பு சரணடைந்து, பின் நீதிமன்றக் காவலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். திரு. பரிதி இளம்வழுதி தாக்கல் செய்த ஜாமீன் மனு 23-5-2001 அன்று சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 1-வது அமர்வு நீதிபதியால் அவர் சென்னையில் தங்கி சென்னை 14-வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தினமும் ஆஜராகி கையொப்பமிட வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது. குற்றவாளி கந்தன் மற்றும் 8 குற்றவாளிகளின் ஜாமீன் மனுவானது 23-5-2001 அன்று முதன்மை அமர்வு நீதிபதி முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவர்கள் சேலத்தில் தங்கி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தினந்தோறும் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது.

திரு. பரிதி இளம்வழுதியின் ஜாமீன் விடுதலையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்ட மனு, 24-5-2001 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருக்கு வழங்கப்பட்ட ஜாமீன் உத்தரவு தடை செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இரண்டாவது வழக்கு. கடந்த 7-3-2001 அன்று இரவு 10-40 மணிக்கு சேத்துப்பட்டு டாக்டர் அம்பேத்கர் திடலில் அ.இ.அ.தி.மு.க. பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது திரு. பரிதி இளம்வழுதி மற்றும் மாநகராட்சி உறுப்பினர் மலர் ஆகியோரது தூண்டுதலின் பேரில் பெயர் விலாசம் தெரிந்த 42 நபர்கள், கையில் கத்தி, சைக்கிள் செயின் மற்றும் சவுக்குக் கட்டை போன்ற ஆயுதங்களுடன் பொதுக் கூட்டத்தில் கலாட்டா செய்து தாக்கி, 17 நபர்களுக்குக் காயமும், சுமார் 30,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதமும் விளைவித்துள்ளனர். இது தொடர்பாக சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் குற்ற எண் 341/2001-ல்



இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 336, 324, 427, 506 (2) மற்றும் 307-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கில் சம்பந்தப்பட்ட மோகன், உதயா, முனியன், மூர்த்தி மற்றும் உதயகுமார் ஆகிய 5 நபர்கள் 8-3-2001 அன்றும், திலக்குமார் என்பவர் 16-5-2001 அன்றும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். வேப்பேரி காவல் நிலைய குற்ற எண் 960/2001, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 323, 324 மற்றும் 307-ன்படி கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு இருந்த திரு. பரிதி இளம்வழுதி மற்றும் சேத்துப்பட்டு காவல் நிலையக் குற்ற எண் 440/2001-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148 மற்றும் 506 (2)-ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் சரணடைந்து நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த எழிலரசன் ஆகிய இருவரையும் Production Warrant மூலம் 28-5-2001 அன்று சென்னை 14-வது பெருநகர குற்றவியல் நடுவர் முன்பு இந்த வழக்கில் ஆஜர் செய்யப்பட்டபோது நடுவர் அவர்கள் 29-5-2001 வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

முற்பகல் 10-20

மூன்றாவது வழக்கு. கடந்த 10-5-2001 அன்று பகல் 2-15 மணி அளவில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், சேத்துப்பட்டு, ஜகன்னாதபுரம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி எண்கள் 72, 73, 74 மற்றும் 75 அருகில் வேட்பாளர் திரு. ஜான் பாண்டியனுக்கு தேர்தல் பணி செய்து கொண்டிருந்தவர்களுக்காக திருநாவுக்கரசு என்பவர் பகல் உணவு கொண்டு வரும்போது திரு. பரிதி இளம்வழுதி மற்றும் பெயர் தெரிந்த 6 நபர்கள் மேற்படி நபரைத் தாக்கி அவர் கையில் கொண்டுவந்த உணவைக் கீழே தட்டிவிட்டனர். இதுசம்பந்தமாக சேத்துப்பட்டு காவல் நிலைய குற்ற எண் 435/2001, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 341, 323 மற்றும் 324-ன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த திரு. பரிதி இளம்வழுதி மற்றும் எழிலரசன் ஆகிய இருவரும் Production Warrant மூலம் 28-5-2001 அன்று சென்னை 14-வது பெருநகர குற்றவியல் நடுவர் முன்பு ஆஜர் செய்யப்பட்டனர். முதல் வழக்கான வேப்பேரி குற்ற வழக்கில் திரு. பரிதி இளம்வழுதி சென்னையில் தங்கி இருக்கவேண்டும் என்றும், மற்ற 9 நபர்கள் சேலத்தில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரிலும் ஜாமீனில் விட பிரதான முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பாக மேல்முறையீடு

செய்யப்பட்டு, திரு. பரிதி இளம்வழுதிக்கு மட்டும் கொடுக்கப்பட்ட ஜாமீன் உத்தரவு 29-5-2001 வரை தடை செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வழக்கான சேத்துப்பட்டு காவல் நிலைய குற்ற எண் 341/2001-ல் எதிரிகள் தாக்கல் செய்த ஜாமீன் கேட்கும் மனு இன்று, அதாவது 29-5-2001 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது வழக்கான சேத்துப்பட்டு காவல் நிலைய குற்ற எண் 435/2001-ல் எதிரிகளுக்கு, வழக்கின் சட்டப் பிரிவுகள் ஜாமீனில் விடக்கூடிய பிரிவுகள். ஆகையால் நீதிமன்றம் அவர்களை 28-5-2001 அன்று ஜாமீனில் விட உத்தரவிட்டது. 28-5-2001 அன்று திரு. பரிதி இளம்வழுதி வேலூரிலிருந்து கொண்டுவரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின் இன்று வழக்கு வரவிருப்பதால், சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அடுத்தபடியாக, முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியின் சகோதரர் திரு. தேவராஜ் கைது செய்யப்பட்டது பற்றிய குறிப்பை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு சென்னை ஷெனாய் நகர் 4-வது குறுக்குத் தெரு, கதவு இலக்கம் 35 என்ற முகவரியில் கிளை அலுவலகத்தைக் கொண்டுள்ள S.M. Industrial Suppliers என்ற தனியார் நிறுவனத்தின் பிரதிநிதியாக அலுவல் புரியும் திரு. ஜகதீஷ் என்கிற ஜகதீஷ் புனாமியா என்பவர் 26-5-2001 அன்று, K-3 அமைந்தகரை காவல் நிலையத்தில் முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியின் சகோதரர் தேவராஜ் மற்றும் ஆனந்த் ஆகியோர் மீது ஒரு புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகாரில் திரு. ஜகதீஷ் என்கிற ஜகதீஷ் புனாமியா மேற்கூறிய S.M. Industrial Suppliers என்ற தனியார் நிறுவனத்தின் சென்னை கிளையின் பிரதிநிதியாகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இந்த நிறுவனத்தின் கிளை அலுவலகம் அமைந்துள்ள ஷெனாய் நகரில் தங்கி வசித்து வருகிறார் என்றும், இந்த நிறுவனத்தின் இரும்புத் துகள்களை, scrap iron-ஐ பல நிறுவனங்களிலிருந்து ஏலம் எடுக்கும் தொழில் செய்து வருகின்றனர் என்றும், தாம்பரத்தில் உள்ள M.E.P.Z. வளாகத்திலும், அதாவது Madras Export Processing Zone-லும் இரும்புத் துகள்களை ஏலம் எடுத்து அவற்றை 25-1-2001 முதல் அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், அந்தப் புகாரில் சூளைமேடு, லோகநாதன் நகர், இரண்டாவது தெரு, இலக்கம் எண் 26 என்ற



முகவரியில் Sakthi Traders என்ற நிறுவனத்தை நடத்திவரும் முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியின் சகோதரர் தேவராஜ் என்பவரும், கே.ஏ. ஆனந்த் என்பவரும் திரு. ஜகதீஷிடம் தாங்கள்தான் M.E.P.Z. வளாகத்தில் இரும்புத் துகள்கள் ஏலம் எடுக்கத் தகுதி பெற்றவர்கள் என்றும் வேறு எவரும் ஏலம் எடுக்கக்கூடாது என்றும் அச்சுறுத்தியும், அவ்வாறு மீறி ஏலம் எடுத்தால், அச்செயலுக்காக, ஒரு டன்னுக்கு 400 ரூபாய் வீதம் தங்களுக்கு மாமூல் தரவேண்டும் என்றும் அடிக்கடி மிரட்டியுள்ளனர் என்றும் கூறப்பட்டிருந்தது.

முற்பகல் 10-25

மேலும், திரு. ஜகதீஷ், மேற்கூறிய நபர்களின் மிரட்டலுக்குப் பணியாததால் தேவராஜ் மற்றும் அவரது ஆட்கள் 13-4-2001 அன்று மதுரவாயலிலுள்ள கிடங்கிற்கும் 14-04-2001 அன்று ஷெனாய் நகரிலுள்ள திரு. ஜகதீஷின் இருப்பிடத்திற்கும் சென்று மிரட்டியுள்ளனர். இதுசம்பந்தமாகவும் திரு. ஜகதீஷ் சென்னை அமைந்தகரை காவல் நிலையம் மற்றும் செங்கை கிழக்கு மாவட்டத்திலுள்ள மதுரவாயல் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்துள்ளார். இச்சூழ்நிலையில் 25-5-2001 அன்று மாலை 5-30 மணி அளவில் முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியின் சகோதரர் தேவராஜ், கே.ஏ. ஆனந்த், ஜானகிராமன் மற்றும் 6 நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் டி.என். 25 டி-250 என்ற எண்ணுள்ள வெள்ளை நிற டாட்டா சுமோ காரில் ஷெனாய் நகரிலுள்ள திரு. ஜகதீஷின் கிளை அலுவலகத்திற்குச் சென்று அங்கேயிருந்த அவரது ஓட்டுநர் மற்றும் வேலையாட்களிடமும் எப்படியும் எந்த நேரத்திலும் திரு. ஜகதீஷைக் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியுள்ளனர். இதுசம்பந்தமாக திரு. ஜகதீஷ் அளித்த புகாரின்பேரில் கே. 3, அமைந்தகரை காவல் நிலைய குற்ற எண் 479/2001 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 506 (2)-ன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் மேற்கூறிய சம்பவங்கள் உண்மை என்று தெரிய வந்ததன்பேரில் 26-5-2001 அன்று இரவு முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியின் சகோதரர் தேவராஜ் கைது செய்யப்பட்டு 27-5-2001 அன்று காலை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார். தலைமறைவாக உள்ள இதர எதிரிகளையும் அவர்கள் பயன்படுத்திய வாகனம் மற்றும் ஆயுதங்களையும் கைப்பற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விளக்கம் சொல்ல எனக்கு அவசியம் இல்லை; இந்த மன்றத்தை அதற்கு நான் பயன்படுத்துவது முறையுமல்ல. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே திரு. பரிதி இளம்வழுதி வழக்கைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது அவர் ஜாமீனில் வெளியிலே வருவதற்கு விண்ணப்பித்து, ஒரு நீதிமன்றத்திலே அதற்கு அனுமதி வழங்கப்பட்டு, மறுபடியும் அரசு மேல்முறையீடு செய்து-அரசு என்றால் காவல் துறை மேல்முறையீடு செய்து-அதன் காரணமாக அந்த bail stay செய்யப்பட்டு, இன்றையதினம் அந்த வழக்கு வரவிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் இங்கே படித்தார்கள். முதலமைச்சராக இருந்தாலும், உள் துறை அமைச்சராக இருந்தாலும் காவல் துறை தருகிற தகவலைத்தான் இங்கே தரமுடியும் என்பது நீண்ட காலமாக சட்டமன்றத்தில் அந்தப் பொறுப்பிலே உள்ளவர்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிற ஓர் உண்மை. காவல் துறை சொல்வதே உண்மையா அல்லவா என்பது நீதிமன்றத்திலேதான் நிரூபிக்கப்பட முடியும். காவல் துறை சொல்லி, bail வழங்கக்கூடாது என்பதற்காக வாதாடி, அதற்காக அவர்கள் கொடுத்த விவரங்கள் நியாயமா, அல்லவா, அது உண்மையா அல்லவா என்பதும் நீதிமன்றத்திலேதான் மறுபடியும் விளக்கப்பட்டு அவர்கள் தீர்ப்புச் சொல்ல முடியும். ஆகவே திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது உள்ள வழக்கு உண்மையா, அல்லவா என்று நீதிமன்றத்தாலே சொல்லப்பட வேண்டிய நிலையில் bail வழங்கப்பட்ட நிலையில், மறுபடியும் அந்த bail வழங்கப்பட்டதற்குத் தற்காலிக தடைதான் விதிக்கப்பட்டிருக்கிறது. It is only stayed. ஆகவே, அப்படி வழங்கப்பட்டிருக்கிற நிலையில் அந்த விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே எடுத்து வைப்பதன் மூலமாக, அரசினுடைய நோக்கம் ஒன்று அதிலே உள்ளூர இடம்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்தச் செய்தி காவல் துறை தருகிற செய்திதான் என்று சொன்னாலும்கூட, இந்த விவரங்களை எல்லாம் இந்த அவையிலே எடுத்து வைக்கிறபோது மறைமுகமாக அதனுடைய உள்ளீடாக அரசினுடைய நோக்கம் ஒன்று அதிலே இடம்பெற நேரிடுகிறது என்பதை நான் குறிப்பிட்டு bail வழங்குகிற நிலையிலே அது sub-judice ஆகிவிடுகிறது என்பதைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன். Bail வழங்கப்பட்டபோது நீதிமன்றத்தினாலேதான் nature of the crime என்னவென்று பார்த்து, அதற்கு bail வழங்கலாமா கூடாதா, என்ற கேள்வி எழுப்பப்பட்டு ஒரு முறை bail வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால் மேல்முறையீட்டிலே தடை செய்யப்பட்டிருக்கிறதே தவிர, bail நீக்கம்





செய்யப்படவில்லை. ஆகவே, இன்று விசாரணைக்கு வருகிறது. எனவே, அதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அப்படி ஒரு கருத்து இந்த அவையிலே இடம்பெறுவது நியாயமா அல்லது இதை மரபாக ஏற்றுக்கொள்ளலாமா என்பதைத் தாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

மற்ற வழக்குகள் குறித்து நான் விவரமாகப் பேசுவது நியாயமல்ல என்று கருதுகிறேன். ஏனென்றால், அது எப்படியும் நீதிமன்றத்தில்தான் வரவிருக்கிறது. காவல் துறை, புகார் அடிப்படையில் சிலரைக் கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறது. அந்தப் புகார் உண்மையல்ல என்று சொல்ல அந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு, புகார் யார் மீது சொல்லப்பட்டதோ அவர்களுக்கு, இயல்பான உரிமை இருக்கிறது. அவர், அதை அரசு என்று சொல்கிறபோது, காவல் துறை செய்கிற காரியத்தைத்தான் குறிப்பிடுகிறார். காவல் துறை செய்கிற எல்லாக் காரியத்திற்கும் அரசு பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. காவல் துறை செய்கிற காரியங்கள் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டால் தான் காவல் துறை செய்தது சரி என்று நமக்கு விளங்கும். ஆகவே, அந்தச் சூழ்நிலையில் நான் அதிகமாக இதுபற்றிப் பேசியோ விளக்கியோ நீதிமன்றப் பிரச்சினையிலே தலையிடக் கூடாது என்ற அடிப்படையில் குற்றச்சாட்டு யார்மீது சொல்லப்பட்டாலும் நீதிமன்றத்திலே அவர்கள் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டு எல்லாம் உண்மை என்று அவர்கள் நம்பி ஒருவேளை சொல்வார்களேயானால், குற்றச்சாட்டுக்கள் எல்லாம் உண்மையாவது இல்லை என்பதும் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நீதிமன்றத்தாலே முடிவு சொல்லப்பட்டால்கூட, நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீதிமன்றத்தால் சொல்லப்பட்ட முடிவைக்கூட ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய ஆளும் கட்சியின் சார்பாக தான் சொல்ல வேண்டிய பதில் என்ற கருத்தில் சொல்லியிருப்பார்களேயானால் அதற்காக என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எழுப்பிய ஒரு கேள்விக்கு முதலமைச்சர் என்ற முறையில் காவல் துறைக்கு, உள்

துறை இலாகாவிற்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர் என்ற முறையில் பதில் சொல்வது என் கடமையாகும். அப்படிப் பதில் சொல்லப்படுகின்றபோது காவல் துறையிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையை இந்த அவையில் சமர்ப்பித்தேன். இதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்நோக்கம் கற்பிப்பது வருந்தத்தக்கதாகும், ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது மரபைப் பற்றிப் பேசினார்கள். காவல் துறை சொல்வது எல்லாம் உண்மை என்று ஏற்றுக்கொண்டு இந்த அவையில் வெளியிட்டால் அதை ஒரு மரபாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பினார். 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை இந்த அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்த அவையின் மூலமாக நாட்டு மக்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். இப்போது நான் என் சொந்தக் கருத்தைச் சொல்லவில்லை. காவல் துறையினர் கொடுத்த அறிக்கையை நான் நம்புகிறேனா, இல்லையா என்பது முக்கியமல்ல. காவல் துறையினர் கொடுத்த அறிக்கையை அப்படியே இங்கே வாசித்தேன். ஆனால், 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு சம்பவம் நடைபெற்றது. சென்னையில் வசிக்கும் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டிவி. வெங்கட்ராமன் தாக்கப்பட்டார். சில ரௌடிகள் அவரது இல்லத்திற்குள் அதிகாலை நேரத்தில் புகுந்து திரு. வெங்கட்ராமன் அவர்களையும் அவரது மகனையும் தாக்கி அடித்துப் போட்டுவிட்டார்கள். அவர்கள் பலத்த காயமுற்றார்கள். சில மணி நேரத்திற்குள் இந்த அவை கூடியது. இந்த அவையில் அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் காவல் துறை விசாரணைக்கு உத்தரவிடாமலேயே, காவல் துறையிடமிருந்து எந்த அறிக்கையையும் பெறாமலேயே அவராகவே ஒரு முடிவுக்கு வந்து, இந்த அவையில் நின்றுகொண்டு, இந்தத் தாக்குதலுக்குக் காரணம் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாதான்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ரௌடிகளை ஏவிவிட்டது ஜெயலலிதாதான், அவர்தான் அவர்களை அடிக்கச் செய்தார் என்று முதலமைச்சர், காவல் துறைக்கு பொறுப்பேற்றிருந்த முதலமைச்சர் இந்த அவையில் நின்றுகொண்டு கூறினார். அப்போது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நிச்சயமாக இங்கே இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்காக இந்தத் தாக்குதல் நடந்தது என்பதற்கும், முன்னாள் முதலமைச்சர் ஒரு காரணத்தை தானே இந்த அவையில் தெரிவித்தார். என்மீது நிலக்கரி இறக்குமதி செய்ததில் ஊழல் செய்துவிட்டதாக ஒரு



வழக்கு புனையப்பட்டது, அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் திரு. வெங்கட்ராமன் அவர்களின் இல்லத்திலிருந்ததாகவும், அந்த ஆவணங்களைக் கைப்பற்றுவதற்காகவே ஒரு ரௌடிக் கும்பலை நான் ஏவிவிட்டதாகவும் முதலமைச்சர் வாய் கூசாமல் இந்த அவையில் நின்று தெரிவித்தார். எந்த அடிப்படையில் தெரிவித்தார்? காவல் துறையிடமிருந்து எந்த அறிக்கையையும் பெறவில்லை, விசாரணைக்கும் உத்தரவிடவில்லை.

*முற்பகல் 10-35*

இதை எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் எனக்குத் தெரிவித்ததும், நான் பதறிப்போய் திரு. வெங்கட்ராமன் அவர்கள் இல்லத்திற்குச் சென்று நலம் விசாரித்தேன். உடனே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். ஜெயலலிதா ஒரு நடிகை. அவருக்கு நடிக்கவா சொல்லித்தர வேண்டும், காலையிலே ஆட்களை அனுப்பி நன்றாக அடித்துப் போட்டுவிட்டு, மாலையிலே சென்று நலம் விசாரிக்கிறார் என்று இவர் அறிக்கை விட்டார். அதன் பிறகுதான் காவல் துறை விசாரணையைத் தொடங்கியது. இந்த அவையில் நின்றுகொண்டு முதலமைச்சர் பேசிய பிறகும், அவைக்கு வெளியே முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி என்னைத் தாக்கி அறிக்கை விட்ட பிறகுதான் காவல் துறை விசாரணையே தொடங்கப்பட்டது.

காவல் துறை விசாரணை நடத்திய பின்னர், என்ன அறிக்கை கொடுத்தார்கள் தெரியுமா? இந்த வழக்குக்கும், ஜெயலலிதாவுக்கும் சம்பந்தமே இல்லை, தனிப்பட்ட சொத்துத் தகராறு காரணமாக சிலபேர் திரு. வெங்கட்ராமன் அவர்களையும், அவருடைய மகனையும் அடித்துப் போட்டார்கள். அந்த ரௌடிக் கும்பலுக்குத் தலைமை தாங்கியவர் ஒரு தி.மு.க. ரௌடி என்று காவல் துறையினர் அறிக்கை கொடுத்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நினைவூட்டுகிறேன். இதைச் சரியான மரபு என்று அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்ச்சைக்குள் நான் நுழைய விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன ஒரு பிரச்சினையைக் கருத்திலேகொள்ள

வேண்டும். நானும் எதிர் வரிசையிலேதான் வீற்றிருக்கிறேன். ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையிலே ஒரு வழக்கு sub-judice ஆகிவிடுமா என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். குற்றங்கள் பதிவு செய்யப்படாத நிலையில் குற்றச்சாட்டுப் பட்டியல் தாக்கல் செய்யப்படாத நிலையில் எந்த வழக்கும் sub-judice ஆகாது, (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக sub-judice ஆகாது, வெறும் ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நாம் சில தகவல்களைக் கோரும்போது, இந்த அரசாங்கமாக இருந்தாலும், எந்த அரசாங்கமாக இருந்தாலும், அவையிலே அந்தத் தகவல்களைத் தரவேண்டியதுதான் முறையே தவிர, sub-judice என்று கூறி நிச்சயமாகத் தப்பித்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய ஆட்சேபணையெல்லாம் திரு. ஸ்டாலின், திரு. தேவராஜ், திரு. பரிதி இளம்வழுதி இவர்கள்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள், அதைப்பற்றிய விவரங்கள் இந்த அவைக் குறிப்புகளில் பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் என்று கருதுகிறேன். அதற்காக அவர் கவலைப்படுகிறார். அதற்காகத்தான் இந்த ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதை நானும் ஆமோதிக்கிறேன். ஒரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்புதான் அது sub-judice ஆகிறது. இங்கே இன்னும் அந்த நிலை எட்டப்படவில்லை. ஆகவே, எந்தத் தவறும் நிகழ்ந்துவிடவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்க வேண்டிய விளக்கங்களைக் கேட்டுவிட்டார்கள். சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லிவிட்டார்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்மிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பற்றி குறிப்பிட்டு ஒரு சில தகவல்களை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் செய்திகள்....





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் குறிப்பிடவில்லை. காவல் துறை கொடுத்த குறிப்பைப் படித்தார்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நேற்று மாலைப் பத்திரிகையில் வந்த செய்தியை நான் பார்த்ததற்குப் பிறகு, நானாகவே அதற்குரிய விளக்கத்தை இன்று காலையில் எல்லாப் பத்திரிகைகளுக்கும் தந்திருக்கிறேன். எனவே, என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்தவரையிலே நான் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்றுதான் அந்த விளக்கத்திலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். எனவே, நான் நீதிமன்றத்திற்கு எந்த நேரத்திற்கும் வருவதற்குத் தயார். நான் வாய்தா வாங்குவதற்கும், நீதிமன்றத்திற்குப் பயந்து வராமல் ஏதேனும் காரணத்தைச் சொல்வதற்கும், நிச்சயமாக இருக்கமாட்டேன். எந்த நேரத்திலும் அந்த வழக்கைச் சந்திப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாத்திரம் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னுடைய தம்பி தேவராஜனுடைய கைது பற்றிக் குறிப்பிட்ட காரணத்தினாலே ஒன்றை மட்டும் நான் இங்கே அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். ஜகதீஷ் என்பவர் பெங்களூரைச் சார்ந்தவர். இங்கே கிளை அலுவலகம் வைத்துக்கொண்டு ஒரு புகார் கொடுத்திருக்கிறார். அதிலே என்னுடைய தம்பி மற்றும் ஆனந்த் என்பவருடன் சேர்ந்து ஒரு டன்னுக்கு 400 ரூபாய் கேட்டு மிரட்டினார் என்றெல்லாம் சொல்லி காவல் துறை அறிக்கை கொடுத்ததை இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்த ஜகதீஷ் என்பவர் ஜனவரி மாதம் நடந்ததாகச் சொல்லியிருக்கின்ற அந்தப் புகாரில் எங்கேயாவது என்னுடைய தம்பி பெயர் இடம் பெற்றிருக்கிறதா? திடீரென்று அ.இ.அ.தி.மு.க. ஆளும் கட்சி ஆனதற்குப் பிறகு 25 ஆம் தேதி ஒரு புகார் மனு கொடுக்கிறார் என்றால் அந்தப் புகார் மனுவைக் கொடுக்கச் செய்தவர்கள் யார் என்பதை எல்லாம் நீதிமன்றத்திலே நாங்கள் எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறோம். இப்படிப்பட்ட வழக்குகளைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அஞ்சாது, அஞ்சப்போவதும் இல்லை.

முற்பகல் 10-40

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், திரு. ஸ்டாலின் அவர்கள் மீதும், திரு. தேவராஜன் அவர்கள் மீதும் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பொறுத்தவரையில் நான் என்னுடைய சொந்தக் கருத்து என்று எதையும் இங்கே சொல்லவில்லை. அப்படி நான் சொல்ல விரும்பவும் இல்லை. சொல்ல முற்படவும் இல்லை. அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள்மீது கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த விவரத்தை அறிய விரும்புவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இங்கே தெரிவித்தார். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் என்ற முறையில், காவல் துறை இலாகாவுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் என்ற முறையில் காவல் துறையினர் எனக்குக் கொடுத்த அறிக்கைகளை ஒரு வார்த்தைகூடக் கூட்டாமல் அப்படியே வாசித்தேன். என்னுடைய சொந்தக் கருத்தை இந்த நிமிடம் வரையில் நான் தெரிவிக்கவில்லை. ஆனால், இவர்களுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் இந்த அவையில் காவல் துறையினரிடமிருந்து எந்த அறிக்கையும் பெறாமலேயே சில குற்றச்சாட்டுக்களைக் கூறி, தாமாகவே தன்னுடைய சொந்தக் கருத்தையும் இங்கே தெரிவித்திருக்கிறாரே அதையெல்லாம் இவர்கள் அந்தக் காலகட்டத்தில் எப்படி ஏற்றுக்கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கு காவல் துறை அறிக்கையை நான் வாசித்தாலே பொறுத்துக்கொள்ள முடியாத இவர்களுக்கு அன்றையதினம் அபாண்டமாக என்மீது இந்த அவையில் முன்னாள் முதலமைச்சர் பழி சுமத்தியபோது அது தவறு என்று தெரியவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) திடீரென்று ஒரு நாள், 1997 ஆம் ஆண்டு பத்திரிகைகளில் ஒரு புகைப்படம் வெளிவந்தது. அந்தப் புகைப்படத்தில் என் அருகில் ராஜீவ் காந்தி கொலையாளிகள் சிவராசனும், தாணுவும் நின்றிருப்பதாக அந்தப் பத்திரிகைகளில் caption போடப்பட்டிருந்தது. அவ்வளவுதான் சில மணி நேரத்திற்குள் இந்த அவை கூடும்போது, அந்தப் பத்திரிகையை ஆதாரமாக வைத்து முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேயே ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது என்றார். அதாவது, காவல் துறை விசாரணைக்கு உத்தரவிடவில்லை. அந்தப் புகைப்படம் உண்மையிலேயே சிவராசன், தாணுவினுடைய புகைப்படம்தானா என்று விசாரிக்கவில்லை. எந்த விவரத்தையும் காவல் துறையினரிடம் கேட்டுப் பெறவில்லை. காவல் துறை எந்த அறிக்கையும் கொடுக்கவில்லை. அவராகவே, ஒரு



பத்திரிகையில் வந்த புகைப்படத்தை ஆதாரமாக இந்த அவையிலே காட்டி, அது உண்மைதான் என்று அவரே ஊர்ஜிதப்படுத்தி, அதைப்பற்றித் தன்னுடைய கருத்தையும் சொல்லி, ஜெயலலிதா பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர்கள் ராஜீவ் காந்தியின் கொலையாளிகள்தான், சிவராசனும், தாணுவும்தான், இதனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேயே ஒரு திருப்புமுனை ஏற்பட்டிருக்கிறது என்று சொந்தக் கருத்தைச் சொன்னாரே, இவையெல்லாம் ஆரோக்கியமான முன்மாதிரி, நல்ல மரபு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர்களுடைய கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காக அதே தவறை நாங்கள் செய்யவில்லை, செய்யவும் மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் நானாக எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. நானாக என் சொந்தக் கருத்தைச் சொல்லவில்லை. ஏற்கெனவே, காவல் துறையினர் பதிவு செய்த வழக்குகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை பற்றிய விவரத்தை ஒரு மாண்புமிகு உறுப்பினர் அறிய வேண்டுமென்று கூறி இங்கே கோரிக்கை வைத்தார். அதற்குக் காவல் துறை கொடுத்த அறிக்கையை மட்டும் நான் இங்கே வாசித்திருக்கிறேன். ஒரு ஆரோக்கியமான முன்மாதிரியை இந்த அவையில் ஏற்படுத்தியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

*(டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். கேட்டு அதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். முந்தைய சட்டமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை முதலமைச்சர் அவர்கள் நினைவுபடுத்தினார்கள். அது பற்றிய விளக்கங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவிப்பார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொன்னதுபோல அப்படித்தான் நடைபெற்றது என்பதை உறுதி செய்ய முடியுமானால், அந்த மரபு தவறு. ஆனால், நான் என்னுடைய நினைவிலே இருந்துதான் இப்போது சொல்லுகிறேன். ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர்களுடைய புகைப்படமாக ஒரு படம் காட்டப்பட்டபோது, இதுதான் அவர்களுடைய உண்மையான படம்

* **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களாகச் செய்தித்தாள்களிலே நமது சென்னை மாநகரிலே பல தனிப்பட்டவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற செய்தியோடு இன்றைக்கு சில முக்கிய பிரமுகர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அரசியல் காரணங்களால் பழிவாங்கக்கூடிய நிகழ்ச்சிகள் என்பதை இன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் பத்திரிகைகளிலும் மக்களிடத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, நான் இந்த அரசு எப்படிப்பட்ட அரசாக இருக்கிறது என்று எண்ணுகிறேன் என்றால்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்பதுபோல, துன்பத்தைச் செய்தவர்களுக்கும் நன்மைகளைச் செய்ய வேண்டும்; அதுதான் மனித உணர்வு என்று கருதுகிற ஓர் அரசாகவே (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைக் கருதுகிறேன். இருந்தாலும், தனிப்பட்டவர்கள் பாதிக்கப்படுகின்றபோது, அந்தப் பாதிக்கப்பட்டவர்கள் அரசினுடைய உதவியை நாடும்போது, காவல் துறையினுடைய உதவியை நாடி எங்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து இருக்கிறது என்று சொல்லுகின்ற நேரத்தில், அந்தத் தனி மனிதர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது ஓர் அரசினுடைய கடமை என்பதையும் நான் உணர்கிறேன். அந்தக் கடமை உணர்வோடுதான் இன்றைக்கு தேர்தல் நேரத்திலே ஆயுதங்களோடு, அதுவும் மிகக் கடுமையாக கொலை முயற்சியிலே ஈடுபடுகின்ற ஆயுதங்களோடு, பல பேர்களைத் தாக்குகின்ற முயற்சியோடு இருந்த காரணத்திற்காக முன்னாள் சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்றும், அதுபோல் ஒரு வட மாநிலத்தைச் சேர்ந்த ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்கள், நீங்கள் உரையை முடித்துவிடுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ கேட்க விரும்புகிறார்கள்.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, Sub-judice ஆக இருக்கிற விஷயங்கள் குறித்து ஒரு சார்பான கருத்து எதுவும் இந்த அவையில் பேசக் கூடாது என்பது அவை மரபு. வழக்குமன்றத்திலே இருக்கிற பிரச்சினைகளில் ஒரு சார்பான கருத்து



இங்கே பேசப்பட்டு, இன்னொரு சார்பான கருத்து எடுத்து வைக்கப்படுமானால், அது நீதிமன்ற உரிமைக்கு மாறுபட்டது என்பது ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே தாங்கள் சிந்தித்து, இப்படிப்பட்டவற்றை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சிலர் செய்த சில செய்கைகளுக்காக புகார்கள் கூறப்பட்டு, காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த விஷயங்கள் Sub-judice என்கிறார். ஆனால், அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த வழக்குகளைப் பற்றி வெளியே அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்; பொது மக்களிடத்திலே தவறான தகவல்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் இங்கே எழுப்புகின்ற கேள்வி, காவல் துறை எடுத்த நடவடிக்கை பற்றியதாகும். காவல் துறை எடுத்த நடவடிக்கைபற்றி இந்த அவையில் தெரிவிப்பதில், உண்மை விவரங்களைத் தெரிவிப்பதில், எந்தத் தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்கள் சுருக்கமாக இந்தப் பிரச்சினையை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையில் வெளியாகிய செய்திகளையும், காவல் துறை, அவர்கள் மீது தொடுத்திருக்கிற வழக்குகளையும் ஆதாரமாக வைத்துத்தான் பேசுகிறேனே தவிர, தவறான முறையிலே அவையிலே பேசக்கூடாதவற்றை நான் பேசவில்லை. மிகக் கவனத்தோடுதான் பேசுகிறேன். தனிப்பட்ட மனிதர்களுடைய உரிமைகள் காக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தோடும், இந்த அரசுக்குப் பழிவாங்க வேண்டுமென்கிற எண்ணம் இல்லாத நிலையிலும், தெய்வசிகாமணி என்பவர், பரசுராமன் என்கிற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்னைக் கடத்திச் சென்றார்கள் என்று சொல்லி புகார் கூறியதன் எதிரொலியாக அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதுபோல தேவராஜன்

என்று என்னால் சொல்ல முடியாது என்ற கருத்தையும்அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் இங்கே சொன்னதாக என்னுடைய நினைவு. இன்னும் சொல்லப்போனால், (குறுக்கீடுகள்) இந்த அவையில் அந்தக் கருத்தும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே...

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; அந்தச் செய்திகள் எல்லாம் பத்திரிகையிலே வந்தன. அப்போது முதலமைச்சர் அவர்கள், அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது, 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது. ஆக, இப்போதுதான் ராஜீவ் காந்தி கொலையாளிகள் யாரால் தூண்டப்பட்டார்கள் என்று தெரிகிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய கவனத்திற்காக இதை நான் கொண்டு வருகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து அவருக்குச் சொல்லப்பட்டபோது, அவர் சொன்ன கருத்தாக இருந்தாலும், அதற்குப் பின்னர் அது தவறு என்பதை அவரே வெளியிட்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி இதுதான். காவல் துறையை விசாரணை நடத்தச் சொல்லி உத்தரவிடாமல், காவல் துறையிடமிருந்து எந்த அறிக்கையும் பெறாமல், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தானாக தன் சொந்தக் கருத்தை இந்த அவையிலே கூறி எப்படிப் பதிவு செய்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். திரு. பொன்முடி, நீங்கள் உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அறிந்துகொள்ள வேண்டிய பல செய்திகளுக்கு அறிக்கை பெற முடிவதில்லை. உடனடியாகச் சொல்ல நேரிட்ட செய்திகள் தவறாகக்கூட...



**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் அப்படி என்ன அவசரம் வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் காலையில் பத்திரிகையில் ஒரு புகைப்படம் வந்தது. உடனேயே 2 மணி நேரத்திற்குள் இந்த அவைக்கு அந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்று என்ன அவசரம் வந்தது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிழற்படம் சாட்சியம் ஆகாது. அதுவும் graphics வந்துவிட்ட நிலையில், நிச்சயம் அது சாட்சியம் ஆகாது. It can, at best, be treated as M.O. i.e. Material Object. அப்படி இருக்கையிலே ஒரு முதலமைச்சர் பத்திரிகையிலே வந்த நிழற்படத்தை வைத்துக் கொண்டு அதை சாட்சியமாகக் கருதி குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார் என்று இன்றைய முதல்வர் சொல்வது நிச்சயமாக இந்த அவைக்குறிப்பில் இடம்பெறும்போது, அவர் எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டில் அன்றையதினம் சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினர் அந்தப் புகைப்படத்தைக் காண்பித்து ஒரு கேள்வியைக் கேட்டிருந்தாலுங்கூட, கேட்கச் சொல்லித் தூண்டப்பட்டிருந்தாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) அவராகக் கேட்டிருந்தாலும் சரி, அந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, முதலமைச்சர் நியாயமாக நடந்துகொள்பவர் என்றால், இதைப்பற்றி காவல் துறையை விசாரிக்கச் சொல்கிறேன். விசாரணை நடத்திய பிறகு, அறிக்கையைப் பெற்று இந்த அவைக்கு உண்மையைத் தருகிறேன் என்றல்லவா சொல்லி இருக்கவேண்டும்? மாறாக, காவல் துறை விசாரணைக்கே உத்தரவிடாமல், தன் சொந்தக் கருத்தை இங்கே எப்படித் தெரிவித்தார்? அது எப்படி நியாயமாகும்? எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். திரு. பொன்முடி அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்க வேண்டிய விளக்கங்களைக் கேட்டு விட்டார்கள்.

இதிலே தொடர்புடையவர் என்கிற காரணத்தினால் திரு. ஸ்டாலின் அவர்களையும் நான் பேச அனுமதித்தேன். இதிலே உங்களுக்குச் சம்பந்தம்

இல்லை. எதிர்க்கட்சித் தலைவரும் உங்களுடைய கட்சியினுடைய தலைவர். அவர் சொல்லவேண்டிய விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்.

அதேபோல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய சகோதரர் இதிலே சம்பந்தப்பட்டார் என்கிற காரணத்திற்காக அவர்களும் சொல்ல வேண்டிய விளக்கங்களையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். ..துவாக இருந்தாலும், நீதிமன்றத்திலே சந்திப்போம் என்று திரு. ஸ்டாலின் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் கேட்டது பழைய சட்டமன்றத்திலே இப்படியெல்லாம் காவல் துறை அறிக்கை பெறாமலேயே சில நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டனவே, டி.வி. வெங்கட்ராமனை நான் தாக்கினேன் என்று சட்டமன்றத்திலே சொல்லப்பட்டதே, அப்போதைய அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி அவர்கள் அறிக்கை வெளியிட்டார்களே என்றெல்லாம் கேட்டார்கள். அதற்காக விளக்கங்களை அவர்கள் சொல்வதாக இருந்தால், சொலவதைப்பற்றி எனக்கு ஒன்றும் கவலையில்லை. இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் செல்லிவிட்டார்கள். வேறு ஒன்றும் இப்போது பிரச்சினையே கிடையாது. காவல் துறையினுடைய அறிக்கையை அவர்கள் வாசித்தார்கள்.

திரு. சந்தானம்தான் இதுகுறித்து, பழிவாங்கும் நடவடிக்கை என்கிற வகையிலே பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதே என்று கேட்டார்கள். அதற்குரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். ஆகவே, இனிமேல் இதிலே ஒன்றும் பிரச்சினைக்கு இடம் இல்லை. இனிமேல் மற்ற நிகழ்ச்சிகளுக்கு நாம் போகலாம். திரு. பொன்முடி அவர்களுக்கு நான் தெரிவிப்பது, காலையில் நான் சொன்ன திருக்குறள்தான் நினைவுக்கு வருகிறது.

> "பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
> பிற்பகல் தாமே வரும்".

விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.ஆர். சுந்தரம், அவர் சொன்னவுடனே நீங்கள் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றும் இன்று கேட்கப்பட்டது போல்தான் இவரும் தூண்டப்பட்டாரா என்று எங்களுக்குத் தெரியாது. இதேபோல்தான் ஒருவர் எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து ஒரு படத்தைக் காண்பித்துக் கேட்டார்கள். கேட்டதற்குப் பிறகு தமிழ் மாநில காங்கிரஸ்





கட்சியிலிருந்தவர்கள் கேட்டார்கள். கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கிறேன் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்போது விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் சொன்னதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு). திரு. சுந்தரம் அவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

முற்பகல் 10-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.......

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தன்னிச்சையாகக் கருத்தைச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். முதல்வர் அவர்கள் கருத்தைச் சொன்ன பிறகும் அங்கே அப்போது அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி கருத்தைச் சொன்ன பிறகும், காவல் துறை அதற்கு எதிர்ப்பாக அறிக்கை வழங்கியிருக்கிறது என்று சொன்னால், கலைஞர் ஆட்சியில் காவல் துறை நடுநிலையோடு செயல்பட்டது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் என்ன உருட்டல் மிரட்டல் இருந்தாலும் அந்த வழக்குகளில் என்னைச் சேர்க்க முடியவில்லை என்பதால்தான் காவல் துறையினர் உண்மையான அறிக்கையைக் கொடுத்தார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையிலே நான் இருந்த காரணத்தினால் ஒன்றை நான் உங்களுக்கு இந்த அவையின் மூலமாக நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அந்த நேரத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள்மீது அந்த அரசு பல பொய் வழக்குகளைப் போட்டிருந்தது. வழக்குகள் எல்லாம்

நீதிமன்றத்திலே இருந்தன. வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கும்போது இப்போது பேசலாமா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்கின்றார். அந்தக் காலகட்டத்தில் புரட்சித் தலைவி மீது பல வழக்குகள் இருந்த நேரத்தில் இந்தச் சட்டமன்றத்திலே பல ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தவறு செய்திருக்கின்றார்கள்; அவருக்குத் தண்டனை கொடுங்கள்; அவரைச் சிறைக்கு அனுப்புங்கள் என்று அவர்களே ஒரு நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளைப்போல இந்தச் சட்டமன்றத்திலே பேசிய குறிப்புகள் எல்லாம் இங்கே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பழைய சட்டமன்றக் குறிப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். பழைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்மீது தனிப்பட்ட முறையிலே நான் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன். ஆனால், சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக, ஒருவர் மீது வேண்டுமென்றே குற்றங்களைச் சுமத்தி, 'ஊழல் செய்தார்; 1,000 கோடி ரூபாய் ஊழல்; 2,000 கோடி ரூபாய் ஊழல்;' என்று இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து பேசப்பட்டிருக்கிறது. சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் நச்சுக் கொடியைப் போலவே அது பரவியிருக்கிறது. அவற்றையெல்லாம் நீக்க வேண்டுமென்றால்கூட, நீக்குவது மிகச் சிரமம். அந்த அளவிற்குப் பேசப்பட்டிருக்கிறது. அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் நல்ல மரபுகள் அல்ல. அந்த மரபுகளை இனிமேல் நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். நிச்சயமாக இனிமேல் நல்ல மரபுகளை நான் கடைபிடிக்கத் தயாராக இருக்கிறேன். பழைய சட்டமன்றத்திலே அந்த மரபுகளைத் தூக்கியெறிந்த நிகழ்ச்சிகளை இப்போதும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினை இத்தோடு முடிகிறது.

## 2. அறிவிப்பு

### கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கு துறையினர் ஏழு நாட்களுக்குள் பதிலளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அனுமதிக்கப்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் குறித்த பதில்களைத் தொடர்புடைய செயலகத் துறைகள் பேரவை விதிகளுக்கேற்ப ஏழு நாட்களுக்குள் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். முதலிலே திரு. இரா. திருமாவளவன் அவர்கள்.

*** திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம், எளிய மக்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்படும்போதுதான் இங்கே சமத்துவத்தைப் படைத்திட முடியும் என்கிற நம்பிக்கையோடு பாடாற்றிய புரட்சியாளர் அம்பேத்கர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர் ஆகியோருக்கு முதலில் எனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் கண்ணியத்தின் காவலராக விளங்குகிற எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், இதர அனைத்துக் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையின் உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மங்களூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய வெற்றிக்காகப் பாடாற்றிய எனது கூட்டணியின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இதர தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த அவையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணதாசன் பாட்டு எழுதி, எம்.எஸ். விஸ்வநாதன் இசையமைத்து, டி.எம். சௌந்தரராசன் பாடிய பாடலை எம்.ஜி.ஆர். பாட்டு, சிவாஜி பாட்டு என்று சொல்வதுபோல, நிதித் துறைச் செயலாளரால் எழுதப்பட்டு, முதல்வரால் வழங்கப்பட்டு, ஆளுநரால் படிக்கப்பட்ட உரையை ஆளுநர் உரை என்று நாம் இந்த அவையிலே அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 10-55*

அந்த ஆளுநர் உரை இந்த அரசு எதிர்காலத்தில் என்னென்ன செய்யப்போகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிற ஓர் உரையாக

அமைந்திருக்கிறது. அந்த உரையில் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்ட வேண்டுமென்று நான் எண்ணுகிறபோது, நேற்று முதல்வர் அவர்கள் அளித்த விளக்கத்தையடுத்து, ஆளுநரைப் பாராட்டுவதா, முதல்வரைப் பாராட்டுவதா, நிதித் துறைச் செயலாளரைப் பாராட்டுவதா என்று எனக்குக் குழப்பம் வருகிறது. ஆக, இந்த அறிக்கை முதல்வர் அவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்றே நான் நம்பி, முதல்வர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

அதிலுள்ள மிக முக்கியமான சிறப்பு அம்சம்; ஊரகப் பள்ளிகளில் படித்துவிட்டு, தொழில் கல்வி பயில வேண்டுமென்று விரும்புகிறவர்கள் வாய்ப்புப் பெற வேண்டுமென்ற வகையிலே 15 சதவிகித இட ஒதுக்கீடாக இருந்ததை 25 சதவிகித இடஒதுக்கீடாக உயர்த்தியுள்ளதை நெஞ்சாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஊரகப் பள்ளிகள் என்று சேர்க்கிறபோது ஏராளமான ஆதிதிராவிட நலப் பள்ளிகள், சீர் மரபினருக்கான பள்ளிகள் சேர்க்கப்படாமல் விடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதில் கவனம் செலுத்தி அத்தகைய ஊரகப் பள்ளிகள் எவை எவை என அடையாளம் காணுவதிலே தீவிர கவனம் செலுத்தினால்தான் முறையாக, உண்மையாக பயன் அடைய வேண்டியவர்கள் பயன் அடைய முடியும் என்கிற கருத்தை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிற் கல்வி பயில்கிற மாணவர்கள், குறிப்பாக ஆதிதிராவிட, பழங்குடியின, சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அந்தக் கல்லூரிகளில் சேருகின்றபோது கட்டணம் கட்ட முடியாமல் பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடுகிற ஒரு சூழல் நிலவுகிறது. இதைப் போக்குவதற்காக மராட்டிய அரசு இத்தகைய மாணவர்கள் 10 சதவிகிதம் மட்டுமே கட்டணம் செலுத்தினால் போதும் என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது, விதியைக் கொண்டு வந்திருக்கிறது. மராட்டிய அரசு கொண்டு வந்திருப்பதைப் போலவே தமிழக அரசும் அத்தகைய தொழிற் கல்வியைப் படிக்க விரும்பும் மாணவர்கள், அதாவது Payment seat-ஆக இருந்தாலும் சரி, free seat-ஆக இருந்தாலும் சரி, அவற்றின் கட்டணங்களைச் செலுத்துகிறபோது ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் அந்தக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் படிப்பைப் பாதியிலே நிறுத்திவிடுகிற அவலம் ஏற்படாமல் இருக்க 10 சதவிகிதம் மட்டுமே கட்டணம் செலுத்தினால் போதும் என்கிற வகையிலே ஒரு விதியைக் கொண்டு வந்தால் அது இன்னும் பாராட்டுக்குரியதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து, 69 சதவிகித ஒதுக்கீட்டைப் பாதுகாக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்று ஆளுநர் உரையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 69 சதவிகிதத்தைப் பாதுகாப்பதற்காக அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று முயற்சிக்கிற இந்த அரசு, ஏற்கெனவே மத்திய அரசால் 1995-லே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தை, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும், இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் பதவி உயர்விலே இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிற அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்கிற கருத்தையும் இந்த இடத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக பாராட்டுகிற ஒரு அம்சமாக நான் குறிப்பிட விரும்புவது, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்கிற திட்டம் ஆகும். உள்ளபடியே அந்தத் திட்டத்தை வரவேற்கக்கூடிய ஒரு திட்டமாக நான் கருதுகிறேன், பாராட்டுகிறேன்; வீடில்லாமல் இங்கே இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக வாழும் மக்கள் அவதிப்படுகிறார்கள். அப்படி வாழும் மக்கள் அனைவருக்கும் சாதி, மதம் பாராமல் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்கிற அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமேயானால் அது வெறும் அறிவிப்பாக இல்லாமல் நடைமுறைக்கு வருமேயானால் அதைவிட ஒரு சிறப்பு வேறு எதுவும் இருக்க முடியாது. ஆகவே அதை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் பேசுகின்றபோது ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் அரசு வேலைவாய்ப்புகளில் பதவி உயர்வில்கூட இடஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்; அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இங்கே தெரிவித்தார். அவர் கொள்கைப் பிடிப்பு உள்ளவர் என்பதை இந்தக் கோரிக்கை காட்டுகிறது. இத்தகைய கொள்கைப் பிடிப்புடைய மாண்புமிகு திரு. திருமாவளவன் அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில், முந்தைய அரசு ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் அரசுப் பதவிகளில் பதவி உயர்வு கொடுப்பதற்காகவே பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண் 44-ஐ இரத்துச் செய்த தி.மு.க.வினரோடு (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிக் கூட்டணி

வைத்துக்கொண்டார் என்பது புரியவில்லை. அப்போது இந்தக் கொள்கையை அவர் விட்டுவிட்டாரா? அந்தக் கொள்கைக்கு இப்போது மீண்டும் புதிதாக உயிரூட்டி இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை எண் 44-ஐப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது உண்மை. எந்த அடிப்படையிலே பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர் உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதி ஒருவர் இப்படித் தீர்ப்பு வழங்கியிருக்கிறார் என்று சொல்லி, அந்த ஆணை அரிசன நலத் துறை அமைச்சராக இருந்தவர் மூலம் பிறப்பிக்கப்பட்டது. பிறகு அதிகாரிகள் மட்டத்தில் அது விவாதிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றம் அப்படி ஓர் ஆணையே பிறப்பிக்கவில்லை என்று அமைச்சரவைக் கூட்டத்திற்குக் கொண்டுவந்து, இப்படி ஒரு தவறு நடந்துவிட்டது என்று தெரிவித்ததற்குப் பிறகு, என்ன செய்யலாம் என்று அதிகாரிகள் மட்டத்திலே கலந்துபேசி, அன்றைய எதிர்க்கட்சித் தலைவரிடத்திலேயும் இதுபற்றி எடுத்துச்சொல்லி, மக்கள் தலைவர் மூப்பனாரிடத்திலும் இதுகுறித்துக் கலந்துபேசி, உச்சநீதிமன்றத்திலே பிறப்பிக்கப்படாத ஒரு ஆணையை, தமிழக அரசு பிறப்பிக்குமானால் எதிர்காலத்திலே Contempt of Court என்று வந்து, அதனாலே மீண்டும் அரசுக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதால்தான் அன்று அந்த ஆணை மாற்றியமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறுவது உண்மையானால், உச்ச நீதிமன்றம் கொடுத்த ஆணையே தவறு, அதைச் செயல்படுத்தத் தேவையில்லை என்று முந்தைய அரசு கருதியது உண்மையானால் நாங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிறகு அந்த அரசாணை எண் 44-ஐ எப்படிச் செயல்படுத்துவது என்பது குறித்து பரிந்துரைக்க நீதிபதி சாமிதுரை commission-ஐ ஏன் அமைத்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஏன் அமைத்தார்கள் என்றால், இதுகுறித்து எதிர்க்கட்சிகளும் மற்றும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அந்த



அரசாங்கத்தின்மீது பழியைச் சுமத்தினார்கள். ஏதோ நாங்கள் தவறு செய்துவிட்டது போன்ற ஒரு பிரச்சாரத்தைச் செய்தார்கள். அதைப்பற்றி நாட்டுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டதே தவிர, ஒரு கமிஷன் அமைக்கப்பட்டதாலேயே நாங்கள் ஏதோ தவறு செய்துவிட்டு, மறுபடியும் அதை நிவர்த்தி செய்ய commission அமைக்கப்பட்டதாக அர்த்தம் அல்ல. அதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும், அந்தக் கோப்புகளை வரவழைத்துப் பார்த்து உண்மைகள் என்ன என்று நாட்டுக்குச் சொல்லுங்கள். நாங்கள் தவறு செய்திருந்தால் அதைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ குழப்பத்தில் பதில் சொல்கிறார் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையிலே நடைபெற்ற விவகாரம் என்பதால் எல்லோருக்கும் தெளிவாக நினைவில் இருக்கிறது. முந்தைய அரசு G.O.Ms.No.44-ஐ ஆதிதிராவிட நலத் துறையில் பிறப்பித்தது. அது குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பதவி உயர்வுகள் அளிப்பது குறித்த G.O. ஆகும். அதை இரத்துச் செய்துவிட்டார்கள். அதைப்பற்றி, அதைச் செயல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி எதிர்க்கட்சிகள் எல்லாம் மாபெரும் போராட்டத்தில் இறங்கின. நாங்களும் போராடினோம். அந்த நேரத்தில் எதிர்ப்பு வலுக்கிறது என்று தெரிந்ததும் இந்த G.O.No.44-ஐ இரத்துச் செய்தது மாபெரும் தவறு என்று உணர்ந்த பிறகு, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், அந்த G.O.No.44-ல் உள்ள provision -ஐ அதில் உள்ள அம்சங்களை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வருவது, அதை எப்படிச் செயல்படுத்துவது என்பதற்கான வழிமுறைகளை அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காகவே நீதிபதி சாமிதுரை commission-ஐ அமைத்தார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்வதற்காகக் கேட்கிறேன். நாங்கள் பிறப்பித்த அந்த 44 ஆம் எண் அரசாணை இந்த அரசாலே நிச்சயமாகப் பின்பற்றப்படப் போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த G.O. விலே உள்ள அம்சங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக மாபெரும் போராட்டமே நடத்தியவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குக் கொள்கையில் எந்தக் குழப்பமும் இல்லை. ஆனால் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள்தான் குழம்பிப் போய் இருக்கிறார்கள். சற்றுமுன்தான் அவர் சொன்னார், ஏன் அதனை இரத்துச் செய்தோம் என்பதற்கான காரணத்தைப் பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலே சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் வந்து இந்த அரசாணையே தவறானது; இதைச் செயல்படுத்தக்கூடாது என்று தெரிவித்ததாகவும், அதற்காகத்தான் அதை இரத்துச் செய்ததாகவும் அவர் தெரிவித்தார். அதைச் செயல்படுத்தக்கூடாது. உச்ச நீதிமன்றம் அளித்த ஆணையே தவறு என்பது உண்மையானால் மீண்டும் அதை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்காகப் பரிந்துரைக்க எதற்காக ஒரு commission-ஐ அவர்கள் அமைத்தார்கள்?

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத் துறைச் செயலாளர் அமைச்சரவையில் வந்து அப்படியொரு விளக்கத்தைச் சொன்னார் என்று நான் சொல்லவில்லை. அதிகாரிகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்த அரசாணை தவறு. அந்த 44 ஆம் எண் அரசாணையை நாம் அமல்படுத்தினால் (குறுக்கீடு) ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் அப்படிச் சொன்னதாகவே இருக்கட்டும். அந்த அரசாணையே தவறு என்று அரசு அதிகாரிகள் சொன்னார்கள்; அப்படித் தவறாகப் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை மீண்டும் எப்படிச் செயல்படுத்துவது என்பதற்காக, எதற்காக ஒரு விசாரணைக் commission-ஐ அமைத்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. செ.கு. தமிழரசன்:** தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டச் சிக்கல்...





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசாணை எண் 44-லே சட்டச் சிக்கல் இருந்ததால், அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; அரசாணை எண் 44-லே இருக்கிற அந்தக் கொள்கையை கலைஞர் அரசு ஏற்றுக்கொண்டது. (குறுக்கீடு) அம்மா, தயவுசெய்து, அதிலே இருந்த...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் ஏன் அதனை இரத்து செய்தார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, அதைத்தான் நீதிபதி அவர்கள்...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அரசாணை எண் 44-லே இருக்கக்கூடிய குளறுபடிகளை, அதனால் தலித் மக்களுக்குப் பதவி உயர்விலே இருக்கக்கூடிய சங்கடங்கள் என்ன என்பதையெல்லாம், தலித், பழங்குடியின மக்களுக்கு இருக்கக்கூடிய குறைபாடுகளையெல்லாம் எல்லாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்து வைத்தோம், கடுமையாக விவாதித்தோம். அதிலே குறைகள் இருப்பதை அன்றைய அரசு உணரக்கூடிய சூழ்நிலையிலே இருந்திருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அந்த விவாதத்தில் ஒரு முடிவு எடுத்திருக்க வேண்டும். சட்டப்பேரவை உறுப்பினர்கள் விவாதித்த அந்த விவாதத்திற்குச் சரியான, எதிர்பார்த்த எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அப்படி முறையான பதில் சொல்லாத நிலையிலே, இன்று அதைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுவதிலே அர்த்தம் இல்லை; அதைப்பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லது என்பதை நான் கடுமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. திருமாவளவனிடத்திலேதான்

அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். 'தென்னை மரத்திலே தேள் கொட்டி, பனை மரத்திலே நெறி கட்டிய' கதையாக நீங்கள் அதிலே விளக்கம் சொன்னதிலேதான் இவ்வளவு சிக்கல் வந்தது. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. திரு. திருமாவளவன் அவர்கள் அந்த நேரத்திலே அந்த ஆட்சியை, இந்த G.O. சம்பந்தப்பட்ட வகையிலே கண்டித்தே பேசியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கேட்டது, அப்படிப்பட்ட கட்சியோடு எப்படிப்போய் கூட்டுச் சேர்ந்தீர்கள் என்று. திரு. திருமாவளவன் விளக்கம் சொல்லுங்கள், பேச்சைத் தொடருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சிலே குறுக்கிடலாமா, நான் தெரியாமல் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சிலே குறுக்கிடக்கூடாது. திரு. திருமாவளவன் அவர்கள் தேர்ந்த, தெளிந்த ஆற்றல் மிக்க பேச்சாளர். ஆகவே, அவருக்கு ஒரு விளக்கத்திற்காகத்தான் சொன்னார்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன் உட்காருங்கள், அவர்கள் பேசட்டும்.

*முற்பகல் 11-10*

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை எண் 44-ல் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, அதை மீண்டும் கட்டாயம் கொண்டு வருவோம் என்கிற உறுதியைத் தந்திருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணி அமைக்கிறபோது யார், யார் எந்த அடிப்படையிலே கூட்டணி அமைக்கிறார்கள் என்பது அந்தந்தச் சூழலைப் பொறுத்து முடிவு செய்யப்படுகிறது.

அரசாணை எண் 44-ஐ இரத்துச் செய்ததைக் கண்டித்திருக்கிறேன். அதிலே எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதிலிருந்து நான் பின்வாங்கவும் இல்லை. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்து அதோடு நான் கூட்டுச் சேர்ந்திருந்தால் நான்



கொள்கையிலிருந்து பிறழ்ந்து விட்டேன் என்று பொருள். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இல்லை. ஆகவே, இதை நடைமுறைப்படுத்த வேண்டியது, நிறைவேற்ற வேண்டியது ஆளும் கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்; அதனுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே ஒரு கோரிக்கையாக நான் முன்வைக்கிறேன். மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. 69 சதவிகிதம் முடியாது, 50 சதவிகிதம்தான் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிற சூழலில் அதையே திருத்துவோம் என்று நாம் போராடுகிறபோது, அந்த உணர்வை நாம் பெற்றிருக்கிறபோது, இல்லாத ஒன்றைப் பெறுவதற்காக நாம் முயற்சி செய்கிறபோது, இருக்கிற ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாமே என்கிற கருத்தைத்தான் நான் இங்கே முன்வைத்தேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் பாராட்ட வேண்டிய ஓர் அம்சம்; கல்லூரி, பள்ளி மாணவிகளுக்கு, ஆதிதிராவிட பழங்குடியின பள்ளி மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது; பாராட்டுகின்றேன். மேலும், பள்ளி மாணவிகள், மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான வசதி உள்ள விடுதிகள் இங்கே பெருமளவில் இல்லை; போதிய அளவில் இல்லை. ஆகவே அத்தகைய விடுதிகளைப் பெருக்குவதும், அதை நல்ல முறையிலே பராமரிப்பதும் மாணவிகளுக்கும், மாணவர்களுக்கும் நாம் செய்கிற மிகப் பெரிய நலனாக அமையும், பயனாக அமையும். எனவே, விடுதிகளைப் பெருக்கவும், அதைப் பராமரிப்பதிலே கவனம் செலுத்தவும், அரசு கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு விவாதமாக நேற்றுகூட அவையிலே பேசப்பட்டது உழவர் சந்தையாகும். நலிந்த நூற்பாலைகளை மீண்டும் இயங்க வைப்போம்; சீர்கேடு அடைந்த சத்துணவு மையங்களை மீண்டும் சீரமைப்போம் என்று உறுதி தந்திருக்கிற அரசு, செயல்படாத உழவர் சந்தைகளையும் செயல்பட வைப்போம் என்று உறுதி தந்தால் அது ஆரோக்கியமானதாக இருக்கும். செயல்படாத உழவர் சந்தைகளை மட்டும் மூடுவோம், ஆனால் இயங்காத நூற்பாலைகளை இயங்க வைப்போம், சீர்கேடு அடைந்த சத்துணவுக்

[திரு. இரா. திருமாவளவன்] [2001 மே 29

கூடங்களை, அந்த மையங்களைச் சீரமைப்போம் என்று சொல்லுகிற அரசு, உழவர் சந்தைகளை மூட வேண்டாம்; அதைச் செயல்படுத்துவதற்கான முயற்சியிலே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணா நதி நீர் வரவில்லை என்பதை மிக உறுதிபட எடுத்துச் சொன்னார்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிருஷ்ணா நதி நீர் இன்னும் வரவேயில்லை; அந்தக் கால்வாய்ப் பணிகள் இன்னும் நிறைவேறவே இல்லை என்பதால், அந்தக் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை வேண்டாம் என்று நாம் ஊற்றி மூடிவிடப் போவதில்லை. அதை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முயற்சிக்கிறோமோ, அதைப்போல உழவர் சந்தைகளினால் உழவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே அதைச் சீரமைப்பதுதான் ஓர் ஆக்கபூர்வமான பணியாக இருக்கும் என்று நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, இந்தத் திட்டம் தோல்வி அடைந்த திட்டம், இந்தத் திட்டத்தால் விவசாயிகளுக்குப் பயன் இல்லை, நுகர்வோருக்குப் பயன் இல்லை என்று முற்றிலுமாகவே திட்டத்தை எதிர்த்து ஒரு கருத்து அதிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது(குறுக்கீடு) கன்னிப் பேச்சிலே குறுக்கிட வேண்டாம் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லி முடித்த பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தால் நன்றியுடையவனாக இருப்பேன். ஆகவே, அந்த உழவர் சந்தைகளைச் சீரமைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். அதைச் செயல்பட வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதற்கு அடுத்தபடியாக, இந்தச் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கிற பிரச்சினை என்னவென்று நம் எல்லோருக்கும் தெரியும். அடிப்படைப் பிரச்சினைகளாகக் கருதுகிற குடிநீர்ப் பிரச்சினைகள், சாலை வசதிப் பிரச்சினைகள், வீட்டு மனைப் பிரச்சினைகள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றில் எல்லாம் கவனம் செலுத்தி இந்த உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், மக்களுக்கிடையே ஒற்றுமையைச் சீர்குலைக்கக்கூடிய, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் போன்றவர்களால் ஒழிக்கப்பட வேண்டும் என்று போராடப்பட்ட பிரச்சினையான சாதியப் பிரச்சினையை கவனத்தில் கொண்டு, தீண்டாமை ஒழிப்புப் பற்றி எந்த ஒரு குறிப்பையும்



2001 மே 29] [திரு. இரா. திருமாவளவன்]

ஆளுநர் உரையில் பதிவு செய்யவில்லை என்கிற கருத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தச் சமூகத்தில் இன்றைக்கு மக்களிடையே அமைதியின்மையும், ஒற்றுமைச் சீர்குலைவும் இருப்பதற்குக் காரணம் சாதியப் பிரச்சினைகள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதற்காகத்தான் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற மகத்தான தலைவர்கள் சாதி ஒழிப்புக் களத்திலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அப்படிப்பட்ட அந்த சாதிய பிரச்சினைகளை ஒழிப்பது, தீர்ப்பது, தீண்டாமையை ஒழிப்பதில் கவனம் செலுத்துவது, இரட்டைக் குவளை முறையை முற்றிலுமாக அகற்றுவது, இன்னும் பல கிராமங்களிலே தீண்டாமையைக் கடைபிடிக்கிற அந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவது, வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவது என்பதிலே அரசு கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும். அதைப்பற்றிய எந்தக் குறிப்பும் ஆளுநர் உரையில் இல்லையே என்கின்ற வருத்தத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த ஒருசில மணி நேரத்திலேயே தமிழகம் எங்கும் பரவலாக தாழ்த்தப்பட்ட, சேரிவாழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தலைதூக்கி இருக்கின்றன என்பதை பத்திரிகைகளிலே படித்து அனைத்து உறுப்பினர்களும் அறிந்திருப்பார்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன்.

புரட்சியாளர் அம்பேத்கர் அனைத்து சமுதாய மக்களுக்காகவும் போராடியவர். சமூகநீதியின் மூலம் சமத்துவத்தைப் படைக்க வேண்டுமென்று விரும்பியவர். அரசமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்தவர். உலக அறிஞர்கள் ஆறு பேரில் ஒருவர் என்கிற பெருமையைப் பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு மகத்தான தலைவரின் திருவுருவச் சிலைகளுக்கு ** கொடுமை இன்னும் இந்த மண்ணில் நீடிக்கிறதே, அதற்குப் போட்டியாக இதரத் தலைவர்கள் மீதும் சாணி அடிப்பது, கல் வீசுவது, ** என்கிற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கிறதே, இவற்றைத் தடுக்கவும், வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தவும், இந்த அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒருவன் தவறு செய்தால், அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒருவன்மீது புகார் கொடுக்க வேண்டுமென்கிற எண்ணம் இல்லாமல், அந்த ஒருவனுக்காக, ஒரு ஊரையே, ஒரு சேரியையே கொளுத்துகிற போக்கு இன்னும் இந்த மண்ணில் நீடிக்கிறது. அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். காவல் துறையும் ஒடுக்கப்பட்டவர்களை நசுக்கியே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது என்கிற ஒரு வழிமுறையை, ஒரு formula-வைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது; அது எந்த ஆட்சியாக இருந்தாலும். ஆக, அப்படிப்பட்ட சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் புகார் மனுக்கள்கூட ஏற்றுக்கொள்ளப்படாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சேரி மக்கள் மீதான இந்த வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள்மீது திணிக்கப்படுகிற இழிவுகளைத் துடைக்கவும், தீண்டாமையை ஒழிக்கும் பணியில் கூடுதல் கவனம் செலுத்தவும் இந்த அரசு முனைய வேண்டுமென்கிற கருத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

கச்சத் தீவை மீட்போம், மீனவர்களைக் காப்போம், அதைப்போல முல்லை-பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்துவோம், காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என்கிற செய்திகள் எல்லாம் மேலோட்டமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. முல்லை-பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்த அனுமதிக்க மாட்டோம் என்று கேரள அரசு உடனடியாக அறிவித்திருக்கிறது. கச்சத் தீவை மீட்க அனுமதிக்க மாட்டோம் என்று இலங்கை மந்திரி, அதாவது, மீன் வளத் துறை அமைச்சர் மஹிந்தா சவால் விடுத்திருக்கிறார். சவால்களை எதிர்கொள்வதிலே சக்தி வாய்ந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்கள் அந்தச் சவால்களை எதிர்கொண்டு கச்சத் தீவை மீட்பாரா என்கிற கேள்வியை முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, முல்லை-பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடி அளவுக்கு உயர்த்த வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கை நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவோம், ஆந்திர அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று இந்த அறிக்கையிலே மேலோட்டமாகச் சொல்லப்பட்டிக்கிறதே தவிர, அதை எப்படித் தீவிரமாக நடைமுறைப்படுத்தப் போகிறோம் என்பது இல்லை. அதற்கான செயல் திட்டங்களை விரைவில் முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே,





இந்த ஆளுநர் உரையில் தீண்டாமை ஒழிப்பு குறித்து எந்தத் தெளிவும் இல்லை, எந்தக் குறிப்பும் இல்லை என்ற என்னுடைய வருத்தத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

விவசாயக் கூலிகள் அந்த விவசாய வேலை நேரம் போக, மீதி காலங்களில் எந்த வேலையும் இல்லாமல் வருமானத்திற்கு வழியும் இல்லாமல் கிடக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) மீனவர்கள் மீன் பிடிக்கிற காலத்தைத் தவிர இதர காலங்களில் மீனவர்களுக்கு அரசு உதவிப் பணம் வழங்குவதைப்போல, விவசாயக் கூலிகளுக்கும் விவசாயம் இல்லாத காலங்களில், அந்தப் பருவத்தில், அவர்களுக்கு என்று மூன்று மாத காலமோ, நான்கு மாத காலமோ உதவி வழங்குவது என்கிற திட்டத்தை அரசு கொண்டு வரவேண்டுமென்கிற கருத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க ஏரிகளை ஆழப்படுத்துவது, தூர் எடுப்பது என்கிற ஒரு செயல்திட்டத்தை முன்வைத்திருக்கிறது ஆளுநர் உரை. அந்தவகையிலே நான் போட்டியிட்டு வெற்றி பெற்ற மங்களூர் தொகுதியில் Wellington Reservoir என்கிற நீர்த்தேக்கத்தை உடனடியாகத் தூர் எடுப்பதற்கு, அதை ஆழப்படுத்துவதற்கு, ஏராளமான விவசாயிகள் பயனடையத்தக்க வகையிலே அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆக, இந்த ஆளுநர் உரை ஒடுக்கப்பட்டவர்களுக்காக, பின்தங்கியவர்களுக்காக, சீர்மரபினருக்காக புரட்சிகரமான திட்டங்கள் எதையும் முன்வைக்கவில்லை என்பதைப் பதிவு செய்து, இனிமேல் ஐந்தாண்டுகளில் அதில் கவனம் செலுத்துவோம், செயல்படுத்துவோம் என்கிற உறுதியை நேற்று மாண்புமிகு முதல்வர் அவையிலே தெரிவித்திருக்கிற காரணத்தினால், அந்த நம்பிக்கையோடு நான் என்னுடைய கன்னி உரையை முடிக்க விரும்புகிறேன். வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் பேசுகின்றபோது, சேரி மக்கள்மீது வன்கொடுமைகள் நிகழ்ந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டார். அதைச் சொல்வதில் தவறில்லை. ஆனால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்த உடனேயே இந்த வன்கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன; அதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்று அவர் கூறியிருப்பது

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2001 மே 29

சரியல்ல. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. வேண்டுமானால், காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறலாமே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீதும், கழக அரசின்மீதும் பழி போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமும், இன்றையதினமும் அருமைச் சகோதரர் திரு. திருமாவளவன் அவர்கள் பேசும்போது, தீண்டாமை ஒழிப்புப் பற்றிப் பேசினார். முன்னாள் அமைச்சர் திரு. சுரேஷ் ராசன் அவர்கள் மீது முன்னாள் முதல்வர் அவர்கள், அதே இயக்கத்தைச் சேர்ந்த அவர்கள் வள்ளியூர் நீதிமன்றத்திலே தீண்டாமை ஒழிப்பு மீது வழக்கு தொடர்ந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார்கள். ஆனால், 6 மாதம் கழித்து அந்த வழக்கு வாபஸ் ஆகிவிட்டது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய பேருரைக்கு நன்றி கூறுவதற்கு முன்பாக, கடந்த ஐந்தாண்டுக் காலமும் தமிழகத்தில் நயவஞ்சகர்களுடைய ஆட்சியில் நடைபெற்ற கொடுமைகளை எதிர்த்து, நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருந்த அவலங்களை எதிர்த்து, பொது மக்கள் நல்லமுறையில் வாழவேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு தனக்கு இழைத்த கொடுமைகளையெல்லாம் பொருட்டாக மதிக்காமல் ஐந்தாண்டுக் காலம் போராடி, நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்து, இன்று தமிழக மக்களால் ஏகோபித்த, ஒட்டுமொத்த வரவேற்போடு, அரியணையில் அமர்ந்திருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலில் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அடுத்ததாக, நம்பியவர்களை எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எப்போதுமே கைவிட்டதில்லை. நம்பாமல் சென்றவர்கள் இன்று பொது வாழக்கையில் ஆனாலும் சரி, தனி வாழ்க்கையில் ஆனாலும் சரி, எங்கோ மூலையில் முடங்கிக் கிடக்கிறார்கள்.



2001 மே 29] [திரு. கா.பூ. முனுசாமி]

அப்படி நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களில் ஒருவனாக இருக்கின்ற நான், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே எனக்கு வாய்ப்பளித்து, தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாகத் தேர்வு செய்த, வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், வாக்குகளைச் சேகரிக்க இரவென்றும், பகலென்றும் பாராமல், தேனீக்களைப்போல, சுறுசுறுப்பாக ஓடோடிச் செயலாற்றிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை இங்கே காணிக்கையாக்குகின்றேன்.

முற்பகல் 11-25

மேதகு ஆளுநர் உரையில், மேதகு ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த 12-வது சட்டமன்றத் தேர்தலைப் பற்றி மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாநில சட்டமன்றப் பேரவைக்கு தற்போது நடைபெற்று முடிந்துள்ள தேர்தல் பலவகையில் வரலாறு படைத்துள்ளது என்று மேதகு ஆளுநர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இம்மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை என்று சொல்கிறார்கள். இந்த ஈடு இணையில்லாத இந்த வெற்றிக்கு மூலமுதல் காரணம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி என்று மேதகு ஆளுநர் அவர்கள், இந்த உரையிலே மிகச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். இந்த வரலாற்றுச் சிறப்பை இங்கே இருக்கின்ற சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அறிவுசார்ந்த மாமன்றத்திலே மறைக்கப் பார்க்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, அவர்களுடைய தலைவராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களும் இது வரலாறு தெரியாதவர்கள் எழுதிய உரை என்று கூறியிருக்கிறார். இதற்கு நான் இங்கே விளக்கம் சொல்லியாக வேண்டும். காரணம், இந்த 12-வது சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகக் கடந்த 11 சட்டமன்றத் தேர்தல்கள்

நடைபெற்ற விதம் வேறு. இந்த 12-வது சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற விதம் வேறு. கடந்த 11-வது சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற விதம், தேர்தல் அணுகுமுறை என்பது கொள்கைகளுக்கும், கொள்கைகளுக்கும் போட்டியிருந்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஒரு அரசியல் கட்சித் தலைவரை பழி வாங்குகின்ற எண்ணம், கடந்த 11 சட்டமன்றத் தேர்தல்களில் நடைபெற்றது இல்லை. ஆனால், கடந்த 5 ஆண்டுக் காலமாக, தனிப்பட்ட முறையில் ஒரு பெண் என்றும் பார்க்காமல் அரசியல் ரீதியாக இவரை ஒழித்துவிட்டால்-நம்மை எதிர்ப்பதற்கு இந்தத் தமிழகத்தில் கட்சி இல்லை-இந்தக் கட்சி என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது புரட்சித் தலைவி. புரட்சித் தலைவி என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்-கருணாநிதி இதை நன்கு உணர்ந்து கொண்ட காரணத்தினால்-புரட்சித் தலைவியை அரசியல் ரீதியாக வெளியேற்றிவிட்டால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிடும் என்று, 5 ஆண்டுக் காலமாக பல்வேறு வழக்குகள், பல்வேறு கொடுமைகள், பல்வேறு சிறுமைகள் நடத்தப்பட்டன. ஏன் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல; உலக அரசியல் வரலாற்றில் ஒரு தனிப்பட்ட அரசியல் தலைவரை பழி வாங்கியவர், கருணாநிதியைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல பழிவாங்கப்பட்டவர், புரட்சித் தலைவியைப் போல உலக அரசியல் வரலாற்றில் வேறு யாரும் இருக்க முடியாது. அப்படி பழிவாங்கப்பட்ட ஒரு அரசியல் தலைவர், தன்னந்தனியாக நின்று, கடந்த 5 ஆண்டுக் காலமாக, ஏன் இப்போது எங்களிடத்திலே, கூட்டணியிலே இருக்கிற-வருத்தத்தோடு சொல்கிறேன், உண்மை சிலநேரங்களில் சுட்டாலும்கூட, கசப்பானாலும்கூட, உண்மைகளை இந்த மாமன்றத்திலே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்-கட்சித் தலைவர்கள்கூட, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் புரட்சித் தலைவி அவர்களைப் பல்வேறுவிதமாக விமர்சனங்கள் செய்திருக்கிறார்கள். அரசியல் காரணத்திற்காக, அரசியல் சூழ்நிலை காரணத்திற்காக, வெற்றி பெற வேண்டும், சட்டமன்றத்திலே அமர வேண்டுமென்பதற்காக, எதிரியை வீழ்த்த வேண்டும் என்பதற்காக, கூட்டணி அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, 5 ஆண்டுக் காலம் மற்ற எந்தக் கட்சித் தலைவர்களும் உறுதுணையாக இல்லாமல் தன்னந்தனியாக நின்று போராடி இருக்கிறார். அப்படி தன்னந்தனியாக நின்று போராடிய ஒரு தலைவர் எதிரிகளிடத்திலேயிருந்த, அவர்களது கூட்டணியிலேயிருந்த தலைவர்களை, தன்னிடத்திலே



ஈர்த்திருக்கிறார் என்று சொன்னால், இது ஓர் அரசியல் வரலாறு. நேற்றுவரை கடுமையாக விமர்சனம் செய்தவர்கள், இன்று போயஸ் தோட்டத்திற்கு வருகிறார்கள். அடுத்த நாள் வரவேற்கிறார்கள். இந்தத் தமிழகத்தை ஆளுவதற்கு தகுதியான ஒரு தலைவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் புரட்சித் தலைவி என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட ஒரு தலைவர், தன்னந்தனியாக போராடினார், தன்னந்தனியாகப் போராடி, ஆட்சிக் கட்டிலிலே அமருகிறார். அப்படி அமர்ந்த ஒருவரைப் பற்றி, வரலாற்றைப்பற்றிச் சொல்கிறார் ஓர் உறுப்பினர். மலை குலைந்தாலும், நிலை குலையாத தலைவர் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன் அந்த உறுப்பினரை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மலை குலைந்தாலும், நிலை குலையாத தலைவர் என்று சொல்கின்ற அந்த உறுப்பினரை நான் கேட்கிறேன், ஏன் தன்னுடைய ஜனநாயகக் கடமையை அவர் செய்யத் தவறிவிட்டார்? அதை நான் கேட்க விரும்புகிறேன். அவர் சட்டமன்றத்திற்கு வந்திருக்க வேண்டும். ஆனால் சட்டமன்றத்திற்கு வரவில்லை, என்ன காரணம்? அவர் மலை குலையவில்லை, அவர் மனநிலை குலைந்து விட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர் சட்டமன்றத்திற்கு வர முடியவில்லை.

முற்பகல் 11-30

ஆளுநர் பேருரையில், சட்டம்-ஒழுங்கைப் பற்றி மிக அழகாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு நாட்டிலே அமைதி நிலவினால்தான், அத்தனை வளர்ச்சிப் பணிகளும் சிறப்பாக இருக்கும். கடந்த 1991-லிருந்து 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலே இருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தார்கள். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, விடுதலைப் புலிகளினுடைய கொட்டம், வேகம் தமிழகத்திலே இருந்தது. நூறே நாட்களிலே அந்தக் கொட்டத்தை அடக்கினார்கள். அடுத்த 5 ஆண்டுக் காலம் சட்டம்-ஒழுங்கு பராமரிக்கப்பட்டு, பிரிவினைவாத சக்திகள் ஒடுக்கப்பட்டு, பயங்கரவாத சக்திகள் சமூக விரோத சக்திகள் அடக்கப்பட்டு இருந்தன. ஆனால், 1996-லேயிருந்து

2001 வரை கருணாநிதி ஆட்சி செய்தார். இதிலே உலக அரசியல் தலைவர்கள் யாரும் செய்யாத ஒரு சாதனையை முந்தைய முதலமைச்சர் கருணாநிதி செய்து இருக்கிறார்.

பொதுவாக உலக அரங்கிலே இருக்கின்ற நாடுகளில் பிரிவினைவாதம் என்ற ஒன்று அனைத்து நாடுகளிலுமே இருக்கின்றது. அந்தப் பிரிவினை வாதிகள் ஒரு கொள்கையை முன்வைப்பார்கள். கலாச்சாரத்தின் அடிப்படையிலும், மொழியின் அடிப்படையிலும், பண்பாட்டின் அடிப்படையிலும் தங்களுக்கென்று ஒரு தனி நாடு வேண்டுமென்று கேட்பார்கள்.

அதைப்போலத்தான், தமிழகத்திலேயும் தனித் தமிழகம் வேண்டுமென்று கேட்கும் சில பிரிவினைவாத சக்திகள் ஏதோ ஒரு பக்கம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. அதேபோல பயங்கரவாதிகள். அவர்களுக்குக் கொள்கை கிடையாது; கோட்பாடுகள் கிடையாது; அவர்கள் வளமாக வாழ வேண்டும்; வளமாக வாழ்வதற்கு யாரையும் தாக்குவதற்கு அவர்கள் தயார். அந்தச் சமூக விரோத சக்திகளும் பிரிவினைவாத சக்திகளும் ஒன்றாகக் கைகோர்த்த அரசியல் வரலாறு தமிழகத்திலே கருணாநிதி முதலமைச்சராக இருந்த அந்த 5 ஆண்டுக் காலத்தில் நடைபெற்றிருக்கிறது. ஒரு பயங்கரவாதியான வீரப்பனோடு ஒரு பிரிவினைவாதியான மாறன் கைகோர்த்து இருக்கிறார். அப்படிக் கைகோர்த்த பின்பு, கிட்டத்தட்ட 108 நாட்கள் தமிழகத்தினுடைய ஆட்சி முறையில் காவிரிக் காட்டிலே உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. காவிரிக் காட்டிலே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை முதலமைச்சராக இருந்த கருணாநிதி நிறைவேற்றியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த 108 நாட்களில் அன்றைய முதலமைச்சர் அவர்களும் அன்றைய அரசு அதிகாரிகளும் என்னென்ன செய்தார்கள்; எந்தெந்த இடத்திலே தவறு நடந்து இருக்கிறது; எவ்வளவு பணம் கைமாறி இருக்கிறது என்பதைக் கண்டறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அந்த 108 நாட்களில் கருணாநிதி தன்னுடைய கையாலாகாத்தனத்தின் காரணமாக பல்வேறு வழிமுறைகளை அவர் கையாண்டு இருக்கிறார். அப்படி கையாண்டு இருக்கிற நிகழ்ச்சிகளைத் தொகுத்து விசாரணை வைக்க வேண்டுமென்று



நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்ததாக—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முனுசாமி, அடுத்ததாக என்று தொடர வேண்டாம்; இதோடு முடித்து விடுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** முடித்து விடுகிறேன். குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிக் கூறும்போது, "100 பேருக்கு மேற்பட்ட மக்கள்தொகையுள்ள குடியிருப்புப் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காலவரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டு இருக்கிறது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒரு நல்ல திட்டம். கடந்த 1998 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உறுதுணையோடு மத்தியிலே திரு. வாஜ்பாய் அரசு அமைந்தது. அப்படி திரு. வாஜ்பாய் அரசு அமைக்கப்பட்டபோது, பிரதம அமைச்சர் திரு. வாஜ்பாய் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரு தனி மனிதனுக்கு 40 லிட்டர் குடிநீர் கொடுக்கப்படும் என்று கூறியிருந்தார். இன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 100 பேருக்கு மேற்பட்ட மக்கள்தொகை இருக்கின்ற இடங்களிலே குடிநீர் ஆதாரத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லி இருக்கின்றார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம்; பூகோள ரீதியாக அங்கு நிலத்தடி நீர் குறைந்துகொண்டே வந்து கொண்டிருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நேரத்தில், ஆட்சியில் அமராமல் சென்றுவிட்டார்கள். தயவுசெய்து இந்த நிதியாண்டிலேயே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நிதியை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்க வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். காரணம், இருக்கின்ற 18 ஒன்றியங்களிலும் கிட்டத்தட்ட 400 அடி ஆழம், 500 அடி ஆழம் bore போட்டால்கூட தண்ணீர் கிடைப்பது இல்லை. எனவே, அந்நிலை இருக்கின்றபோது, தயவுசெய்து ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த நிதியாண்டிலே கொண்டுவர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டு, மேதகு ஆளுநர் உரையை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

* **திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பன்னிரெண்டாவது சட்டப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்றுப் பேசுவதற்கு நான் விரும்புகிறேன். ஆளுநர் உரையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நடந்து முடிந்திருக்கின்ற சட்டப் பேரவைத் தேர்தலில் மதச்சார்பற்ற, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய பேராதரவைப் பெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இன்றையதினம் அரசு அமைந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கை, தமிழ்நாட்டு மக்கள் அவர்கள்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை காரணமாக, இன்று அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். கடந்த காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பல்முனைத் தாக்குதல்கள் இருந்தன. அதிலிருந்து மீண்டு வந்து அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். குறிப்பாக நீதிமன்றம் ஒருபுறம், தேர்தல் கமிஷன் மறுப்பு ஒருபுறம், பத்திரிகைகளினுடைய கணிப்பு ஒருபுறம், தொலைக்காட்சிகளினுடைய மறுப்புகள் இன்னொருபுறம் என்று இத்தனையையும் தாண்டித்தான், தமிழ்நாட்டு முதலமைச்சராக உங்களுக்குத் தமிழக மக்கள் வாக்களித்து வெற்றி வாகையைச் சூட்டியிருக்கிறார்கள்.

அத்தகைய பலமுனைத் தாக்குதல்களுக்குப் பிறகும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத் தமிழக மக்கள் வாக்களித்து, ஜாதி மத அமைப்புகளைப் புறக்கணித்து, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று வெற்றி பெற வைத்திருக்கிறார்கள். அந்த வாக்காளர் பெருமக்களுக்கு எங்களுடைய கூட்டணிக் கட்சிகளினுடைய சார்பில் நன்றி கூறிக்கொள்கிறேன். இந்தக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்குப் பேராதரவு அளித்த அந்தத் தலைவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, எங்களுடைய





தொகுதியில், ஒரே தொகுதியில் நான்காவது முறையாகவும் எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்திருக்கிற அந்த திருத்துறைப்பூண்டி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், எந்த நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்திருக்கிறார்களோ, அந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையில் நமது அரசு செயல்படும் என்று நான் கருதுகிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், குறிப்பாக நமது நிதியமைச்சர் அவர்கள் ஒரே வரியில் 'கஜானா காலி' என்று சொல்லிவிட்டார்கள். கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்று ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி, மக்கள் நம்பிக்கையை இழக்கிற அளவுக்குச் சொன்னார்கள். நான் நமது முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன்; கஜானா காலியாக இருந்தாலும், நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலே, நிதி ஆதாரங்களை உருவாக்குவதிலே, மத்திய அரசோடு போராடி, பல வளர்ச்சித் திட்டங்களைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவருவதிலே நீங்கள் முனைப்பு காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் பணப்புழக்கம் குறைந்து நிதி நெருக்கடி ஏற்பட்டு, ஏழை எளிய மக்களை வாட்டக்கூடிய ஒரு நிலையில், நம்முடைய தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அந்த மக்களுக்குத் துரிதமாகப் பலனளிக்கும் வகையில், மக்களின் வாங்குகின்ற சக்தியை பெருக்கித் தருவதற்கு நாம் பல தொழில்களை உருவாக்க வேண்டும்; பல்வேறு தொழில் முனைவோர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். தமிழகத்தின் களஞ்சியம் காலியாக இருந்தாலும், ஏதோ உணவு தானியம் கையிருப்பில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதிலேகூட 14 லட்சம் டன் உணவு தானியம் கையிருப்பில் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த உணவு தானியம் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஏனென்றால், டெல்லி சர்க்காரின் கையிருப்பில் இருந்த 1,20,000 டன் உணவு தானியம் மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு வீணாகிவிட்டது என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. ஆகவே இந்த 14 லட்சம் டன் உணவு தானியமும் தமிழ்நாட்டு மக்களுக்கு பயனளிக் கக் கூடிய நிலையில் இருக்கிறதா என்று பரிசோதிக்கப்படவேண்டும்.

[திரு. ஜி. பழனிசாமி] [2001 மே 29

முற்பகல் *11-40*

அதுபோல, காவிரி நதிநீர்ப் பிரச்சினை. தமிழகத்தின் உயிர்நாடியான பிரச்சினை. இன்று நேற்றல்ல, ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில், காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னாள் பாரதப் பிரதமர் தலைமையில் ஒரு Monitoring Committee அமைக்கப்பட்டிருந்தது. இந்த கவர்னர் உரையில் அது சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும்கூட, நான் உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவது, அந்த 5 பேர் கொண்ட Committee-ல், யாராவது ஒருவர் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அந்தப் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுவிடுகிறது.

நமக்கு ஜூன் மாதம் முதல் மே மாதம் வரை கிடைக்கக்கூடிய காவிரித் தண்ணீர் கிடைக்காமல் தடைபட்டு விடுகிறது. இதற்குத் தமிழக அரசு மத்திய அரசோடு கலந்துபேசி, அந்தப் பணியில் யாராவது மாநிலத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும்கூட, அந்த உயர்மட்டக் குழு கூடிப் பேச வேண்டுமென்கிற ஒரு நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற கச்சத் தீவுப் பிரச்சினை ஒரு பிரதானமான பிரச்சினை. இந்திய மீனவர்கள் தமிழகத்தினுடைய கடலோரத்தில், இலங்கை ராணுவத்தால் ஆண்டுதோறும் பிணமாக அனுப்பப்படுகிற ஒரு நிகழ்ச்சியாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதுமாதியான சம்பவங்களில் மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொள்கிறது. மத்திய அரசு இலங்கை அரசோடு தொடர்பு கொள்கிறதா என்று எண்ணிப்பார்த்தால், அநேகமாக அது ஒரு கண்ணீர் வடிக்கின்ற கதையாக இருக்கிறது.

முன்னாள் பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய இந்திரா காந்தி அவர்கள் கச்சத் தீவு பிரச்சினைக்கு ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையில் ஒரு சர்வதேசப் பிரச்சினையும் உள்ளடங்கி இருக்கிறது. ஆகையால், அதிலே இருக்கிற நம்முடைய உரிமை என்ன என்பதைக் கண்டறிந்து, மத்திய அரசு இலங்கை அரசோடு பேசுவதோடு மட்டுமல்லாமல், இலங்கையினுடைய கடலோர எல்லையில் நம்முடைய இந்திய ராணுவம், நமது இந்திய நாட்டு மீனவர்களைப் பாதுகாப்பதிலே முழு கவனம் செலுத்த வேண்டும். அது இல்லாததன் விளைவாகத்தான் தமிழ்நாட்டினுடைய மீனவர்கள் தொடர்ந்து பல்வேறு பழிகளுக்கு ஆட்பட்டு, இறந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சி தொடர்கிறது.



2001 மே 29] [திரு. ஜி. பழனிசாமி]

நடந்து முடிந்திருக்கிற நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் நாட்டு மக்களுக்கு அவர்கள் அளித்திருக்கிற பரிசாக-அன்றைக்கு மத்தியிலே பாரதிய ஜனதா கட்சியும், மாநிலத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள்-நாடாளுமன்றத் தேர்தலினுடைய வாக்குகளை எண்ணுவதற்குள்ளாக ஏழையெளிய மக்கள், உழைக்கின்ற மக்கள், நடுத்தர மக்கள் வாங்கி உண்ணக்கூடிய உணவு தானியங்களின் விலையைப் பல மடங்கு உயர்த்தினார்கள். மண்ணெண்ணெய் விலை உயர்ந்தது, Gas விலை உயர்ந்தது. இப்படி பல மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. மக்கள் நம்மிடத்திலே எதிர்பார்ப்பது என்பது, மண்ணெண்ணெய் விலையையும், அரிசி விலையையும் இந்த அரசு குறைத்துக் கொடுப்பார்களா என்பதுதான். அந்த அளவிற்கு நம்முடைய செயல்பாடு அமைய வேண்டும். அதற்கான திட்டங்களை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுகிறேன்.

ஆளுநர் உரை மீது இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்வதை நான் எனது கடமையாகக் கருதுகிறேன். குறிப்பாக தமிழ் பண்பாட்டு வளர்ச்சி குறித்து, தமிழ் மொழி வளர்ச்சி குறித்து ஆளுநர் உரையிலே இடம் பெறவில்லை. தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைக்காக, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற Committee-களை ஊக்கப்படுத்துவதிலே இந்த அரசு முனைப்புக் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணி ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணிகளை விரைந்து செய்ய வேண்டும். கடற்கரைச் சாலை, கடலூரிலிருந்து, கன்னியாகுமரி வரை போனால்தான், தென் மாவட்டங்களில் இருக்கிற ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையில் தொழில் வளம் பெருகி பிரதானமான இடம் பெறமுடியும் என்கிற அடிப்படையில் அந்தச் சாலைகளை விரைந்து சீரமைப்பு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தடைபட்டிருக்கின்றன. தென்னிந்திய ரயில்வே மூலம் அகலப் பாதை இரயில்களை விடும் வகையில், அகலப்பாதைகளை உருவாக்குவதற்கு மாநில அரசு மத்திய அரசோடு தொடர்ந்து வாதாடி பெற வேண்டியது அவசியமாகும்.

[திரு. ஜி. பழனிசாமி] [2001 மே 29

*முற்பகல் 11-45*

கவர்னர் உரையில் குறிப்பிட்டதுபோல தமிழகத்திலே ஒரு கோடி வாக்காளர்கள் இப்போது வாக்களிக்க முடியாமல் விடுபட்டிருந்தபோதிலும், 18 வயதிற்கு மேற்பட்டிருக்கிற அனைவருக்கும் இன்றையதினத்திலே வாக்குரிமை அளிக்கக்கூடிய வகையில், வரக்கூடிய உள்ளாட்சி மன்றத் தேர்தலிலாவது ஏற்பாடு செய்வதற்குத் தேர்தல் ஆணையத்திடம் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலங்களில் விவசாயிகளைப் பற்றிய பல்வேறு பிரச்சினைகளை இந்த மன்றத்திலே நாங்கள் கிளப்பியிருக்கிறோம். இன்றைக்குக்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, விவசாயிகளுக்கு அவர்களுடைய கடன்களையும், வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது, எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நாங்கள் பல தடவை இந்தச் சட்டமன்றத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற விவசாயிகள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கூட்டுறவுச் சங்கத்திலே பெற்றிருக்கிற கடன்கள் என்பது அநேகமாக அவர்களுடைய கடன், வட்டியும் முதலும் சேர்த்துப் பார்த்தால், அவர்களுடைய சொத்து மதிப்பைவிட அவர்களுடைய கடன் மதிப்பு இப்போது உயர்ந்து இருக்கிறது. இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தினோம். அதற்கு முன்னாள் முதலமைச்சர், நபார்டு வங்கியில், இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்கள் வட்டியையும் தள்ளுபடி செய்ய முடியாது, கடனையும் தள்ளுபடி செய்ய முடியாது என்று அவர் எழுதிக் கொடுத்து வந்துவிட்டார், நான் என்ன செய்வது என்று பல தடவை சொன்னார்கள். விவசாயிகள் கடனைக் கட்ட முடியாத நிலையில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும்கூட, திருவாரூர் மாவட்டத்தில், நாகை மாவட்டத்தில், தஞ்சை மாவட்டத்தில், சாலை மறியல் போராட்டங்களை நடத்திய விவசாயிகளைக் கைது செய்து, கடலூரிலே கொண்டு போய்ச் சிறையிலே அடைத்தார்கள். இப்படிப்பட்ட கொடுமையிலிருந்து அந்த விவசாயிகளை மீட்டு, கடன்களைத் தள்ளுபடி செய்து, இந்த அரசு பாதிக்கப்பட்ட வருடங்களில் கண்டிப்பாக இந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று



2001 மே 29] [திரு. ஜி. பழனிசாமி]

எதிர்பார்க்கிறார்கள். விவசாயிகளுடைய கடனையும், அதனுடைய வட்டியையும் நீங்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு ஒரு வாழ்வு அளிப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும். நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொன்னதற்காக தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாசன முறைகளும், தரிசு நில மேம்பாடு குறித்த நல்ல பணிகளும் இந்த கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒவ்வோர் உரையிலேயும் குறிப்பிடப்பட்டபோதும்கூட, விவசாயிகள் அந்த நீர் ஆதாரங்களைப் பெறுவதிலே, விவசாயப் பொருளாதார முன்னேற்றங்களை உருவாக்குவதிலே அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேயிலை விவசாயிகள். நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகள், 16 ரூபாய் விற்ற தேயிலையை, 4 ரூபாய் 50 காசுக்கு விற்பனை என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். கடும் போராட்டம். பல உறுப்பினர்கள் இதனைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நீலகிரி விவசாயிகள் மீது போடப்பட்டிருக்கிற பொய் வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். பெண்கள், ஆண்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று தேங்காய் விவசாயிகள். அவர்களும் இதுபோன்ற போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அரசாங்கமே கொள்கை அளவிலே ஏற்கெனவே தேங்காய்களைத் தாங்களே கொள்முதல் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். தேங்காய் விவசாயிகள் கடந்த காலத்திலே, கோயம்புத்தூராக இருந்தாலும், தஞ்சாவூராக இருந்தாலும் ஏற்பட்டிருக்கிற இந்தக் கொடிய தேய்காய் நோயினால் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு நிவாரணம் அளிக்கிற வகையில் தேங்காய்களை அரசாங்கமே கொள்முதல் செய்வதற்கான ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும்.

கரும்பு விவசாயிகள் டன்னுக்கு 1000 ரூபாய் கேட்டு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், தேர்தல் காலத்தில் பல இடங்களில் விவசாயிகள் தற்போதிருக்கிற விலையில் எங்களுக்குக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அநேகமாக 32 ஆலைகளில் ஓரேயொரு ஆலையில் மட்டும்தான் 10.5 சதவிகிதம் பிழிதிறன்

இருக்கிறது என்பதற்காக அந்த ஆலைக்கு வழங்கப்படுகிறது. ஆக, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆலைகளிலும், 8.5 சதவிகிதம் பிழிதிறனுக்குள் இருக்கக்கூடிய கரும்புக்கும் டன் ஒன்றுக்கு ரூ.1000 நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்பில் செயல்பாடு என்பது குறைந்துள்ளது. எந்த ஒரு சாலையை எடுத்துக்கொண்டாலும் சரி, வாக்காளர்களிடம் சென்று வாக்குக் கேட்கிறபோது, அநேகமாக எல்லா இடங்களிலும், நீங்கள் எங்களுடைய சாலையைப் பாருங்கள், எங்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பாருங்கள் என்றும், எல்லா இடங்களிலும் சாலை வேண்டும், குடிதண்ணீர் வேண்டும் என்கிற அந்த அவலக் குரல்தான் தமிழகம் முழுமையும் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஆதாரங்களை வழங்கி, முதலிலே அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். முக்கியமாக, சாலைகளைச் சீர் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் சாலைகள் சீரமைக்கப்படுகிற போதுதான் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் தைரியமாக மக்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் பெருமக்களாக வரக்கூடியவர்கள் தங்களுடைய மாவட்டத்தில் கவனம் செலுத்துவது; தங்களுடைய தொகுதியில் கவனம் செலுத்துவது; அதற்கு முன்னுரிமை கொடுத்துச் செய்வது என்பது இருந்தது. 234 தொகுதிகளையும் மறந்து, அமைச்சருடைய மாவட்டம், அமைச்சருடைய தொகுதி இவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கின்ற பணியிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும்; மாறுபட வேண்டும். சென்ற ஆட்சியில் அமைச்சர் ஒருவர், 53 கோடி ரூபாய்க்குச் சாலை போட்டார். ஓர் அமைச்சர் 53 கோடி ரூபாய்க்குச் சாலை போட்டார். மனிதர்கள் நடக்கின்ற சாலை அல்ல, கால்நடைகள் நடக்கும் இடத்திற்கெல்லாம் சாலை போட்டார். ஆனால், இந்தத் தேர்தலில் படுதோல்வி அடைந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தன்னுடைய மாவட்டத்தில், தன் தொகுதியில் செய்து முடித்துவிட்டால் வெற்றி பெற்றுவிடலாம் என்று அமைச்சர் பெருமக்கள் யாரும் எண்ணிவிட வேண்டாம். 234 தொகுதிகளுக்கும் உங்களுடைய பணி என்று அமைந்திருக்க வேண்டும். அப்படி அமைந்தால்தான் அந்தப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும்.





எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டிருந்தாலும்கூட வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு என்பது முக்கியமானது. நான் ஏற்கெனவே, S.C., S.T. High Level Committee-யிலே மூன்று ஆண்டுக் காலம் இருந்தவன். ஏற்கெனவே, இருந்த அரசு வெள்ளை அறிக்கை ஒன்றை சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு வேலைவாய்ப்புகளிலே, அரசு பதவி உயர்வுகளிலே இடஒதுக்கீடு அளிக்க வேண்டியது பற்றி வெள்ளை அறிக்கை இந்தச் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. அதை நீங்களும் சரி பார்த்து, ஓர் ஆண்டுக்குள்ளாக நிறைவு செய்து தர வேண்டும். ஆதிதிராவிட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் மிகவும் குமுறலாக இருக்கிறார்கள். இப்போதுகூட பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. உடனடியாக வேலைவாய்ப்பளித்து, காலியான இடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதற்கும் மேலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் அப்படிப்பட்ட சிந்தனைகள் என்னிடத்திலே வரவில்லை, பத்திரிகைகளிலே வந்த செய்திகளை நான் பார்த்தேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் பேசுவதை எங்கே இருந்தாலும் கேட்பார்கள் என்று இதைச் சொல்லுகிறேன். எந்த வகையிலும் மாவட்டங்களுக்குத் தலைவர்கள் பெயரை வைப்பதிலே நீங்கள் நிதானத்தோடு இருக்க வேண்டும். தற்போது அவசரப்பட வேண்டாம். பேருந்து கழகங்களுக்குப் பெயர்; மாவட்டங்களுக்குப் பெயர், தாலுகா தலைநகரங்களுக்குத் தலைவர்களுடைய பெயர் என்று வைத்தால், மீண்டும் ஜாதியக் கலவரங்கள் ஏற்படும். அமைதியாக இருக்கும் தமிழகத்தை ரணகளமாக மாற்றக்கூடிய அமைப்புகளை உருவாக்குவதற்கு முயற்சி செய்வார்கள்; அதற்கான வாய்ப்புகள் ஏற்படும். கடந்த காலங்களில் நமது தேசத்திற்காக உழைத்த தலைவர்கள், சுதந்திரப் போராட்டத்திற்காக உழைத்த தலைவர்கள், தமிழ் வளர்ச்சிக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற தலைவர்கள், அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஜாதியாகச் சித்தரிக்கப்பட்டார்கள். ஜாதியை ஒழிப்பதற்கு போராடிய உத்தமத் தலைவர்களை எல்லாம் ஜாதியாக்கி, அவர்களைக் கேவலப்படுத்தி, அரசியல் கட்சிகளை உருவாக்குவதற்கு நினைத்தார்கள். மறைந்த தலைவர்கள் பெயரையும், அவர்களை மதிப்பதிலும், அவர்களைக்

[திரு. ஜி. பழனிசாமி] [2001 மே 29

கௌரவிப்பதிலும், அவர்களைப் போற்றி மகிழ்வதிலும், பல்வேறு துறைகள் மூலமாகக் கௌரவப்படுத்துவதன் மூலமும், நினைவு தினத்தைக் கொண்டாடுவதன் மூலமாக, இப்படி எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. ஆக, மாவட்டத்தின் பெயரால், பேருந்துக் கழகங்கள் பெயரால், தெருப் பெயரால், அவர்கள் பெயரைக் களங்கப்படுத்தக் கூடாது.

*முற்பகல் 11-55*

உழவர் சந்தை சம்பந்தமாக பல்வேறு விவாதங்கள் நடந்து முடிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். நலிவுற்றுப் போயிருக்கிற எந்த ஒரு இடமாக இருந்தாலும் அதைக் கலைப்பது பற்றிப் பிரச்சினை கிடையாது. இதையே ஒரு அரசியல் சூறாவளிப் பிரச்சாரமாகக் கிளப்புவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். உழவர் சந்தை மக்களாகப் பார்த்து விரும்பி வந்தால்தான் பயனளிக்கும். திருத்துறைப்பூண்டியில் ஒரு உழவர் சந்தை இருக்கிறது. அங்கு யாருமே போவதில்லை. அவர்கள் market-ற்குப் போய்விடுகிறார்கள். இதற்கு ஒரு அறிவிப்பே வேண்டாம். மக்களாகவே ஒதுக்கிவிடுவார்கள். விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவில்லை, நுகர்வோர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை என்றால், அவர்களே ஒதுக்கிவிடுவார்கள். ஆகவே, அரசாங்கத்தின் மூலமாக ஒரு அறிவிப்பு வந்ததன் விளைவாக ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் அரசியல் ஆதாயங்களைத் தேடுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அரசுக்கு அப்படிப்பட்ட சிந்தனை இருந்தால் அதையும் கைவிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்திருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மிக எதிர்பார்ப்போடு இந்த ஆட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். கவர்னர் உரையில் பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுகிய நாளிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஊரக வேளாண்மை பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற முக்கியத் திட்டம் அதிலே இடம் பெற்றிருக்கிறது. குடும்ப வருவாயைப் பெருக்குவது, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டம் அதிலே வகுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க 100 பேர் வசிக்கிற குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவது போன்ற நல்ல திட்டங்கள் ஆளுநர் உரையிலே இடம்பெற்றிருக்கின்றன. புதிய வீராணம் திட்டத்திற்கு மதிப்பீடு செய்வது,



2001 மே 29] [திரு. ஜி. பழனிசாமி]

ஏரிகள், பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றை நவீனப்படுத்துவது, ஆறுகள், குளங்களைத் தூர் வாருவது, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் திறந்து தொழில்மயமாக்குவது, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவிகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக இலவசமாக சைக்கிள் வழங்குவது போன்ற நல்ல அம்சத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் உணவு அளிக்கிற திட்டத்தை சென்ற அரசு தனியாருக்குக் கொடுத்தார்கள். நான் சட்டமன்றத்திலேயே கடுமையாக எதிர்த்தேன். அப்படிப்பட்ட பணிகளைத் தனியாருக்கு விடாதீர்கள் என்றும், நல்ல உணவு கிடைக்காது; அந்த மாணவர்களைப் பராமரிக்க வேண்டும் என்று சொன்னால், அதை அரசே எடுத்து நடத்த வேண்டும் என்றும் சொன்னேன். ஆனால், அதையெல்லாம் தனியாருக்கு அவர்கள் விட்டிருக்கிறார்கள். அந்த மாணவ விடுதிகளை அரசே எடுத்து நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய உள்ளங்களிலே இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையிலே பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் உரையை ஏற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க தமிழ்ச்செல்வன்.

* **திரு. தங்க தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்று மாபெரும் மக்கள் சக்தியோடு இன்று முதலமைச்சராக வீற்றிருக்கிற எங்கள் காவல் தெய்வம், தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாதம் தொட்டு வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன். முதற்கண் சாதாரண தொண்டனாகிய என்னை ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தி தேர்தல் சுற்றுப் பயணம் செய்து மாபெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், ஆண்டிப்பட்டி தொகுதியில் மாபெரும் வாக்குகள் அளித்த நல்ல உள்ளம் படைத்த பொது மக்களுக்கும் எனது மனமார்ந்த

[திரு. தங்க தமிழ்ச்செல்வன்] [2001 மே 29

நன்றியைக் கூறிக்கொண்டு, மேதகு ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் முதல் கருத்தாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் மனதார, உற்சாகத்தோடு அந்தச் செய்தியை வரவேற்கிறோம். இந்தச் செய்தியை மறுத்து மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் இது வரலாற்று வெற்றி இல்லை என்று ஒரு செய்தியைக் கூறினார்கள். நான் அவருக்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம் 1996 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களுக்கு நன்மை செய்வதை விட்டுவிட்டு, ஒரு முன்னாள் முதலமைச்சர் என்றும் பாராமல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை 28 நாள் சிறையில் வைத்தார்கள். வழக்கு என்ன? கலர் டி.வி. வாங்கியதில் ஊழல் நடந்துவிட்டது, ஆகவே, சிறையில் வைக்கின்றோம் என்று மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் மக்களிடத்திலே கூறினார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தைரியத்தோடு சிறைவாசம் சென்று வழக்கைச் சந்தித்தார்கள். வழக்கு எங்கு நடைபெறுகிறது? அது தனி நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. அந்தத் தனி நீதிமன்றத்தை யார் உருவாக்கினார்கள்? மத்திய அரசுக்கு தமிழக அரசு ஒரு கோப்பை அனுப்புகின்றார்கள். 1991 முதல் 1996 வரை நடந்த ஊழல்களை விசாரிக்க வேண்டுமென்ற கோப்பை அனுப்புகின்றார்கள். மத்திய அரசு, ஏன் அந்தக் குறிப்பிட்ட வருடங்களில் நீங்கள் வழக்கை விசாரிக்க வேண்டுமென்ற கருத்தைக் கேட்டு அந்தக் கோப்பைத் திருப்பி அனுப்புகின்றார்கள். நீங்கள் தனி நீதிமன்றம் அமைக்கக் கூடாது என்ற கருத்தை நோக்கித் திருப்பி அனுப்புகின்றார்கள். ஆனால், அன்றைய முன்னாள் முதல்வர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள்...

நண்பகல் 12-00

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க தமிழ்ச்செல்வன் பேசும்போது மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு, முன்னாள் முதல்வர் அவர்கள் ஒரு கோப்பினை அனுப்பினார்கள் என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இந்த மாமன்றத்தால் ஏற்கப்பட்ட ஒரு மசோதா இதுவரையில் சட்டமாகாமல் இந்த நிலையிலே இருக்கிறது.



2001 மே 29] [டாக்டர் மு. தம்பிதுரை]

அந்த மசோதா பற்றி நான் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். ஆகவே, இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த மசோதா, சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்காக ஏற்பட்ட மசோதா எதற்காக ஏற்படுத்தப்பட்டது? அதனுடைய சாராம்சங்கள் என்ன? அன்றைக்கு இந்த மாமன்றத்தில் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டதே, இதே நம்முடைய நண்பர்கள் இருக்கும்போது நிறைவேற்றினார்களே, அது ஏன் இதுவரையில் சட்டவடிவம் பெறவில்லை? அது சட்ட வடிவம் பெறாத நிலையிலே இருக்கும்போது எப்படி சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவைக்கு உரிய காலத்தில் தெரிவித்தார்கள் என்றால், மிகவும் நன்றாக இருக்கும் என்பது எங்கள் கருத்து. காரணம், ஏதோ சிறப்பு நீதிமன்றம் வந்துவிட்டது, வந்துவிட்டது என்று கூறி ஏதோ ஊழல் விசாரணை செய்து தண்டனை அடைந்தவர் என்றும், அவர் இவ்வாறு பேசலாமா என்றும் கூறினார்கள்.

அதேநேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள்; ஏதோ அந்த நீதிமன்றத்திற்குப் பயந்து கொண்டு செல்லாமல் வாய்தா வாங்கினார் என்றெல்லாம் பேசினார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அத்தகைய பழி வாங்கும் நடவடிக்கையை ஏற்படுத்தவில்லை. இவர் இப்படி ஒரு சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தினால், அவர் வாய்தா என்ன, கோர்ட்டுக்கே வரமாட்டார். அப்படிப்பட்ட நிலைமைதான் உருவாகும். ஆனால் இந்த மாமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மசோதா இதுவரையில் சட்டமாகாமல் இருக்கிறது. இந்தச் சட்டத்திற்கான விளக்கங்களை மத்திய அரசு பலமுறை கேட்டிருக்கிறது. ஆனால், முந்தைய அரசு விளக்கம் தருகிறேன், தருகிறேன் என்று ஒவ்வொரு முறையும் தள்ளி வைத்துவிட்டு இருக்கும்போது, எப்படி, எப்போது இந்தச் சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றியெல்லாம், சட்ட அமைச்சர் இருக்கின்றார்கள், அவர்கள் மாமன்றத்தில் விளக்கம் அளிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு அமைகிறேன்.

**திரு. தங்க தமிழ்ச்செல்வன்:** உயர் நீதிமன்றத்தின் மூலமாக தனி நீதிமன்றம் அமைப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அந்தத் தனி நீதிமன்றத்தின் வாயிலாக வழக்கை விசாரிக்கின்றபோது, அந்தத் தனி நீதிமன்ற நீதிபதி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிரபராதி என்ற தீர்ப்பைத்தான் தந்தார்களே தவிர மாற்றுக் கருத்தைக் கூறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்வதற்குக் காரணம், முந்தைய

அரசு 5 ஆண்டுக் காலம் சதா புரட்சித் தலைவி மீது பொய்யான வழக்குகளைப் போட்டார்கள். பொய்யான பிரச்சாரங்களை மக்களிடத்தில் வைத்தார்கள். முன்னாள் முதல்வர் குடும்ப டி.வி.யான சன் டி.வி.யிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய இல்லத்தைக் காண்பித்து, படியைப் பார், செருப்பைப் பார், சேலையைப் பார் என்று தராதரம் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி மக்களிடத்திலே ஒரு பொய்ப் பிரச்சாரத்தை வைத்தார்கள். ஆனால் நீங்கள் சொல்வது உண்மையாக இருந்திருக்குமானால் நிச்சயமாக இப்போது மக்கள் உங்கள் பக்கம்தான் இருந்திருப்பார்கள். ஆனால், மாறாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஊழல் புரியவில்லை, மீண்டும் எங்களுக்கு டாக்டர் புரட்சித் தலைவிதான் முதலமைச்சராக வரவேண்டுமென்ற ஒட்டுமொத்தக் கருத்தோடு ஒரு மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை கவர்னர் உரையில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்று கூறியிருப்பது சாலச்சிறந்தது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் ஒரு சபதத்தை ஏற்றுக்கொண்டார்கள். தமிழ்நாட்டில் வறுமை நீங்க வேண்டும், அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் உணவு வழங்குவதில் இந்த அரசு முனைப்போடு செயல்படும் என்ற ஒப்பற்ற கருத்தைக் கூறினார்கள். உண்மையிலேயே நாங்கள் அதை மனதார வரவேற்கிறோம், அந்தச் செய்கையை பொதுமக்கள் அனைவரும் இன்றும் உளமாரப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, இன்று மாபெரும் வெற்றியை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். நல்ல திட்டங்கள் பலவற்றை இதில் கூறியிருக்கிறார்கள். 'மின்னணு வாக்குப்பதிவு' உண்மையிலேயே தமிழகத்திற்கு உகந்தது இல்லை என்பதை புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, வளர்ச்சியடைந்த நாடுகள், மின்னணு வாக்குப் பதிவைப் பயன்படுத்தி, பல குளறுபடிகள் நடந்த நிலையில் மீண்டும் வாக்குச் சீட்டுப் பதிவுக்கு மாறிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை மீண்டும் தமிழகத்திற்கு வரவேண்டுமென்ற ஆசையை நாங்கள் பெரிதும் வரவேற்று மகிழ்ச்சியடைகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)



*பிற்பகல் 12-05*

விவசாயிகள், தொழிலாளர்கள் பயன்பெறும் திட்டமான முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையைப்பற்றி ஏற்கெனவே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது, கம்பத்தைத் தலைமையிடமாக வைத்து 5 மாவட்ட விவசாயிகளை அழைத்து, கம்பத்திலே ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்தினார்கள். அப்போது, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்ற போராட்டத்தை அந்தப் பகுதியிலே நடத்திக் காட்டினார்கள். நடத்தி வெற்றியும் பெற்றார்கள். அந்த நோக்கத்தோடு இன்று இந்த அறிக்கையிலே முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது என்ற கோரிக்கை உண்மையிலேயே சாலச்சிறந்ததாகும். காரணம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தன் உயிரையும் துச்சமாக மதித்து, 3 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகிற வகையிலே இடைக்காலத் தீர்ப்பு கண்டு, காவிரிப் பகுதி மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தை கொண்டுவந்தார்கள். இப்போது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கிறார்கள். நிச்சயமாக காவிரிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்து விடுவார்கள் என்ற நல்ல செய்தியைக் கூறிக்கொள்ள நாங்கள் ஆசைப்படுகிறோம்.

இன்னொரு செய்தி, வீணாகும் மழை நீரைச் சேமிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தால் உண்மையிலேயே நிலத்தடி நீர் நமக்குக் கிடைக்கும். விவசாயிகள் பயன்பெறும் வகையிலே இந்தத் திட்டம் செயல்படும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்ததாக, அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கும், நதிகளை இணைக்கும் திட்டம். இதை மத்திய அரசிடம் வலியுறுத்துவோம் என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது மிகச் சாலச்சிறந்த திட்டமாகும்.

அதற்கு அடுத்தபடியாக, சிறு தொழில் மேம்பாட்டுத் திட்டமாகும்.

[திரு. தங்க தமிழ்ச்செல்வன்] [2001 மே 29

திருமுல்லைவாயிலில் 1000 ஏக்கரில் சிறு தொழிற்பேட்டை மற்றும் மகளிருக்கான தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம். இது ஒரு சிறந்த திட்டமாகும். அதுவும் நலிந்த நிலையில் உள்ள சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம் உண்மையிலேயே சாலச்சிறந்த திட்டமாகும். மகளிருக்கென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்போதும் ஒரு சிறப்பான திட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கிறபோது, வேலைவாய்ப்பு, சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவற்றில் 33 சதவிகித இடஒதுக்கீடு கிடைக்க வழிவகை செய்தல் என்ற கோரிக்கைகள் பாராட்டக்கூடிய கோரிக்கைகள் ஆகும். மகளிர் மேம்பாட்டு மன்றங்கள் அமைக்கும் திட்டம் மற்றும் மகளிர் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் என்பவை சாலச்சிறந்த திட்டங்களாக இருக்கின்றன.

கல்வியைப் பொறுத்தமட்டில் 14 வயதிற்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குதல்; இடையில் படிப்பை நிறுத்திய குழந்தைகள் கண்டறியப்பட்டு மீண்டும் படிப்பைத் தொடங்கும் திட்டம் ஆகியவை உண்மையிலேயே ஏழையெளிய தாய்மார்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டங்களாக விளங்கும் என்பதைக் கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒவ்வோர் ஆசிரியர் என்ற நிலையை உயர்த்துதல் என்ற திட்டமும் தலைசிறந்த திட்டமாகும். அதைப்போல 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பிலே பயிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு அறிவித்த இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் உண்மையிலேயே, அந்தந்தப் பகுதியிலே மிகுந்த வரவேற்பைத் தந்திருக்கிறது. வாக்குகளை அளித்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி சொல்ல ஆண்டிப்பட்டி தொகுதிக்குச் சென்றபோது, அந்தப் பகுதியிலே, ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த தாய்மார்களும், பெரியோர்களும் வந்து உங்கள் புரட்சித் தலைவிக்கு, தமிழக முதலமைச்சருக்கு எங்களது நன்றியைக் கூறுங்கள் என்று கூறினார்கள். எங்களது பிள்ளைகள் நடந்து படிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்போது மிதிவண்டி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக உண்மையிலேயே எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம் என்று ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்த பெரியோர்களும், தாய்மார்களும் கூறி வியப்படைகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

எனது ஆண்டிப்பட்டி தொகுதி உங்களுக்கு நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நின்று, வென்ற தொகுதி. அந்தத்



2001 மே 29] [திரு. தங்க தமிழ்ச்செல்வன்]

தொகுதியில் சில நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தத் தொகுதியில், புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, 1984 முதல் 1987 வரை இரண்டு பெரிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். அந்தத் திட்டங்களாகிய திப்பரவு அணைத் திட்டமும், தெப்பம்பட்டி கண்மாய்த் திட்டமும் அடிக்கல் நாட்டப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. மீண்டும் இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினால் எங்கள் பகுதிக்கு மிகவும் சிறப்பான ஒரு அம்சமாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் என்னிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் பாதம் தொட்டு வணங்கி, அந்தக் கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-10

அதைப்போல, ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகிறது. அதை நிரந்தரமாகப் போக்குகின்ற வகையில் வைகை அணையிலிருந்து குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து குடிநீர்ப் பிரச்சினையை அங்கே நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போல, கடமலைக்குண்டு-வெள்ளிமலை சாலை புதுப்பித்தல், மயிலாடும்பாறை-மல்லபுரம் சாலை புதுப்பித்தல், வைகை அணையைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல் மற்றம் பொம்மிநாயக்கன்பட்டி-வரகாநதி பாலம் அமைத்தல், ஜெயமங்கலம்-வரகாநதியின் குறுக்கே விவசாய நீர்ப்பாசனத்திற்கு தடுப்பு அணை அமைத்தல், குள்ளபுரம், வாடிப்பட்டி, எரிமலைநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை ஏற்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்று செயல்முறைபடுத்த வேண்டுமென்று பாதம் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் அனைத்து அம்ச திட்டங்களையும் நல்ல முறையில் கூறியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நல்ல ஆட்சியைத் தரும், மக்கள் செழுமை பெறுவார்கள் என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2001 மே 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.அ. ஹக்கீம்.

**திரு. மு.அ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எனது கன்னிப் பேச்சு என்கிற காரணத்தால் சுதந்திரமாக நான் 20 நிமடங்கள் பேசுவதற்கு தலைவர்அவர்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு எப்போதுமே குறைவாகத்தான் இருக்க வேண்டும்.

**திரு. மு.அ. ஹக்கீம்:** 'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த' மாமதுரையில் மத்திய தொகுதியிலே இருந்து நான் வெற்றிபெற்று வந்திருக்கிறேன். அந்தத் தொகுதிக்கு ஒரு சிறப்பு உண்டு. 'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று சொன்ன நக்கீரன் பற்றிய ஒரு இலக்கிய வரலாற்றைத் தொடங்கி சொல்வது சரியாக வரும் என்று நான் கருதுகிறேன்.

தவறான பாட்டைக் கொடுத்து, தவறான அர்த்தத்தில் சொல்லப்பட்டபோதும், அது தவறுதான் என்று நக்கீரன் வாதாடுகிறபோது, இறைவனாரே மதுரைக்கு வந்து வாதிட்ட செய்திகள் நாட்டுக்குத் தெரியும்.

'அங்கம் புழுதிபட அரிவாளில் நெய்பூசி
பங்கம் படபரண்டு கால்பரப்பி
சங்கதனை கீர் கீர் என அறுக்கும்
நக்கீரனோ என் கவியை ஆய்ந்து சொல்லத் தக்கவன்'

என்று இறைவன் கேட்கிறார்.

'சங்கருப்பர் எங்கள் குலம் சங்கரனார்க் கேதுகுலம், சங்கை அரிந்துண்டு வாழ்வோம் அரனே உன்போல் இரந்துண்டு வாழ்வதில்லை.'

'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றமே'

என்று அந்த நக்கீரன் சொன்ன அந்த இடத்தில், இறைவனாலே பஸ்பமாக்கப்பட்டு பொற்றாமரைக் குளத்தில் மீண்டும் பூத்து மலர்ந்து எழுந்து வந்ததாகச் சொல்லப்படுகிற, அன்னை மீனாட்சியின் ஆலயம் அமையப்பெற்றிருக்கக்கூடிய அந்த இடம்தான் என்னுடைய மத்திய தொகுதி; அந்த மக்கள்தான் என்னைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி இருக்கிறார்கள்.



2001 மே 29] [திரு. மு.அ. ஹக்கீம்]

மதச்சார்பற்ற கூட்டணி என்று சொல்லுகின்ற ஒரு மிகப் பெரிய பெருமையை அந்த மதுரை மாநகரத்திலே நம்முடைய தலைவர்கள் உருவாக்கித் தந்தார்கள் என்ற ஒரு வரலாற்று உண்மையை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் நான் இசுலாமிய சமுதாயத்தைச் சார்ந்தவன். நேற்று மதுரை மேற்குப் பகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அருமைச் சகோதரி மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் பேசினார்கள். அவர்கள் கிருத்துவ சமுதாயத்தைச் சார்ந்த பெண். மதுரை கிழக்குத் தொகுதியிலே இந்து மத சமுதாயத்தைச் சார்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அருமைச் சகோதரர் திரு. நன்மாறன் அவர்கள் வெற்றிபெற்று வந்தார்கள். இந்து, முஸ்லீம், கிருத்துவர் ஆகிய 3 பேரும் மதுரை மாநகரத்தில்தான் மகத்தான வெற்றி பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்பற்ற கூட்டணிக்கு ஒரு பெரிய இலக்கணத்தை வெற்றிகரமாகத் தந்து வெளியே வந்திருக்கிறோம், புரட்சித் தலைவி அவர்களுடைய நல்வாழ்த்துக்களால், நல் ஆசிகளால். (மேசையைத் தட்டும் ஒலி)

என் கண்ணியத்திற்குரிய தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் மதுரை மத்திய தொகுதியிலே ஹக்கீம் நிற்க வேண்டுமென்று சொல்லிக் கேட்கிறபோது, அது Temple city, கோயில் மாநகரம், 11 மிகப் பிரசித்தி பெற்ற கோயில்கள் இருக்கின்றன. அதிலும் அன்னை மீனாட்சி ஆலயம், கூடலழகர் பெருமாள் ஆலயம், கள்ளழகர் ஆற்றிலே வந்து இறங்குகின்ற இடம், இன்னும் பிரசித்திபெற்ற கண்ணகி கோயில் அவ்வளவும் இருக்கின்ற இடத்திலே ஒரு முஸ்லீம் சகோதரருக்குக் கொடுப்பது என்பது சரியாக வருமா என்று எல்லாம் கேட்கப்பட்ட நேரத்திலே மதச்சார்பற்ற கூட்டணிக்கு ஒரு சவாலாகவே இதை நான் ஏற்று ஹக்கீமை நான் அங்கே நிறுத்துகிறேன் என்று சொன்ன எங்கள் தலைவர் திரு. மூப்பனாரின் அந்த வார்த்தைகளுக்கு வடிவத்தைக் கொடுத்து வெற்றியை உருவாக்கித் தந்தவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெருப்பாற்றிலே நீந்தி வந்த அந்த முதலமைச்சரை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

பிற்பகல் 12-15

ஒரு காலகட்டத்தில் நானே கருத்து மாறுபாட்டில் கடுமையான விமர்சனத்தைப் பண்ணியவன் என்பதை நாடு அறியும். ஆனால் 5 ஆண்டு காலம்; அதிலும் குறிப்பாக ஒரு பெண்; பெண் என்று எல்லோரும் பேசினார்களே, அவர்களை நான் சாதாரணப் பெண்ணாகப்

பார்க்கவில்லை. சரித்திரத்தில் நெருப்பாற்றை நீந்தி வந்து அக்கினிப் பிரவாகத்தில் இருந்து எழுந்து வரக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மிகப் பெரிய வீராங்கனையாக, மறைந்துவிட்ட என் தாய் இந்திரா காந்தி அன்றைக்கு ஒரு மிகப் பெரிய சர்வாதிகாரத்தை எதிர்த்து போர்க்கொடி பிடித்துக்கொண்டு வெளியே வந்து வீதிகளிலே மக்களைச் சந்தித்து எழுச்சி சரித்திரத்தை உருவாக்கியதைப்போல தமிழகத்தின் வீர இந்திரா காந்தியாக புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள்.

கவர்னர் உரையைப் புறக்கணிக்கிறோம், வர மாட்டோம், கவர்னரையே புறக்கணிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், உரையிலே விவாதம் பண்ணுவதற்கு வந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எனக்குப் புரியவில்லை. இது குளத்தின்மேல் கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போன கதை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கிராமத்திலே பேசுவார்கள். நல்லவேளை, ஞாபகம் வந்து கால் கழுவுவதற்கு மீண்டும் குளத்திற்கு வந்ததற்காக நன்றி (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், எனக்கு உரை பிடிக்கவில்லை என்று சொன்னால், அந்த உரையைப் பற்றி நான் பேசவே வரவில்லை என்றுதான் சொல்வார்கள், இருந்தாலும் பரவாயில்லை.

நான் இங்கே இந்த அவைக்கு முன்னாலே மரியாதைக்குரிய இந்த மாமன்றத்திலே நான் பெருமையோடு இந்த விஷயங்களை இங்கே சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இது மதச்சார்பற்ற கூட்டணி என்பதற்காக மாத்திரம் அல்ல, ஒரு மிகப் பெரிய ஆதிக்கத்தை எதிர்த்து, அதிலும் குடும்ப ஆதிக்க அரசியல் என்ற ஒன்றை நிலைநிறுத்துவதற்காகப் படாதபாடுபட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் நாட்டு மக்கள் புரிந்துகொண்டு, அடித்து நொறுக்கி, தூக்கி எறிந்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இவர்தான் முதலமைச்சர் என்று இங்கே அனுப்பியிருக்கிறார்கள்.

பத்திரிகைத் துறை நண்பர்கள் this is one of the pillars of the democracy என்றும், the greatest pillar of the democracy என்றும் ஜனநாயகத்தின் மிகப் பெரிய தூண் என்றும் எழுதினார்கள். கடைசிவரை வரமாட்டார், வரமாட்டார் என்று எழுதினார்கள். ஆனால் தேர்தல் முடிவுகள் இது 115, 105, அது 7, இது 108 என்று வந்தது. மக்கள் எண்ணத்திற்கும், இவர்கள் சிந்தனைக்கும் சம்பந்தமே இல்லை என்பதைத்தான் மக்கள்





தங்கள் முடிவின்மூலம் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த மகத்தான வெற்றியை அந்த மக்கள் எந்த அடிப்படையில், சிந்தனையில் தந்தார்கள் என்பதையெல்லாம் மனதில் வைத்துதான் ஒரு முதலமைச்சராக வரலாமா என்று ஒரு இலக்கிய ஆராய்ச்சிப் பட்டிமன்றமே வெளியே நடந்து கொண்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இந்த விவாதமெல்லாம் எதற்காக வருகிறது என்றால் கவர்னர் உரையை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று சொன்ன மாண்புமிகு மரியாதைக்குரிய உறுப்பினர்கள் கவர்னர் முதலமைச்சர் பதவியை ஏற்க வைத்தது தப்பு, ஆகவே, நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். மக்கள் சொல்கிறார்கள், அவர் முதலமைச்சராக வரவேண்டும் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) கவர்னர் சொல்லவில்லை, கவர்னருக்கு மக்கள் தீர்ப்புதான் முக்கியம். எங்களுடைய மரியாதைக்குரிய தலைவி இந்திரா காந்தி அவர்கள் அன்றைக்கு ஒன்று சொன்னார்கள். The supremacy and sovereignty of the people - of the people - Elected representatives, people's House should not be questioned by the Court of Law, even by the Court of Law. மக்களின் மகத்துவமான சிந்தனை, எழுச்சி மிக்க ஆதரவு இதோ இந்த அவைக்கு, அந்த அவையில் தலைவராக இவர்கள் வரவேண்டும் என்ற அந்த எண்ணத்திற்கு வந்துவிட்டால் நாட்டில் நீதிமன்றங்கள் அதைக் கேள்வி கேட்க முடியாது. கேள்வி கேட்கக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான மக்கள் தீர்ப்புதான் முக்கியம்.

சட்டத்தை இயற்றுவது சட்டமன்றம். சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்திற்கு விளக்கத்தை Court கேட்கலாமே தவிர, Court சட்டம் போட்டு சட்டமன்றத்திற்குச் சொல்லக்கூடாது. இந்த நாட்டில் அப்படி ஒரு வழக்கம்; அதுதான் ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தைத்தான் மக்கள் உயர்வாக, கண்ணியமாக, பெருமையாக மக்கள் மதிக்கின்றார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று ஆரம்பத்தில் அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் திரும்பிய பக்கமெல்லாம், போகிற இடங்களில் எல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொல்வார்கள். அந்த மக்கள் தீர்ப்புக்காக அவர்கள் அன்று சொன்ன அந்த வாசகங்களையெல்லாம் இன்றைக்கு வடிவமாக்கித் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சருக்கு நான் என்னுடைய கண்ணியமிக்க மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அவர்தான் சொல்லுவார், விதைப்பார்கள், நடுவார்கள், விளைய வைப்பார்கள், அறுப்பார்கள், எடுப்பார்கள், கொடுப்பார்கள். ஆனால், உண்பதற்கு உணவு இருக்காது. இது என்ன கொடுமை? சமுதாயத்தில் இந்தத்

தீங்கு எப்படி வந்தது? காலில் குத்திய முள்ளில் பாதியை உடைத்தெறிந்துவிட்டு மீதியைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களைப் பற்றி நீங்கள் சிந்திக்க முடியுமா என்று அரண்மனையில் வாழ்கின்ற அன்றைக்கு ஆதிக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்களை எல்லாம் மனதிலே வைத்துத்தான் இப்போது காலில் குத்திய முள் பாதியில் ஒடிந்துவிட்டு, மீதியைப் பற்றி நினைக்க சிந்தனை இல்லாமல் இப்போது மக்கள் இருக்கின்றார்களே, அந்த இலட்சக்கணக்கான மக்களைச் சிந்தித்துத்தான் இன்றைக்கு மாண்புமிக்க முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கவர்னர் உரையில் அற்புதமான திட்டங்களை அள்ளி வீசியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-20*

42 ஆண்டுகளுக்கு முன்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாடோடி மன்னனில் என்ன கனவெல்லாம் கண்டாரோ அந்தக் கனவுகளை நனவாக்குகின்ற விதத்திலே இன்றைக்கு கவர்னர் உரையிலே தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் வீழ்ந்து கிடக்கின்ற, அல்லலுக்குள்ளாகிக் கிடக்கின்ற மக்களுக்கு அந்தத் திட்டங்கள் வந்திருக்கின்றன.

நேற்று அவர்கள் சொன்னார்கள், இது குறைவு. இன்னும் நிறைய இருக்கின்றன; கொஞ்சம் கொஞ்சமாக 5 ஆண்டுக் காலத்தில் காட்டுகிறேன் என்று. நான் பணிவோடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நீங்கள் கடைபிடிக்கின்ற இந்தக் கொள்கைகள், உங்கள் அணுகுமுறை, உங்களின் இதமான புன்னகை, நீங்கள் இப்போது மக்களிடத்திலே வருகிற அந்த 'ஜோர்' (மேசையைத் தட்டும் ஒலி) பழக்கம் தொடர்ந்து வந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை எந்தக் கொம்பனாலும் எதுவும் பண்ணமுடியாது, எதுவும் செய்ய முடியாது என்பதைக் கவனத்திலே வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் ஒரு புரட்சிமிக்க சரித்திரம். இன்றைக்கு அந்தச் சரித்திரத்தை உருவாக்கியிருக்கின்ற பெருமைக்குரிய இடத்திலே இருக்கும் உங்களிடத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவிக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள். பிறந்தநாள் என்று சொல்லி 77 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினருக்கு நலநிதி என்று கலைஞர் அறிவித்தார். நான் பணிவோடு புரட்சித் தலைவியைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கோடி ரூபாய் என்று அறிவித்து நீங்கள் அதைச் செயல்படுத்துங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) It is my humble submission. பாதித்திட்டத்தை நாங்களே மக்களோடு நின்று நிறைவேற்றி



விடுவோம். பிறகு என்ன? ஜோராகப் பறக்கின்ற புகழும் பெருமையும் உங்கள் கிரீடத்திற்கு தானாகவே வந்து சேரும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோரும் குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிரச்சினை மதுரை மத்திய தொகுதியை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அன்னை மீனாட்சி ஆலயத்தைப் பெற்றிருக்கக்கூடிய மதுரை மத்திய தொகுதியில் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பக்தர்கள் வருகிறார்கள். அவர்கள் நிறைய வருகிறபோதும், போகின்றபோதும் மதுரை மிகப் பெரிய ஏக்கத்திலேயிருந்து தண்ணீரைப் பார்க்கிற மாதிரி ஆகிவிட்டது. உரிய நேரத்திலே வருவதும் இல்லை. 4 நாள், 5 நாளுக்கு ஒரு முறை என்று கொடுக்கிறபோது, மக்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். எப்படியாவது ஒரு திருவிழா என்று மாறி மாறி வந்துகொண்டேயிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இடைவிடாது மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுப்பதற்கு அங்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. எல்லீஸ் நகர். இன்னொன்று திடீர் நகர். அது திடீர் நகர் என்றுதான் பெயரே தவிர, அந்த நகர் தோன்றி 45 வருடங்கள் ஆகிவிட்டன. (சிரிப்பு) நான் அந்தப் பகுதியிலே கேட்டேன். வரலாற்றுச் சிறப்பு மிக்க அளவில் இது ஒரு மிகப் பெரிய தொன்மையான நகர் என்று சொல்வதைவிட்டு ஏனப்பா திடீர் நகர் என்று பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டால் அது வருடத்திற்கு வருடம் திடீர், திடீர் என்று செத்துப் பிழைக்கிற மக்கள் இருக்கிற நகர். அதனால்தான் அப்படியொரு தோற்றத்தோடு இருக்கிறது என்று சொன்னார்கள். பாவம், காலை நீட்டிப் படுத்தால் கரண்டைக் காலுக்குக் கீழேயிருக்கிற பாதம் வீட்டிற்கு வெளியே வந்துவிடும். அப்படி ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாயுள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு இந்தப் பிரச்சினையைக் கேட்டு முடிப்பார்கள் என்பதால் ஒரு மிகப் பெரிய அன்பு, நல்ல எண்ணம், நல்ல உணர்வால் நான் தமிழகத்து முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 10 அடி, 15 அடிகூட நீள அகலம் இருக்காது. 15, 20 வருடங்களாக பட்டா தருகிறோம்; பட்டா தருகிறோம் என்று சொல்லி தொடர்ந்து கொடுக்காமலேயே அந்த மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டும்.

அதே நேரத்திலே இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். எல்லீஸ் நகர்ப் பகுதி. அங்கேயும் இதே குறை. எப்படியென்றால் பத்திரம் போட்டு முடிக்கப்பட்டுவிட்டது, இன்ன விலைக்கு என்று சொல்லி. அது போட்டு முடிக்கப்பட்டு, சில ஆண்டுகள் கழிந்துவிட்ட காரணத்தினால் கடந்த ஆட்சியில் சதுர அடிக்கு 694 ரூபாய் என்று சொல்லி, இப்போது விலையைப் போட்டு வைத்துவிட்டார்கள். தாங்காது, தாங்கவே தாங்காது. பல இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்குகிற அளவிற்கு அந்த மக்களுக்கு வசதி இல்லை. அன்றாடம் காய்ச்சிகள் அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒன்று சொல்வார்கள். பழைய சோற்றுக்கு பச்சை மிளகாய் கேட்டு அழுகிற கூட்டத்தின் உள்ளே, அல்வா எடுத்துக்கொண்டு சீனியிலே தொட்டுச் சாப்பிட வேண்டும் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு புசித்துப் புளித்துப் போனவர்களுக்கு அது புரியாது என்பார்கள். ஆனால், அங்கே பசித்துக் கிடக்கிற கூட்டத்தின் உண்மையை, அவர்கள் படுகிற கஷ்டத்தை உணர்ந்த தாயான தமிழகத்து முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கஷ்டத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு உருவாக்கித் தரவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், நீங்கள் வாக்காளராக இருக்கிற தொதியையும் சேர்த்துப் பேசுவதாக இருந்தால் 5 நிமிடம் தருகிறேன்.

**திரு. மு.அ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றி. ஏனென்றால் நான் ஓட்டு போட்டிருக்கிறேன். என்னுடைய ஓட்டால் வெற்றி பெற்று வந்தவர். (சிரிப்பு) அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் இந்த அவைக்குச் சொல்லிவிடுகிறேன். பணிவோடு தெரிவிக்கிறேன். என்னுடைய திருமங்கலத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வந்துவிட்டார். அவருடைய மதுரைக்கு நான் போய் விட்டேன். ஆக ஓட்டுப் போட அவர் என் தொகுதிக்கு வர, நான் ஓட்டுப் போட அவர் தொதிக்குப் போனேன். ஆக அந்தத் தொகுதிக்கும் சேர்த்து என்ற அடிப்படையில் கொடுத்த இந்த ஐந்து நிமிடத்திற்கு மிக்க நன்றி. நான் நிறைய நேரம் பேசியே பழகிவிட்ட காரணத்தால் சுருக்கமாகப் பேசுவதற்கு சிரமமாக இருக்கிறது. இருந்தாலும், இது கன்னிப் பேச்சு. ஏதாவது ஒன்றிரண்டு அப்படியே பிழையாக இருந்துவிட்டால் அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சுதந்திரமாக விரும்பியபடி பேசித் திரிந்த காரணத்தினால் இங்கே வருகிறபோது



உங்களை நான் பார்த்துவிட்டுப் பேச ஆரம்பித்துவிட்ட காரணத்தினாலேதான் இந்தக் கவிதையும் இலக்கியமும் எனக்கு வந்தது. ஏனென்றால் அவர்களுடைய சொல்லையும், சுவையையும் ரசித்துப் பழக்கப்பட்ட புரட்சித் தலைவர் மேடையிலே அவர் வலது பக்கம், இடது பக்கம் நானாக இருந்து, தமுக்கத்திலே நின்று, தமிழ்நாட்டில் ஒரு பெரிய வரலாற்றை, பூகம்பத்தையே உருவாக்கியவர்கள். இதை அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் இருப்பார்கள். ஆகவே நான் சொல்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்சினை. பெரியார் பஸ் நிலையம் என்று என் மத்தியத் தொகுதியிலே இருக்கிறது. எல்லோரும் மதுரைக்கு வந்தாகிவிட்டது என்றாலே இறங்குவது பெரியார் பஸ் நிலையத்தில்தான். அதற்குப் பக்கத்திலே திருவள்ளுவர் பஸ் நிலையம். எல்லாம் அரசு போக்குவரத்துக் கழக பஸ் நிலையங்கள்தான். ஆனால், பெரியார் பஸ் நிலையம், பெரியார் பஸ் நிலையம் என்றுதான் பஸ் வரும். அங்கே எல்லாம் இப்போது நகரத்திற்குள்ளே பஸ் வர முடியாதபடி கடந்த ஆட்சியிலே 27 கிலோ மீட்டர் சுற்றி மதுரைக்கு வருகிற மாதிரி ஒரு பாதையைப் போட்டுவிட்டார்கள். அது By pass road என்று சொல்கிறார்கள். By pass road என்பது மக்களின் நன்மைக்கு; நான் மறுக்கவில்லை. ஆனால் மக்கள் நகரத்திற்குள் வர வேண்டும் என்றால் அவர்கள் எல்லையிலே இறங்கி, இன்னொரு வண்டிக்கு மாறி, பிறகு அடுத்த வண்டியிலே ஏறி, ஆட்டோவிலே ஏறி மூன்று தடவை செலவழித்து நகரத்திற்குள் வர வேண்டும். வண்டியிலே திரும்பவும் இவர்கள் வெளியே செல்ல வேண்டும் என்றால் மதுரையையே முழுக்கத் தாண்டிப்போய் பிறகு ஒருங்கிணைந்த மாற்றுச் சாலை, பிறகு பஸ் ஸ்டாண்ட், பிறகு ஊருக்கு அதைச் சுற்றி 27 கிலோ மீட்டர் என்று மிக, மிகக் கஷ்டப்படுத்துகிறார்கள். மிக மிகக் கஷ்டப்படுத்துகிறார்கள். பெரியார் பஸ் நிலையம் என்று முழுக்க புழங்கப்பட வேண்டும். அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், இன்றைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரிலே இருக்கிறது. அது பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அது பயன்படுத்தப்பட வேண்டும். அது பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு மாண்புமிக்க முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் Heart of the city-யில் இருக்கிறது. அது ஒரு deserted look போல், ஒரு பாலைவனம்

போல் காட்சி அளித்தால் நன்றாக இருக்காது. அது பசுமை பெற வேண்டும். மக்கள் புழக்கம் நிறைய வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த மன்றத்திற்கும், மாமன்றத்திற்கும், பேரன்புமிக்க முதல்வர் அவர்களுக்கும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வீதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களுடைய கடைகளை வைத்து பழமோ, பூவோ ஏதாவது ஒன்றை வைத்து வியாபாரம் செய்கிறார்கள். முழுக்க காவல் துறையாலே அந்த platform சுத்தப்படுத்தப்பட்டன. மக்கள் போக்குவரத்து என்று சொல்லி, அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன; மறுக்கவில்லை. மக்கள் நடந்து செல்ல வசதியாக பெரிய பாதைகள் போட்டு தரப்பட வேண்டுமென்பது நியாயமென்று நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்களை வியாபாரமே பண்ணாதே என்று சொல்லி தூக்கி அப்புறப்படுத்திவிட்டு, ஒதுக்கிவிட்டுவிட்டார்கள் கடந்த ஆட்சியிலே. அது தொடர்ந்து இந்த ஆட்சியிலே வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட அவர்களுக்கும் ஒரு புதிய வாழ்வைத் தருவதற்காக அரசுத் துறை அதிகாரிகளோடு நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவில் மேற்குத் தொகுதியாக இருந்தாலும், கிழக்குத் தொகுதி மார்க்சிஸ்ட் உறுப்பினராக இருந்தாலும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஒரு மாற்று வழி கண்டுபிடித்து, அந்த மக்களுக்கும் ஒரு நல்ல பாதையை, நல்ல வாழ்க்கையை உருவாக்கித் தருவதற்கு மரியாதைக்குரிய மாண்புமிக்க முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக, மதுரையில் மிக முக்கியமாக இருப்பது ரேஷன் பிரச்சினை. என்னுடைய பணிவான கருத்து, கேனில் தண்ணீர் வாங்குகிறோம். அதேமாதிரி ரேஷனில் மண்ணெண்ணெய் கொடுத்துவிட்டால் சிக்கலே வராது. அந்தக் கேனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, மண்ணெண்ணெயை வாங்கிக்கொள்ளலாம். ஒரு தடவை வாங்கும்போது ஐம்பது ரூபாயாகத் தெரியும். பிறகு கொடுத்துக் கொடுத்து வாங்கும்போது கஷ்டமே தெரியாது. இல்லாவிட்டால் மண்ணெண்ணெயை நம் ஆட்கள் என்ன சொன்னாலும், எந்த சர்க்கார் வந்தாலும் அப்படியே சர், சர், சர் என்று அடித்துச் சரக்கென்று ஒரு அடி அடிக்கிறான். அதிலே அரை லிட்டர் தள்ளிக்கிட்டு பொங்கிப் பெருக்கெடுத்து அது வெளியே ஓடும் என்று பார்த்தால், அது அவர் தட்டுக்குள்ளே விழுந்து கிடக்கும். இதிலே பாதிக்கப்படுவது மக்கள்தான்.





அங்கே ஒரு கமிஷன் எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது. அதற்கெல்லாம் ஒரு மாற்று வழியாகத்தான் இப்படிச் செய்தால் சரியாக வரும். பாக்கெட் போட்டு அரிசி, சர்க்கரை கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் போல மண்ணெண்ணெயைக் கேனிலே கொடுத்துவிட்டால், அந்தப் பிரச்சினை ஓரளவிற்கு தவிர்க்கப்படுவதற்கு வழி பிறக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு நிமிடம். என்னுடைய தொகுதியாக இல்லை என்று சொன்னாலும்கூட ஒரு பத்தாயிரம் பேருடைய வாழ்க்கைப் பிரச்சினையாக சபைக்கு உள்ளே வருகிறபோது என் கையிலே ஒரு மனு தரப்பட்டது. செங்கல் சூளைப் பிரச்சினை பற்றியது அது. சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களுக்கு மாத்திரம் என்று ஒரு சட்டத்தை மத்திய சர்க்கார் கொடுத்து, மாநில சர்க்கார் கடந்த ஆட்சியிலே தெரிவித்திருக்கிறார்கள். செங்கல் சூளை வைத்திருக்கக்கூடியவர்கள் மாசுக் கட்டுப்பாடு என்ற காரணத்தினாலே ஒரு பெரிய Chimney போட வேண்டும். பத்து இலட்சம் ரூபாய்க்கு அந்தச் Chimney வாங்கி அடுக்கி வைத்து அதற்குப் பிறகுதான் செங்கல் சூளையில் செங்கல் தயாரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் வருகிற 30-6-2001-ல் அவை அனைத்தும் மூடப்பட வேண்டும் என்று சொல்லி நான்கு மாவட்டங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. அது புரியவில்லை. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். குறைந்தபட்சம் இன்னும் 6 மாத காலமாவது கால அவகாசம் நீட்டித்துக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி நீட்டிக்க ஏற்பாடு செய்யப்படுகிற காலத்தில், அவர்கள் மேல் நடவடிக்கை மேற்கொள்வதற்குமுன் ஏதாவது மானியம் அல்லது உதவி செய்தால், அந்த Chimney அமைத்துக்கொள்வது எப்படி என்பதைத் தெரிந்துகொள்வார்கள். ஏனென்று சொன்னால், topography தரப்படவில்லை, அந்த Chimney அமைக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர, அதற்கான வரைபடமோ அல்லது அந்த அமைப்போ தரப்படாமலேயே அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எங்களைப் பாதிக்கிறது என்று சொல்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் நாதியற்று வீதிக்கு வந்துவிடக்கூடாது. அதனால் சொல்கிறேன். புரட்சிகரமான சிந்தைக்கு சம்பந்தப்பட்ட எங்களது மரியாதைக்குரிய மாண்புமிக்க முதல்வரே, உங்களுடைய தாயுள்ளத்தாலே தமிழகம் பிழைக்கவேண்டும். அழிந்து கிடக்கிற மக்கள் வாழக்கைக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்படவேண்டும். உங்களுடைய அன்பு

[திரு. மு.அ. ஹக்கீம்] [2001 மே 29

என்கிற வெளிச்சத்திலே தமிழகத்திலே இருக்கிற இருள் நீங்கி ஒரு நல்ல எதிர்காலத்தை, வளமான வாழ்வை, நலமான எதிர்காலத்தை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும்.

*பிற்பகல் 12-30*

எங்கள் மரியாதைக்குரிய தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, அவர் நல்லாட்சி தருவார் என்று சொன்னார்கள். எந்த நம்பிக்கையில் சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். எனக்கு அவரைப் பற்றித் தெரியும், அவர் நல்லாட்சி தருவார், அவர் நல்லாட்சி தருவார் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பத் திரும்ப உங்களைப் பற்றிச் சொன்னார் பாருங்கள். தலைவர் மூப்பனார் சுலபத்தில் யாரையும் பாராட்டவே மாட்டார். எங்களுக்குத் தெரியும். சுலபத்தில் அவர் வார்த்தைகளை விடவே மாட்டார். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள். இப்போது சொல்கிறேன், கண்ணியத்திற்குரிய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள், மாண்புமிக்க முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஓர் அற்புதமான ஆட்சியைத் தருவார்கள் என்று சொன்னாரே, அது புதிய வரலாறாக நாளை ஜொலித்து மக்கள் மத்தியிலே வரட்டும். இந்திய நாட்டு சரித்திரத்திலே இந்த 2001 ஆம் ஆண்டில், 21 ஆம் நூற்றாண்டில் புரட்சித் தலைவி மாண்புமிக்க முதல்வர் தலைமையில் உருவாக்கித் தந்த இந்த அற்புதமான ஆட்சிதான் வரலாற்றில் எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று சொல்லத்தக்க அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சி சிறக்கட்டும்; உங்கள் ஆட்சியில் வளங்கொழிக்கட்டும்; உங்கள் சிந்தனைகள் செழிக்கட்டும்; உங்கள் புகழ் கொடி கட்டிப் பறக்கட்டும். உங்களுடைய தலைமையில் தமிழகம் தலைநிமிர்ந்து உயர்ந்து நல்ல வாழ்வைப் பெறட்டும். இறைவனை வணங்குகிறோம், மக்கள் துணை இருப்பார்கள். நலமே சூழ இலட்சியப் பயணத்தைத் தொடருவோம். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார் அவர்கள்.

* **திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். சமத்துவத்தையும் சமதர்மத்தையும் இந்த நாட்டிற்குத் தந்து, ஏழையெளிய மக்களெல்லாம் இந்தச் சபையிலே உறுப்பினர்களாக வரவேண்டுமென்று சட்டத்தை



2001 மே 29] [திரு. கு. ஜெயக்குமார்]

இயற்றிச் சென்ற அறிவுலகக் கோமான், அரசியல் மாமேதை பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத் தேர்தலானாலும், சட்டமன்றத் தேர்தலானாலும் என்மீது நம்பிக்கை வைத்து, தேர்தலிலே போட்டியிடுங்கள் என்று எனக்கு தேர்தலில் போட்டியிடுகிற வாய்ப்பை அளித்து, என்மீது அன்பையும் கனிவையும் காட்டுகின்ற, எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு என்னுடைய மேலான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மிக அதிக வாக்குகள் பெற்று இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக உங்கள் முன்னே நிற்கிறேன். மதிப்பிற்கும் மரியாதைக்கும், போற்றுதலுக்கும் புகழ்தலுக்கும், வாழ்த்துதலுக்கும் வணங்குதலுக்கும் உரிய தமிழகத்திற்கே இன்றைக்கு புரட்சித் தலைவியாக இருக்கின்ற அம்மா அவர்களுடைய ஆசியுடனும், அவர்களுடைய தொண்டர்களுடைய உதவியுடனும், மற்றும் அத்தனை தோழமைக் கட்சிகளுடைய உதவியுடனும் நான் இங்கே இந்த அவையிலே இன்று இருக்கிறேன். அவர்கள் உதவி இல்லாவிட்டால் நான் இங்கு வந்திருப்பேனா என்று எனக்குத் தெரியாது (மேசையைத் தட்டும் ஒலி). ஆகையினால், என்னுடைய முழு மனதுடனான வாஞ்சையுடனும், அன்புடனும் என்னுடைய வெற்றியை புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவரும் பெருவாரியாக எனக்கு வாக்களித்தார்கள். என்னைப் பற்றி அங்கே டெல்லியைச் சேர்ந்தவன் இவன், சென்னையைச் சேர்ந்தவன் இவன், வெளியூர்க்காரன் என்றெல்லாம் சொல்லி என்னை எதிர்த்தவர்கள் சொற்போர் நடத்தினார்கள். அவை எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து எனக்கு வாக்களித்தார்கள். ஏனென்றால், புரட்சித் தலைவி அவர்கள் அவையில் முதலமைச்சராக வரவேண்டுமென்பதற்காக; (மேசையைத் தட்டும் ஒலி) இதில் மாற்றுக் கருத்துக்கு இடமே கிடையாது. ஆக, நாமக்கல் தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே இந்த அருமையான ஆளுநர் உரையின் மீது நடக்கின்ற இந்த விவாதத்திலே பங்கெடுப்பதற்காக வாய்ப்பளித்தமைக்காக இந்தச் சபைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. கு. ஜெயக்குமார்] [2001 மே 29

*பிற்பகல் 12-35*

ஆளுநர் உரையிலே செயல் முறைகளையும், அரசியல் நோக்கங்களையும்தான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். விரிவான குறிப்புகள் இல்லை. இந்த அரசு பொறுப்பேற்ற 8 நாட்களுக்குள்ளாக, இந்த ஆளுநர் உரையைத் தயார் செய்ய முனைந்து, சமர்ப்பித்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகோதரர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியிலே இருக்கின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் அவர்கள் பேசுகின்றபோது இந்த உரையை எதிர்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு எதிர்ப்பது பொருத்தம் அல்ல என்ற கருத்தினை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட ஒருசில முறைகள் எழுந்து நின்று, இந்த விளக்கத்தைத் தந்தார்கள். அவர்கள் விளக்கம் தந்த பிறகும் இந்த உரையின் மீது எதிர்ப்பு வாதம் வைப்பது என்பது பொருந்தாத ஒன்றாகும். ஒரு சிலர் இந்த உரையில் ஒன்றுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். அரசின் கருவூலத்திலே ஒன்றுமே இல்லாமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த உரையில் இருக்கின்ற ஒவ்வொரு திட்டமும் போற்றப்பட வேண்டிய திட்டம்; புகழப்பட வேண்டிய திட்டம்; பாராட்டுதலுக்கான திட்டம்; மக்களுடைய மேம்பாட்டிற்கான நல்ல திட்டம். ஒருசில திட்டங்களை மட்டும் இங்கே குறிப்பிடுவது இந்த நேரத்தில் சாலப் பொருந்தும் என்று கருதுகின்றேன். அத்தனை திட்டங்களையும் விரிவாக இங்கே பேசினால் காலம் இருக்காது என்பதை உணர்ந்து பேசுகிறேன்.

அரசின் திறமையான நிர்வாகத்திற்கு அடிக்கல்லாக இருப்பது அரசு உயர் அதிகாரிகள். அவர்கள் பாரபட்சமின்றி வேகத்தோடும், விவேகத்தோடும் செயல்பட்டால் தான் ஆட்சி நலமாக நடக்க முடியும். ஆக, அவர்களை ஊக்குவிப்பதற்காக இந்த அரசு இருக்கின்றது என்று எடுத்த எடுப்பிலேயே கூறியிருக்கின்றார்கள்.

தீவிரவாதம், பிரிவினைவாதம், பயங்கரவாதம் இன்று நாட்டை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது. அவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்ற ஒரு கருத்தை இதிலே தெரிவித்திருக்கின்றார்கள். காவல் துறை என்பது சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுகின்ற துறை; உலக அளவிலே ஓர் உன்னதமான துறையாக இருக்க வேண்டும். அந்த அளவுக்கு இந்தத் துறை மேம்படுத்தப்பட வேண்டும் என்று



2001 மே 29] [திரு. கு. ஜெயக்குமார்]

கூறியிருக்கின்றார்கள். இது போற்றத்தக்க நல்ல திட்டமாகவே இருக்கின்றது.

துறைமுகங்களை மேம்படுத்துவதும், கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை விரைவுபடுத்துவதும் முக்கிய திட்டங்களாகும். இவை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும், விவசாயத்திற்குத் தேவையான நீர்ப் பிரச்சினையையும் விரைவிலே முடித்து வைக்கும் என்பதற்கான நல்ல திட்டங்களாகும்.

ஊரகப் பொருளாதாரம்தான் நாட்டிற்கு முதுகெலும்பு. நவீன விவசாய முறை, தரிசு நிலத்தைப் பயன்படுத்துவது மற்றும் சொட்டுநீர்ப் பாசனம் போன்றவற்றைப் பயன்படுத்தி இந்தப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்பது போற்றத்தக்க திட்டங்களாகும்.

சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படாமல், அவை நலிந்துவிட்டால் பெரும்பாலான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். இந்தச் சிறுதொழில்கள் மேம்பாட்டிற்கு எதிராக இருக்கின்ற அரசாணை எண் 75-ஐ உடனே இரத்து செய்வதாக அறிவித்திருப்பது போற்றத்தக்க ஒரு திட்டமாகும்.

Real Estate வியாபாரத்தை ஊக்குவிக்க வேண்டும். கட்டுமானப் பணியில் இருக்கின்ற தொழிலாளர்கள் சிமெண்ட் விலையுயர்ந்த மாத்திரத்திலே நலிந்துபோய் இருக்கின்றார்கள் என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம். ஆக, இதுவும் ஒரு சிறப்பான திட்டமாகும்.

தேர்தல் காலத்திலே ஏதோ ஓரிரு கட்சிகள் வெவ்வேறு அணியிலே சென்றுவிட்ட பிறகு, நம்முடைய மதச்சார்பற்ற முன்னணியை எதிர்த்துப் பேசுகின்றபோதெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே இருக்கின்ற முன்னணி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான முன்னணி என்று ஒருசிலர் பிரச்சாரம் செய்து வந்ததை நான் செய்தித்தாள்களில் படித்தேன். அவர்களிடம் கலந்துரையாடி அப்படியில்லை என்றும் கூறினேன். அதற்குப் பதிலளிக்கும் வகையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், அவர்களுடைய மேம்பாட்டிற்கும் நல்ல பல திட்டங்களை நிறையவே இங்கே அளித்திருக்கின்றார்கள். அவை போற்றத்தக்க திட்டங்கள்.

ஊரக மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டை உயர்த்தி 25 சதவீதமாகச் செய்திருக்கின்றார்கள். இதுவும் வரவேற்கத்தக்கது.

பெண்கள் துயர் துடைக்க கள்ளச் சாராயத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். இதுவும் வரவேற்கத்தக்க திட்டம். இந்தக் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதன் மூலம், பெண்கள் துயரத்தை மட்டும் நாம் துடைக்கவில்லை; இந்தச் சமுதாயத்திலே நடக்கக்கூடிய சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் அத்தனையும் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதை அரசு மிகவும் வேகத்தோடு செயல்படுத்த வேண்டுமென்று நான் விருப்பப்படுகின்றேன்.

*பிற்பகல் 12-40*

பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வரவேற்கத்தக்கது. அந்தச் சமுதாயம் மேம்படுத்தப்பட வேண்டும். மீனவர்கள் தங்கள் தொழிலைச் சிறப்பாகச் செய்திட, நலமாக, வளமாகச் செய்திட நவீன முறையிலே மீன்கள் அடர்த்தி எங்கே இருக்கிறது என்பதை விஞ்ஞான முறையிலே கண்டறிய இருக்கிறார்கள். ஆகமொத்தத்தில் மகத்தான திட்டங்களை இங்கே செயல்படுத்துவதற்கு முனைந்திருக்கிறார்கள்.

ஆளுநர் உரையிலே 3-வது பக்கத்திலே ஒரு திடுக்கிடும் தகவலை நாம் பார்த்தோம். ஒரு கோடி மக்கள் அடிப்படை உரிமையை இழந்திருக்கிறார்கள். வாக்களிக்க முடியாத நிலைமையை அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, என்னுடைய நாமக்கல் தொகுதியிலே, நாமக்கல் நகரத்திலே 17 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பார்க்கின்றபோது, வாக்காளர் பட்டியலில் வாக்களிப்பதற்கு இருந்தவர்களைவிட, நீக்கப்பட்டவர்கள் அதிகமாக இருந்திருக்கிறார்கள் அங்கே. என்னைப் பொறுத்தமட்டில், இது ஏதோ சதித் திட்டம் என்றுதான் தோன்றுகிறது. இந்த முன்னணியைத் தோற்கடிப்பதற்காகச் செய்யப்பட்ட சதித்திட்டம் என்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, இதற்காக வேண்டி ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்தில் (மணியடிக்கப்பெற்றது) கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நாமக்கல் என்றதும் மக்கள் நினைவிற்கு வருவது கோழிப் பண்ணை ஆகும். இந்தக் கோழிப் பண்ணைகள் மிகவும் நலிந்த நிலையில் இப்போது இருக்கின்றன.





தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்படும் ஒரு கோடியே இருபது இலட்சம் முட்டைகளில், ஒரு கோடி முட்டைகள், நாமக்கல்லில் மட்டும் உற்பத்தியாகின்றன. ஆனால், இப்போது, இந்தக் கோழிப் பண்ணைக்குத் தேவையான தீவனத்திற்கு மக்காச்சோளம் மிக முக்கியமானது. இந்திய உணவுக் கழகம் (F.C.I) மக்காச்சோளத்தைத் தேக்கி வைத்து, சரிவர விநியோகம் செய்யாத காரணத்தினாலே, இந்தத் தொழில் மிகவும் நலிந்திருக்கிறது. இப்போது உலகத்திலேயே நாமக்கல் பகுதியிலிருந்து, அரபு நாடுகளுக்குச் செல்லுகின்ற முட்டைகளின் அளவு, உலக அளவிலே 5-வதாக இருக்கிறது. இந்த நலிந்த நிலை மாறிட, அங்கே இருக்கின்ற கோழிப் பண்ணைகள் வளமாக நடந்திட, அதற்கு வேண்டிய மக்காச்சோளம் மலிவாகக் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நல்ல விலைக்கு முட்டைகளை விற்பதிலும், விவசாயப் பொருட்களை விற்பதிலும் முக்கியமான ஒன்று, அவற்றைத் தேக்கி வைத்துப் பதப்படுத்தி விற்பதாகும். இதற்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அங்கே தேவையானது என்று கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கே நான் சொல்லி அமர்வது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகிறேன். இங்கே கவர்னர் உரையிலே பேசும்போது, அத்தனை திட்டங்களைப் பற்றியும் பேசினார்கள். அத்தனை திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு பொருட்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பொருட்களை எங்கெங்கெல்லாம் இருந்து இந்த அரசு கொண்டுவரப் போகிறது என்றும், எவ்வாறெல்லாம் செய்தால் நலமாக இருக்கும் என்றும் பார்க்கின்றபோது, மிகவும் குறைந்த வட்டியிலும், வட்டியில்லாமல் கிடைக்கக்கூடிய I.D.A. நிதி, I.M.F. நிதி, K.F.W. ஜெர்மன் நிதி, D.E.C.F.ஜப்பான் நிதி ஆகியவற்றைப் பெற்று மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்தினால், இந்த அரசுக்கு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு மிக எளிதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மற்றும் ஒரே ஒரு கருத்து, அது W.T.O. அதாவது உலக வர்த்தக மையத்தைப் பற்றியதாகும். அந்த ஒப்பந்தத்தைச் செய்ததன் மூலம் நம்முடைய விவசாயிகள் ஒருசிலர் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். அந்த W.T.O.-ஐப் பற்றி இந்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, இதுவரையில் சரியான கருத்து எதுவும் கொண்டிராத காலகட்டத்திலே இருக்கின்றன. இதன்மீது ஒரு விரிவான விவாதம் வைத்து, எவையெல்லாம் நம்முடைய தமிழகத்திற்குப்

[திரு. கு. ஜெயக்குமார்] [2001 மே 29

பயன்படக்கூடியதாக இருக்குமோ, அவற்றையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு, பயன்படாத விதிமுறைகளுக்கு எந்த மாற்று விதிமுறைகளை நாம் எடுத்து வைக்கவேண்டும் என்பதைக்கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கும், தமிழக சட்டப் பேரவைக்கு தேர்ந்தெடுத்த என்னுடைய காரைக்குடி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயகத்திலே தேர்தல் மூலமாக ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவது சகஜம். அதிலும்கூட பல கட்சி ஜனநாயக முறை இருக்கின்ற சூழலிலே, கட்சிகள் அணி மாறுவதாலும்கூட ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆனால் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதற்கு எது காரணமாக இருந்தாலும், மக்கள் தீர்ப்பை ஏற்று அதற்குத் தலைவணங்குவது ஜனநாயக மரபு என்கின்ற முறையிலே, மக்கள் தீர்ப்பை ஏற்று, இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவருடைய கூட்டணிக் கட்சியின் முன்னோடிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இது விஷயம் பேசுகின்றபோது நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், ஜாதிக் கட்சிகளையும், மதவாதக் கட்சிகளையும் இந்தத் தேர்தலிலே மக்கள் தோல்வியுறச் செய்ததாக ஒரு கருத்தினைச் சொன்னார்கள். 1999-ஐ அவருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்போது இவர்கள் எந்தக் கட்சிகளோடு கூட்டணி வைத்திருந்தார்களோ, அப்போது அவர்கள் அரசியல் கட்சிகள், இப்போது எங்களோடு வந்தவுடனே ஜாதிக் கட்சிகளாகி விட்டார்களா? 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற கதையாகப் போயிருக்கிறது. ஆனால், ஜனநாயகத்திலே எண்ணிக்கையின் அடிப்படையில் மக்கள் பிரச்சினைகளை நாம் தீர்த்துவிட முடியாது.

(மாண்புமிகு திரு. செ. செம்மலை எழுந்து நின்றார்.)



2001 மே 29]

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், கன்னிப் பேச்சு, விட்டுவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** 1962-லே மாநிலங்களவையிலே அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது சொன்னார்கள். I am not bashful of interruption. I like it என்று. ஆகவே, அவர் விரும்பினால் பேசலாம். I yield for him.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் சொல்லுங்கள்.

* **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதிக் கட்சிகள் என்ற பெயர் வைத்ததே அவர்களுடைய கூட்டணிக் கட்சிகளுடைய தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்பதை அவருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டபோது, ஜாதிக் கட்சிகளை நான் அரவணைக்கிறேன். ஊக்கப்படுத்தவில்லை என்கிற கருத்தை அவரே சொல்லியிருக்கிறார். எனவே, அவர்களுடைய கூட்டணிக் கட்சித் தலைவரே ஜாதிக் கட்சி என்ற பெயர் வைத்த பிறகுதான் மற்றவர்கள் ஜாதிக் கட்சி என்று அழைத்தார்களே தவிர, பெயர் வைத்தது அவர் கூட்டணி கட்சித் தலைவர்.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, என்ன?

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற அந்த அமைப்பை உருவாக்கினார்களே தவிர, அவர் என்றைக்கும் ஜாதிக் கூட்டணி என்று சொன்னதே கிடையாது, கேள்வி கேட்டவர்கள், எதிரணியில் கேட்டபோது, இது சாதிக்கும் கூட்டணி என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. போய்விட்டது, ராஜீவ் காங்கிரஸ் போய்விட்டது. அதற்குப் பிறகு, புதிய கட்சிகள் வந்து சேர்ந்தன. அதைத்தான் அமைச்சர் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் குறிப்பிட்டது அவருடைய விருப்பம். ஆனால், எங்கள் தலைவர் அப்படி என்றைக்கும் எந்த நேரத்திலும் குறிப்பிட்டதே கிடையாது என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

[2001 மே 29

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் ஜாதிக் கட்சிகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால்கூட, அவர் அதைத் தவிர்த்திருக்கலாம். நாங்கள் ஜாதிக் கட்சிகள் என்று சொல்லமாட்டோம். ஜாதிக் கட்சிகள் அல்ல, இவை அரசியல் கட்சிகள் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொல்லியிருப்பாரேயானால், அது வரவேற்கத்தக்கது. ஆனால், பத்திரிகையாளர்கள் சொல்லியிருந்தால்கூட, அதை அவரே ஒத்துக்கொண்டு, ஜாதிக் கட்சிகளை நான் ஊக்கப்படுத்தவில்லை, ஆனால் அரவணைத்துச் செல்கிறேன் என்று அவரே சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன விளக்கம், இது ஜாதிக் கூட்டணி அல்ல, சாதிக்கும் கூட்டணி என்று. ஆனால், சாதிக்க முடியாமல் போய்விட்டது. அது வேறு விவகாரம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

**திரு. எச். ராஜா:** அதாவது என்னுடைய கேள்வி, தானே செய்த ஒன்றை, அடுத்தவர் செய்யும்போது விமர்சித்ததை மாத்திரமே நான் இங்கே எடுத்துச் சொல்ல முயன்றேன். ஆனால் ஜனநாயகத்திலே பிரச்சினைகளுக்குத் தீர்வை எண்ணிக்கையின் அடிப்படையிலே நாம் எடுத்துவிட முடியாது. எண்ணங்களின் அடிப்படையிலே, கருத்தின் அடிப்படையிலேதான் நாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற காரணத்தால்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களும் consensus and co-operation—கருத்து ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பின்-அடிப்படையிலே மத்தியிலே ஆட்சியை நடத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே கூட்டுறவு மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்த சுமுகமான மத்திய, மாநில மற்றும் பல மாநில நல்லுறவுகளுக்கு இவ்வரசு பாடுபடும் என்று தன்னுடைய உரையிலே கூறியிருப்பதை நான் இங்கே வரவேற்கிறேன்.

சென்ற தேர்தலிலே தமிழகம் முழுவதும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு இருக்கிறது என்பது பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏப்ரல் மாதம் 2, 3 தேதிகளில் புகைப்படம் எடுத்த வாக்காளர்களின் பெயர்கள்கூட, ஏப்ரல் மாதக் கடைசியில் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. முதல் வாரத்தில் இருந்தவர்கள், புகைப்படம் எடுத்தவர்கள் எப்படி அங்கே வாக்காளராக இல்லாமல் போனார்கள் என்கிற பிரச்சினை எழுகிறது.



2001 மே 29] [திரு. எச். ராஜா]

ஆனால், தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியலிலே இடம்பெறச் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு இருக்கிறது. அவர்கள் அதைத் தட்டிக் கழித்திட முடியாது.

என்னுடைய காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் மாத்திரம் 30,000 தகுதிபெற்ற வாக்காளர்கள், அடையாள அட்டை உள்ளவர்கள், வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அடையாள அட்டை பெற்ற வாக்காளர் என்று சொன்னால், வாக்களிப்பதிலே ஆர்வம் உள்ளவர் என்று பொருள். ஆகவேதான், இங்கே வாக்களித்த சதவிகிதம் குறைந்திருப்பதற்கு, அது ஒரு முக்கிய காரணம். எனவே, தேர்தல் ஆணையம் தன்னுடைய கடமையை முழுமையாக, செம்மையாகச் செய்வதற்கு அரசு அவர்களுடன் தொடர்பு கொண்டு வலியுறுத்திட வேண்டும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

அதேபோல, கவர்னர் அவர்களுடைய உரையிலே, தீவிரவாதம், பிரிவினைவாதம் மற்றும் அனைத்து வகையிலான பயங்கரவாதத்தையும் இரும்புக் கரங்கொண்டு அடக்க இவ்வரசு முயற்சிகள் மேற்கொள்ளும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக இதை நான் மனமார வரவேற்கிறேன். இதற்கு முழுமையான ஆதரவு நிச்சயமாக உண்டு. அதிலே குறிப்பிடப் பட்டிருக்கின்ற, தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் மீட்புப் படை போன்ற தீவிரவாத அமைப்புகளோடு-இன்று பல்வேறு காரணங்களுக்காகத் தலையை வெளியே காட்டாமல் இருந்தாலும்-மதவாத, பயங்கரவாத அமைப்புகளும் இருக்கின்றன. அது தொடர்பாகவும் அரசு விழிப்புணர்வோடு எச்சரிக்கையோடு இருந்திட வேண்டும்.

இதுகுறித்துப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், கட்டப் பஞ்சாயத்தை ஒழிக்க வேண்டுமெனப் பேசியிருக்கிறார்கள்; மனமார வரவேற்கிறேன். மக்களுடைய பிரச்சினைகளுக்கு காவல் துறை மூலமாக, நீதிமன்றத்தின் மூலமாகத்தான் தீர்வு காணப்பட வேண்டும்; தனி நபர்கள் மூலமாக அல்ல. ஆனால், அம்மாதிரி கட்டப் பஞ்சாயத்து செய்பவர்களை நடமாடும் நீதிமன்றங்களாகச் சித்தரிக்கின்ற பழக்கம் அவர்களுடைய கட்சியிலேயே இருக்கிறது. அதையும் அவர் நிச்சயமாக எதிர்ப்பார் என்று நான்

எதிர்பார்க்கிறேன்; விரும்புகிறேன். அவ்வாறு அவர் செய்ய முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முல்லைப் பெரியாறு அணை பற்றி, அதிலே நீரைத் தேக்குகின்ற அளவின் உயரத்தை 136 அடியிலேயிருந்து 152 அடியாக உயர்த்த வேண்டும் என்பது, தென் மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகளுடைய தணியாத தாகமாக, தீராத கோரிக்கையாக இருந்து வருகிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நிபுணர் குழுவோடு திருவனந்தபுரத்திற்குச் சென்று, கம்யூனிஸ்ட் முதலமைச்சர் மாண்புமிகு திரு. ஈ.கே. நாயனார் அவர்களைச் சந்தித்து, இதற்குக் கேரள அரசு ஒப்புதல் தர வேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்தார்கள். இதற்காக ஒரு நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டு, நீரைத் தேக்குகின்ற அளவின் உயரத்தை 152 அடியாக உயர்த்துகின்ற காரணத்தால் அணைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கம்யூனிஸ்ட் அரசாங்கம், கேரளத்திலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இப்பொழுதும் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அன்பர்கள், இங்கேயுள்ள விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்காக முல்லைப் பெரியாறு அணையிலே நீர் தேக்குகின்ற அளவின் உயரத்தை 152 அடிக்கு உயர்த்த உங்கள் கட்சி ஆளுகின்ற கேரள அரசை ஒப்புக்கொள்ளச் செய்யாமல், நீங்கள் இங்கே விடுகின்ற கண்ணீர், முதலைக் கண்ணீராக, நீலிக் கண்ணீராகத்தான் இருக்கும் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நானே சொல்லிவிடுகிறேன். அதாவது திரு. ராஜா அவர்களே, இங்கேயுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் 152 அடியாக உயர்த்த வேண்டுமென்ற கருத்தைத்தான் சொல்கிறார்கள். அதனால், விட்டுவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** அதாவது, நாங்கள்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர் தவறான ஒரு தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இரு அரசுகளும் பேசி ஒரு முடிவைக் காண வேண்டும் என்பதுதான். கேரள மாநிலத்திலேயுள்ள நிபுணர் குழுவினர் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். தமிழகத்திலே உள்ளவர்கள் இன்னொரு கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே, இது





சம்பந்தமாக இரு தரப்பினருடைய பிரதிநிதிகளும் உட்கார்ந்து பேசி, இரண்டு மாநிலங்களுடைய நலனையும் பாதுகாக்கும் முறையிலே, மக்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற முறையிலே ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும்.

**திரு. எச். ராஜா:** ஆகவே, இது தொடர்பாக...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன் அவர்களே, இது என்ன, கன்னிக் குறுக்கீடா? (சிரிப்பு) சரி, சொல்லுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசுகிறபோது கம்யூனிஸ்ட் அரசு என்றார். இல்லை. இல்லை. பல்வேறு கட்சிகளை உள்ளடக்கிய அரசு. முதலிலே அதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, அங்கே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

**திரு. எச். ராஜா:** தவறான கருத்து. அதாவது எங்களுடைய மத்திய அமைச்சர் திரு. ஓ. இராஜகோபால் அவர்களிடம், இந்த முல்லைப் பெரியாறு அணை விஷயத்திலே, 152 அடியாக அதை உயர்த்துவதற்காக, நீங்கள் கேரள முதலமைச்சர் மாண்புமிகு நாயனார் அவர்களிடம் தமிழகத்தின் சார்பாகவும், கேரளத்தின் சார்பாகவும் கேட்க வேண்டுமெனச் சொல்லி, அவரும் கேட்டிருக்கிறார் என்பதை நான் இந்த அரங்கத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

முன்பெல்லாம், நாடு பிடிப்பதற்கு சண்டை நடந்து வந்தது. ஆனால், எதிர்காலத்திலே it is going to be war for water. தமிழகத்திலே நிலத்தடி நீர் மிக வேகமாக கீழே இறங்கிக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் நம்முடைய முன்னோர்கள் (மணியடிக்கப்பெற்றது) கோவில்கள் வைத்து, அதற்கு முன்பாக குளங்கள் வெட்டுகின்ற பழக்கமே மழை நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்காகத்தான். ஆனால், இப்போது கோவில் குளங்களைக்கூட நிரப்பி வணிக வளாகங்கள் கட்டுகின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்க முடிகிறது. எனவே, இந்த rain water harvesting

என்பது ஏதோ ஒரு புதிய concept அல்ல. நாம் தொன்றுதொட்டுச் செய்துகொண்டிருந்த பழக்கம். எனவே, கண்மாய்ப் புறம்போக்குகள் வீட்டுமனைகளாகவும், கால்வாய்ப் புறம்போக்குகள் கடைகளாகவும் இருப்பதை மாற்றி, அரசு துணிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலமும், ஏரிகளை இணைப்பதன் மூலமும், இந்தப் பிரச்சினைக்குத் (மணியடிக்கப்பெற்றது) தீர்வு கண்டிட முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** இடையிலே குறுக்கீடு இருந்ததால் எனக்கு மேலும் ஒரு நிமிடம் பேச அனுமதிக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீட்டை நீங்கள்தான் ஏற்பாடு செய்தீர்கள். அது உங்கள் பொறுப்பு.

**திரு. எச். ராஜா:** உள்ளாட்சி மன்றங்களுக்கு விரைவிலே தேர்தல்கள் நடத்தப்படும் என்று அரசு உறுதியளித்துள்ளது. அத்துடன் உள்ளாட்சி நிருவாகத்தில் இரண்டு அடுக்கு முறைக்கு வகை செய்வதற்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களை மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும் என ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. இதற்காக 19ஆம் தேதி பிரதமருடைய தலைமையிலே 87-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவின்மீது அனைத்துக் கட்சிகளினுடைய கூட்டமானது நடைபெற்றது. ஆனால், மாநிலங்களுக்கே இதிலே முடிவு எடுக்கின்ற அதிகாரத்தைத் தருகின்ற மசோதாவுக்கு ஆளுங்கட்சியினுடைய கூட்டணியிலே இருக்கின்ற காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அன்றையதினம், அ.இ.அ.தி.மு.க. மற்றும் பா.ம.க.-வினுடைய பிரதிநிதிகளும் கலந்து கொள்ளாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதிலே கட்சியினுடைய கருத்து ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி, அதன்மூலம் விரைவாகத் தீர்வு கண்டிட தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல தமிழ்நாட்டிலுள்ள கோவில்கள், தமிழக மக்களின் பழங்கால பண்பாடு, நாகரீகம், கலை, வாழ்க்கை ஆகியவற்றைப்



பிரதிபலிக்கின்றன. கோவில்களின் முறையான நிருவாகத்தை உறுதி செய்ய இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளது என்று ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆலயங்களுடைய நிருவாகம் நல்ல முறையிலே அமைவதற்கும் தமிழகத்திலுள்ள ஆலயங்களையும், ஆலய சொத்துக்களையும் நிர்வகிப்பதற்கும், பராமரிப்பதற்கும் தெய்வ பக்தியுள்ள ஆன்றோர்கள், சான்றோர்கள் கொண்ட தனித்து இயங்கும் வாரியத்தை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இதற்கு ஏற்கெனவே, மறைந்த குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவானது நியமிக்கப்பட்டு இதனை எந்த மாதிரி நிர்வகிக்க முடியும் என்பதற்கான அறிக்கையும் அரசு வசம் இருக்கின்றது என்கின்ற காரணத்தினாலே ஆலயங்களுக்குத் தனி வாரியம் அமைத்திட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, ஆளுநருடைய உரையிலே என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. நாகலட்சுமி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசியது கன்னிப்பேச்சு என்பதனாலே அதில் நான் குறுக்கிட விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசுகின்றபோது, நான் ஆற்றிய உரையிலிருந்து எடுத்துக்காட்டிச் சொல்லி, மருமகள் உடைத்தால் மண்குடம், மாமியார் உடைத்தால் பொன்குடமா என்று கேட்டார்கள். எங்களுடைய அருமைத் தலைவர், மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்கள், பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களால் அரசியல் சாசனத்திலேயே பாதுகாப்பு கொடுக்கப்பட்ட, அந்த தலித் இன மக்களை மட்டும் தன்னுடைய கட்சியிலே சேர்த்துக்கொண்டார்களே ஒழிய, ஜாதிக்கு ஒரு தலைவரை வைத்துக் கொண்டிருக்கிற ஜாதிக் கட்சிகளை வைத்துக்கொண்டு அவர்கள் தேர்தலைச் சந்திக்கவில்லை என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

இந்துத்துவா கொள்கையை நாட்டிலே பரப்புவதற்காக ஒரு கட்சி வைத்துக்கொண்டு இருக்கிறவர்களும், அதேபோல ஜாதிக்கு ஒரு தலைவர் என்று, நேற்று பெய்த மழையிலே, இன்று முளைத்த காளான்கள் போல, தமிழகத்திலே, ஏற்கெனவே கர்மவீரர் காமராஜர், அண்ணா

[திரு. சி. ஞானசேகரன்] [2001 மே 29

போன்றவர்கள் எல்லாம் பாடுபட்டு ஒழித்த, அந்த ஜாதியை மீண்டும் இங்கே விஷ வித்துக்களாகத் தூவி இருக்கிறார்கள். இங்கே தமிழகத்தைக் கெடுப்பதற்காக உருவாகிக் கொண்டிருக்கிற அந்தக் கூட்டணியை வைத்துக்கொண்டு நீங்கள் தேர்தலை சந்தித்த காரணத்தினால்தான், மக்கள் உங்களை வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கி எறிந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்னொன்றையும் சொன்னார்கள், ஏதோ தமிழ் மாநில காங்கிரஸ் கட்டப் பஞ்சாயத்து என்று. தமிழ் மாநில காங்கிரஸ், யாராக இருந்தாலும் அவர்களை நிச்சயமாகக் கண்டிக்கும். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜா அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்களுடைய கட்சியில் அப்படி கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஆட்சியிலும் இல்லை, அதிகாரத்திலும் இல்லை. ஆனால், கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிப்பதற்கு நாங்கள் நிச்சயமாகத் துணை நிற்போம் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, கட்டப் பஞ்சாயத்து பற்றியா? என்ன point of order?

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, மரியாதைக்குரிய ஐயா மூப்பனார் அவர்கள் சாதிக் கட்சிகளைச் சேர்க்கவில்லை, பேசவில்லை என்று சொன்னார்கள். அண்ணா தி.மு.க. கூட்டணி அமைகிற வரைக்கும், பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு தினசரி முதலமைச்சர் என்று சொல்லச் சொல்லி, ரசித்துக் கொண்டிருந்தது அவர்தான். திரு. ஏ.சி. சண்முகம் கடைசிவரைக்கும் அங்குதான் உட்கார்ந்து இருந்தார். திரு. ஏ.சி. சண்முகம், அண்ணா தி.மு.க. கூட்டணி உறுதியாகிற வரைக்கும், அவர் பக்கத்திலேதான் உட்கார்ந்து இருந்தார்; மூப்பனார் பக்கத்திலே உட்கார்ந்து, தினசரி மூப்பனார்தான் முதலமைச்சராக வரவேண்டும் என்று daily அவரைப் பார்ப்பது, பேட்டி கொடுப்பது என அதைத்தான் அவர் செய்து கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**மாண்புமிகு தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)



2001 மே 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விட்டு விடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் மூப்பனாரை யார் வேண்டுமானாலும் சந்திக்கலாம். He is the most easily accessible leader. எந்தக் கட்டத்திலேயும் அவர்களை எங்களுடைய கூட்டணியிலே சேர்த்துக் கொள்வோம் என்று நாங்கள் சொல்லவே இல்லை. கண்டிப்பாக சாதிய, மதவாத, சமூக விரோத கூட்டணியிலே இருப்பதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விட்டு விடுங்கள். அடுத்து செல்வி க. நாகலட்சுமி.

*** செல்வி க. நாகலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையில் அமையப்பெற்ற மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணிக்கு மாபெரும் வெற்றி வாய்ப்பைத் தேடித்தந்த தமிழக மக்களுக்கும், திண்டுக்கல் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் நாள் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட அந்த நேரத்தில்கூட மறுநாள் திண்டுக்கல் தொகுதிக்கு வருகைதந்து கூட்டணிக் கட்சியினுடைய வேட்பாளரைத் தன்னுடைய கட்சியினுடைய வேட்பாளராகக் கருதி வாக்குகள் சேகரித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தனது உடல்நிலைக்கு மத்தியிலேயும் தனது தொகுதியிலே வேட்பாளராக நின்றபோதும், திண்டுக்கல் தொகுதிக்கு வருகைதந்து வாக்குகள் சேகரித்த அருமை அவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணியினுடைய அத்துணைத் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நடந்து முடிந்துள்ள தேர்தல் பலவகையில் வரலாறு படைத்துள்ளது" என்று மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். உண்மையில் 21-வது நூற்றாண்டில் இந்த நேரத்தில் மிக்க புகழ் வாய்ந்த இந்த மன்றத்தில் 24 பெண் உறுப்பினர்கள் வெற்றிபெற்று இருக்கின்றார்கள். 24 பெண் உறுப்பினர்களும் மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணியின் சார்பாகவே வெற்றி பெற்று இருக்கின்றார்கள் என்பதையே (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வரலாறு படைத்த விஷயமாக நான் பார்க்கின்றேன். அதுமட்டுமல்ல, மேதகு ஆளுநர் அவர்களும் ஒரு

[செல்வி க. நாகலட்சுமி] [2001 மே 29

பெண் என்பதனாலும், மாநிலத்தினுடைய முதலமைச்சரும் ஒரு பெண் என்ற முறையிலும், இந்த அவையில் 24 பேர் பெண் உறுப்பினர்கள் என்ற முறையிலும் இந்த மன்றத்திலே நான் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் மகிழ்கின்றேன்.

அது மட்டுமல்ல, கடந்த 2 தினங்களாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க் கூட்டணியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரைகளுக்கு எல்லாம் விளக்கங்களையும், பதில்களையும் சொல்லி இருக்கக்கூடிய விதங்களைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மன்றத்திலே வந்து அமர்ந்து இருக்கிறோம் என்ற ஒரு மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக தமிழ் சினிமாவிலே ஆண் கதாநாயகர்களை மட்டுமே காட்டுவார்கள். ஆனால் இன்றைய நடைமுறையில் கடந்த கால வரலாற்றிலே ஒளிக்கப்பட்டிருந்த உண்மைகளை எல்லாம், இண்டு இடுக்குகளிலிருந்தெல்லாம் தேடிப்பிடித்து கொண்டுவந்து இந்தச் சபையிலே நிறுத்தி, உண்மை வரலாறைச் சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு புதிய பரிமாணம் பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கின்றேன். சர்க்காரியா ஊழலைப் பற்றித்தான் எங்களைப் போன்ற இளைய தலைமுறைகளுக்குத் தெரியும். அதற்கு ஒரு தனி நீதிமன்றம் அமைத்து இருக்கிறார்கள் என்ற விவரம் எல்லாம் வரலாற்றிலே மறைக்கப்பட்ட விஷயம். அதை இந்தச் சபை இன்றைக்கு தமிழக மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லி இருக்கிறது. இது ஒரு மிகச் சிறப்பான அம்சம் என்று நான் பார்க்கிறேன்.

*பிற்பகல் 1-05*

அது மட்டுமல்ல, கடந்த தேர்தல் இன்னொரு வகையிலே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது என்பதை நான் பார்க்கிறேன். பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களும் முன்னாள் முதலமைச்சர் அவர்களும் இந்தத் தேர்தல் கூட்டத்திற்கு வருகை தந்தபோது, மதச்சார்பற்ற கூட்டணி வெற்றிபெற்றால், யார் முதல்வர் ஆவார் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இந்தக் கூட்டணிக்கு எந்தக் கட்சி தலைமை வகிக்கிறதோ அந்தக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கிறபோது, அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தத் தலைவர்தான் முதலமைச்சராக வருவார் என்ற ஒரு குறைந்தபட்ச உண்மைகூட இந்த நாட்டினுடைய பிரதமருக்கும்,



2001 மே 29] [செல்வி க. நாகலட்சுமி]

மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சருக்கும் தெரியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்திலே ஒரு பலவீனமான வாதத்தை முன்வைத்தார்கள்.

தமிழக மக்கள் வகுப்புவாதத்தையும் ஜாதிய உணர்வுகளையும் புறக்கணித்து, அமைதியாகவும், அதே சமயத்தில் எளிமையாகவும், வலிமையாகவும் சிந்தித்து இந்தத் தேர்தல் முடிவை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கிறது.

அதுமட்டுமல்ல, உலகமயம், தாராளமயம், தனியார்மயத்தின் நேரடி விளைவுகள், கடந்த இரண்டாண்டுகளாக தமிழகத்து மக்களை மிக மோசமாகப் பாதிக்கத் தொடங்கியது மன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும்.

குமரி மாவட்டத்தில் ரப்பர் விலை வரலாற்றில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. நீலகிரியில் மலர்க் கண்காட்சியை நடத்தவிடமாட்டோம் என்று அமைச்சர்களைச் சிறை வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு போராட்டம் கடந்த காலத்தில் நடந்திருக்கிறது. தீப்பெட்டியை உற்பத்தி செய்யக்கூடிய சிறு முதலாளிகளும், நடுத்தர முதலாளிகளும், தொழிலாளர்களும் கைகோர்த்து தென் மாவட்டங்களிலே போராடிய நிகழ்ச்சி என்பதும் நடந்தது. நாமக்கல்லில் நெசவுப் பெண் தொழிலாளர்கள் தங்களுடைய கிட்னியை 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்ற சம்பவங்களைப் பத்திரிகைகள் ஆதாரபூர்வமாகக் கடந்த இரண்டாண்டுக் காலத்திலே வெளிப்படுத்தியிருந்தன.

இத்தகைய வறுமைக்குக் காரணமாக இருக்கக்கூடிய அந்தத் தனியார்மய, உலகமயக் கொள்கைகளை அமல்படுத்திக்கொண்டிருக்கின்ற B.J.P. அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய மாநிலத்தினுடைய முக்கியமான கட்சியின் தலைவர்களில் ஒருவரான மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் எதிர்த்து ஒரு தீர்ப்பைத்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பாக தமிழக மக்கள் வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத தட்டும் ஒலி) என்பதை நான் பார்க்கிறேன்.

அது மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், தங்களுடைய வாழ்க்கையில் பொற்காலம், பொற்காலம் என்று சித்தரித்துக் கொண்டிருந்தார்களே, அதன்மீது அவர்களுக்கு யதார்த்தமான கோபம் ஏற்பட்டது. ஜனநாயக முறைப்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

வேட்பு மனு தாக்கல் செய்தபோது, அந்த வேட்பு மனு நிர்தாட்சண்யமாக நிராகரிக்கப்பட்டது. அந்த நேரத்திலே பேசிய மாநில முன்னாள் முதலமைச்சர், இது அனுதாப அலையை ஏற்படுத்தாது என்று சொன்னார். அது உண்மையில் அனுதாப அலை அல்ல. உண்மையில், அந்த மனு நிராகரிக்கப்பட்டபோது, சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு மனதில் ஏற்பட்ட ஆவேசப் புயல் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக நான் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், இதுதான் என் கடைசித் தேர்தல் என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது, அவர்மீது இரக்கப்பட்டு வெற்றி பெற்றிருந்தால் அது அனுதாப அலையாக இருந்திருக்கும். ஆனால் மக்கள் அனுதாபப்படவில்லை.

இப்போது மத்தியில் வர்த்தகத் துறை அமைச்சராக இருக்கும் திரு. முரசொலி மாறன் அவர்கள் அப்போது குறிப்பிடுகையில், அமைச்சர்கள் தேர்தலில் நன்றாக வேலைசெய்து வெற்றி பெறவில்லை என்று சொன்னால், சிறையில் நமக்குக் களிதான் கிடைக்கும் என்று எச்சரிக்கை செய்தார் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், தமிழகத்தின் சாதாரண மக்கள் சாதாரணமாகப் பேசினார்கள், என் காதுபடப் பேசினார்கள். "அவர்களுக்காவது பரவாயில்லை, சிறையில் களி கிடைக்கும். தப்பித் தவறி இவர்கள் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தால் நமக்கு சாப்பிடுவதற்கு களி கூட கிடைக்காது" என்று சொல்லி தமிழக மக்கள் உறுதியான தீர்ப்புக்கு வந்தார்கள். ஆகவே இந்தத் தீர்ப்பு என்பது வழக்கமாகச் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலின் தீர்ப்பு என்று நான் பார்க்கவில்லை. ஆகவே, அந்த வகையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டது மிக மிகச் சரியானது. ஆளுநர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பார்வையில், மகேசனாகவே இருந்தாலும் அவர் ஜனநாயக நாட்டில் இருந்திருப்பார் என்று சொன்னால், அவரும் மக்கள் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததை வரவேற்று அது மிகச் சரியான நடவடிக்கை என்று தெரிவித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அவர்களுக்கு நாங்கள் கடிதம் அனுப்பியிருக்கிறோம்.

அடுத்ததாக, தொகுதிப் பிரச்சினை. திண்டுக்கல்லில் 11 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வருகிறது. அங்கே காவிரிக் குடிநீர்த் திட்டத்தை





குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அந்த ஆய்வு இறுதிப்படுத்தப்பட்டு அங்கே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல்படுத்தப்படும் என்று சொன்னால், 3 தாலுகாக்களுக்கும் சேர்த்து குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்ற முறையில், நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த நிர்வாகத்தில் (மணியடிக்கப்பெற்றது) குடிதண்ணீர்ப் பிரச்சினையைச் சரிசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோக முறையில் அரிசியினுடைய தரம் கடந்த காலத்தில் மாற்றப்படாமல், ரூ. 2.50க்கு விற்ற அரிசி, ரூ. 3.50க்கு உயர்த்தப்பட்டது. மிகவும் வறுமையில் இருக்கக்கூடிய மக்களுக்கு, ஆட்சி மாறினாலும் இந்த அரிசியின் தரம் மாறவில்லையே என்ற வேதனையோடு இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு, நம்பிக்கையோடு காத்துக்கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு இந்த ஆட்சியில் குறைந்தபட்சம் அந்த அரிசியினுடைய தரத்தை முதற்கட்டமாக மாற்றுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

அது மட்டுமல்ல, திண்டுக்கல்லிலே தோல் பதனிடும் தொழிலிலே மூன்று மதங்களைச் சேர்ந்த மக்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளை மூடுவதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. கால அவகாசம் பெற்றுக் கொடுத்தால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய விதத்திலே, அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கு, நடவடிக்கை எடுப்பதற்கு நமது மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

அது மட்டுமல்ல, கடந்த 5 ஆண்டு கால திமுக. ஆட்சியில் பெண்கள் மீதான வன்முறை, வரதட்சணைக் கொலையாக, eve-teasing-ஆக அதேபோன்று சிறுமிகள் பாலியியல் பலாத்காரமாக நடந்து கொண்டிருந்தது. 6000 சம்பவங்கள் நடந்திருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அதைத் தடுப்பதற்கு ஒரு பெண்கள் commission இருந்தது. அந்த commission எத்தனை முறை கூடியது, என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைப் பற்றியெல்லாம் ஒரு விவரமும் இல்லை. ஆகவே, அந்த பெண்கள் நல commission-ஐ முற்றிலுமாக மாற்றிவிட்டு, சுயேட்சைத் தன்மையுள்ள, அதிகாரம் வாய்ந்த, பெண்கள் மீதான வன்முறையைத் தடுக்கக்கூடிய ஒரு நல commission-ஐ ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம் மட்டும் அனுமதி கொடுக்க அருமைத் தலைவர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பெண்களுக்கு சைக்கிள் வழங்கப்போவதை நாங்கள் வரவேற்கின்றோம். அது தன்னம்பிக்கையைக் கொடுக்கும்.

அதுமட்டுமல்ல, பள்ளியினுடைய பாடத் திட்டங்களில் பெண் சமத்துவக் கல்வியைத் தயவுசெய்து நாம் ஆரம்பக் கல்வியிலிருந்தே தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாம் வகுப்பு, நான்காம் வகுப்பு பாடத் திட்டங்களில்-நான் சிறுமியாக இருக்கின்றபோது, அப்பா பேப்பர் படித்தார், அம்மா சமையல் செய்தார் என்று இருந்தது, இப்போதும் அப்பா பேப்பர் படிக்கிறார், அம்மா குழந்தைகளுக்கு சாதம் ஊட்டிக் கொண்டு இருக்கிறார் என்றுதான் இருக்கிறது. தயவுசெய்து 21 ஆம் நூற்றாண்டிலாவது அம்மாவினுடைய பாத்திரம் சமூகத்திலே பங்கேற்கக்கூடிய ஒரு பாத்திரமாக, ஒரு பத்திரிகை படிப்பவராக, குழந்தைகளுக்குப் பாடம் கற்றுத் தரக்கூடிய ஒரு ஆரோக்கியமான பெண் சமத்துவக் கல்வி, பாடத் திட்டத்திலே இடம் பெறுவதற்கு நமது கல்வித் துறை கவனிக்க வேண்டும்.

செம்பட்டி காவல் நிலையத்தில் பாலியியல் பலாத்காரம் செய்யப்பட்ட கௌசல்யா தொடர்பான நடவடிக்கை எந்த நிலையிலே இருக்கிறது என்பதைக் கவனித்து அவருக்கு உதவி செய்ய வேண்டும். வறுமையையும், இல்லாமையையும் ஒழிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று இந்த அரசு உறுதியளித்துள்ளது. அந்த வகையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆக்கபூர்வமான, நட்புக் கட்சியாக இருந்து ஆதரவு தருவோம் என்று சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. த. முருகவேல் ராஜன்.

* **திரு. த. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலன் கடமை உணர்த்த காற்சிலம்பு உடைத்து, மாண்புதவறா ஆட்சியை மன்னன் தர வேண்டும், தமிழ் மன்னன் தர வேண்டுமென்று விண் அதிர, மண் அதிர கற்பரசி கேட்ட நீதிக்காக, இன்றைக்கு புரட்சித் தலைவி தமிழக மக்கள் மத்தியிலே கேட்ட அந்த நீதியைப் போன்று, கற்பரசி கேட்ட நீதிக்காக பற்றி எரிந்த தமிழின் தலைநகரத்து மாடவீதியிலே, மொழி காக்க தாய்த் தமிழ்மொழி காக்க,





இந்தி அரக்கனை ஒழிக்க சட்ட நகலைப் பற்றி எரித்து, சாதனை வீரனாய்ப் பயணித்து, இன்று தமிழகத்தின் 12-வது சட்டப் பேரவையின் தலைவராக சமன் செய்து நடத்திடும், தூய பணி ஏற்றிருக்கும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு, அதே மதுரை மாநகரத்தின் மாடவீதிகளிலே மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்களின் மானுடம் காக்கும் மகத்தான கொள்கைகளை ஈடேற்ற இடஒதுக்கீட்டிற்காக 21 இன்னுயிர்களை ஈந்த பாட்டாளி படையினுடைய சொந்தக்காரனுடைய வணக்கத்தை முதலில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மதச்சார்பின்மையைச் சாய்த்து, சாதிக் கூட்டணி சதியை முறியடித்து, குடியாட்சித் தத்துவத்தைக் குலைத்து, மீண்டும் குடும்ப அரசியலைப் புகுத்த நினைத்தவர்களைத் துரத்தி, சதிக்கு முலாம் பூசி, சாணக்கியம் என்றோர்களை, அரசியல் சாணக்கியர் என்றோர்களை, துரோகத்திற்கு அரிதாரம் பூசி ராஜதந்திரம் என்றோர்களை, ராஜதந்திரி என்று அரிச்சுவடி படித்தோர்களை எல்லாம் அலறச் செய்து, அரசியலின் கடைசிக் கட்டம் எங்களது என்று சொல்லி, அலறச் செய்து, அவர்களது மனசாட்சியையும்கூட மாறவைத்து, தடுமாறவைத்து, பழித்தலும், பழிவாங்குதலும் என்ற இரண்டு தத்துவங்களை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்களை, சாதியையும், சாதி உணர்வையும், தூண்டுதலை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு கூட்டணி அமைத்தவர்களை நாட்டு மக்களின் நாடித்துடிப்பிலே, பாட்டாளிகளின் உழைப்பின் உணர்வுகளை மதிக்காமல் ஏழை விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் ஆகியோர்களின் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வந்த ஆட்சியை, மக்கள் துணையோடு முறியடித்து, சங்கடங்களை வென்ற சரித்திரமாய், சோதனைகளை வென்ற சாதனையாய், சரித்திரமாய், அரசியல் சமுத்திரமாய், சிம்மமாய், சிகரமாய், தமிழக அரசியலின் புது விளக்கமாய், வீரப் பெண்மணியாய், வரலாறுகளின் வரலாறாக வந்திருக்கும் அரசியே, இந்திய நாட்டின் குடியரசியே, மாதர்குல மாணிக்கமாய், அன்னை குலத்தின் அடிநாதமாய், முன்னோர் கொடுங்கோல் ஒழித்து, மங்காப் புகழ் படைக்கும் செங்கோல் செலுத்த மக்கள் மன்றத்திற்கு வந்திருக்கிற 6 கோடி தமிழக மக்களின் அன்னையாய் அரவணைத்து ஆட்சி நடத்தும் புரட்சித் தலைவி அவர்களுக்கு மக்கள் காவலர், மனித நேயப் பற்றாளர் (மேசையைத் தட்டும் ஒலி) திண்டிவனப் பெரியார், தமிழினப் போராளி, தமிழ்க் குடிதாங்கி, டாக்டர் அய்யா அவர்கள் இப்போது தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே திராவிடப் பாரம்பரியத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, பெருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் அந்தப் பாரம்பரியத்திலிருந்துதான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

[திரு. த. முருகவேல் ராஜன்] [2001 மே 29

*பிற்பகல் 1-15*

அறிஞர் அண்ணா அவர்கள் உங்களையெல்லாம் அன்புத் தம்பி என்று அழைத்தார். புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்கள் இரத்தத்தின் இரத்தமே என்று அழைத்தார். இன்று புதுயுகம் படைக்க புதுயுக நாயகியாக இன்றைக்குப் புரட்சிப் பெண்ணாக, தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உங்களையெல்லாம் கழகத்தின் கண்மணிகளே என்று அழைக்கிறார்கள். அப்படிச் சகோதர உணர்வோடு ஊறி, ஒட்டி உறவாடி வளர்ந்திருக்கிற திராவிடப் பாரம்பரியத்திலே வந்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களை அன்புச் சகோதரி என்று அழைக்கிற அருகதை டாக்டர் அய்யா அவர்களுக்கு மட்டுமே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே உங்களுடைய அன்புச் சகோதரராக இருக்கக்கூடிய இயக்கத்தின் கடைசித் தொண்டன் என்கிற முறையில் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசுகிற இந்த உரை கன்னி உரை. பொதுவாக, கன்னி உரை என்றால் அது கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகிற உரை; ஆனால் அது கருத்திலே எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்ற சிந்தனை தொன்றுதொட்டு இந்த அவைக்கு இருந்திருக்கிறது. ஆனால் நான் இன்றைக்குக் கன்னி உரையாகப் பேசுகின்ற என்னுடைய பேச்சு தமிழ்நாட்டு மக்களுடைய கண்ணீர் உரையாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுடைய சமய, சமுதாய நல்லிணக்க உணர்வுகள் இன்றைக்கு காயப்படுத்தப்பட்டு அந்த உணர்வுகள் எல்லாம் கன்றிப் போயிருக்கின்றன. அதைச் சுட்டிக்காட்டுகின்ற வகையிலே இன்றைக்கு என்னுடைய உரையை நிகழ்த்துவதற்கு, ஆளுநர் உரையின்மீது நான் பேசுவதற்கு இங்கே வந்திருக்கிறேன்.

எடுத்த எடுப்பிலே ஆளுநர் உரையிலே இருக்கக்கூடிய 42 ஷரத்துகளும் நன்முத்துக்களாக மிளிர்கின்றன. அவற்றை ஒட்டுமொத்தமாகப் பாராட்டுகின்ற முகத்தான் நிற்கின்ற கட்டத்தில் நான் இருந்தாலும்கூட இங்கே ஒருசில விஷயங்களை மட்டும் எடுத்துப் பேசுவதற்கு விரும்புகிறேன். என்னவென்றால், முதலில் எடுத்தவுடன் ஒரே ஒரு விஷயத்தை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆளுநர் உரையின் இரண்டாவது ஷரத்திலே, வரலாற்றிலே இதற்கு ஈடு இணையே இல்லை என்று இந்த ஆட்சியால் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால்,



2001 மே 29] [திரு. த. முருகவேல் ராஜன்]

மாமன்றத்திலே ஈடு இணையே இல்லை என்ற வார்த்தையை மறுத்துப் பேசியவர்களுக்கு, நான் மெத்தப் பணிவோடு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய தலைமையை ஏற்றிருக்கக்கூடிய மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணியிலே அங்கம் வகித்து, அன்னையினுடைய தலைமையை ஏற்றுக் கொண்டவர்கள் யார் என்று தமிழக மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீட்டிற்கான போராளியாக உலகமெல்லாம் பரவியிருக்கிற ஒட்டுமொத்த தமிழினத்திற்காகக் குரல் கொடுக்கின்ற உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தமிழினப் போராளியாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிற மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்கள், புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 'வளமான தமிழகம், வலிமையான பாரதம்' என்ற கருத்திலே இருக்கக்கூடிய மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்கள் அந்த அணியிலே இருக்கிறார்கள். பாட்டாளி வர்க்கத்தினுடைய விடுதலையைப் படைக்கின்ற, உழைக்கின்ற வர்க்கத்தினுடைய விடுதலைக்காகப் போராடுகின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தக் கூட்டணியிலே இடம் பெற்றிருக்கின்றன. இப்படி நாடு போற்றுகின்ற, நல்லவர்கள் போற்றுகின்ற மக்கள் சக்திகள் எல்லாம் மகத்தான தலைவியின் தலைமையிலே ஒன்று திரண்டிருக்கின்ற காட்சியை தமிழகம் ஒருபுறத்திலே தேர்தல் களத்திலே பார்த்தது. ஆனால், எதிர்த்து நின்றவர்கள் எல்லாம் யார் என்பதும் நாட்டு மக்களுக்குத் தெரியும்.

ஒரே ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். Loan, Scholarship அடிப்படையிலே, படிக்கின்ற ஆதிதிராவிட மாணவர்கள், இரத்தம் சொட்டச் கேட்ட ஒரே குற்றத்திற்காக மதுரையின் வீதிகளிலே இரத்தம் சொட்டச் சொட்ட அடித்து நொறுக்கப்பட்ட அந்தக் காட்சியை மக்கள் பார்க்கிறார்கள். நாம் வரலாற்றிலே படித்திருக்கின்றோம், ஜெனரல் டயர் என்பவர், சுதந்திர உணர்ச்சிகளை ஊட்டுவதற்காக ஜாலியன் வாலாபாக்கிலே திரண்டிருந்த மக்களை ஏன் என்று கேட்காமல், எதற்கு என்று கேட்காமல், ஆயிரக்கணக்கான மக்களைச் சுட்டு வீழ்த்திய அந்தக் கொடுமைக்குப் பிறகு தமிழ்நாட்டில், இந்திய நாட்டின் வரலாற்றிலே கறுப்பு எழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய ஒரு காரியத்தை தாமிரபரணி ஆற்றிலே கருணாநிதி அரசு நடத்திக் காட்டியது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அன்று என்ன கேட்டார்கள்?

சுதந்திரம் வேண்டும் என்று கேட்டதற்காக மக்கள் துடி துடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலே. ஆனால், இன்று 10 ரூபாயாக இருக்கக்கூடிய கூலியை 12 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்த தாழ்த்தப்பட்ட மக்களை, கருவிலே இருக்கின்ற குழந்தைகூடக் கண்ணீர் விடுகின்ற அளவிலே, சுதறக் சுதற அடித்து, தாமிரபரணி ஆற்றிலே தள்ளிக் கொலை செய்த கொடிய சம்பவங்கள் எல்லாம் தமிழ்நாட்டின் வரலாற்றிலே, கடந்த ஆட்சியிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு யாரோடு கூட்டணி அமைத்திருக்கிறார்கள்?

*பிற்பகல் 1-20*

இங்கே பேசுகிறபோது, எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். அது என்னவென்றால், இந்தச் சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கிற கவர்னர் உரை என்பது, யாரோ ஒருவர் எழுத, அதற்கொருவர் இசையமைக்க, இன்னொருவர் பாடுவதைப் போன்றிருக்கிறது, இதிலே யாரை வாழ்த்துவது என்று தெரியவில்லை, அந்த அளவுக்குக் குழப்பம் நிறைந்ததாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரியும், தமிழ்நாட்டைக் குழப்பியவர்கள் எல்லாம் இப்போது குழம்பிய மனதோடு, சட்டப் பேரவையைக் குழப்ப வந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.(மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் குழம்பியிருக்கிறார்கள். இன்னும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் குழப்புவதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இங்கே ஆளுநர் உரையை விரிவாகப் பாராட்ட முடியும். அதைப்போலவே நான் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்த நான் வந்தவாசியிலிருந்து இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திற்கு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றேன் என்றால், அதற்குக் காரணம் என்ன? மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் கரம் கோர்த்திருக்கின்ற அந்த வலுவுக்கு இன்றைக்கு நாட்டு மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் நலனைப்பற்றி நான் பேசமுடியும். இங்கே இருக்கக்கூடிய பேரவை உறுப்பினர்கள் எல்லாம்



இங்கே பேசுகிறபோது, ஆளுநர் உரையைப் பாராட்டினார்கள். அவர்களுடைய தொகுதியைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். ஆனால், பேரவைத் தலைவர் அவர்களே, நான் எடுத்திருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, தமிழ்நாட்டினுடைய அடித்தளத்தை ஆட்டுகிற விஷயத்தை நான் கரத்திலே எடுத்திருக்கிறேன். எனவே, தங்களது தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு என்றால் 5 நிமிடங்கள் கொடுக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களே, நானும் உங்கள் பகுதியைச் சேர்ந்தவன் என்பதனாலே எனக்கும் 5 நிமிடங்கள் கூடுதலாகத் தரவேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரைவாசியாக இருந்து, இப்போது வந்தவாசி ஆகிவிட்டீர்கள். (சிரிப்பு) பேசி முடியுங்கள்.

**திரு. த. முருகவேல் ராஜன்:** நான் வந்தவாசியே தவிர, நான் உங்கள் சொந்தவாசி என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். எனக்கு முன்பாகப் பேசிய ஓர் உறுப்பினர் சொன்னார், தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது, புரட்சித் தலைவி அவர்கள் தலைமையேற்ற 4 மணி நேரத்திற்குள்ளாக தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டார்கள். எனவே, தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையே நல்லிணக்கம் குறைந்திருக்கிறது, பாதுகாப்பு இல்லை, வன்கொடுமை கட்டவிழ்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், அப்படிச் சொல்கிறவர்கள் எப்படி இந்தத் தமிழ்நாட்டிலே மத உணர்வுகளையும், ஜாதிய உணர்வுகளையும் தூண்டுகிறார்கள் என்பதை, அவர்களே தெருவெங்கும் எழுதி வைத்திருக்கிற வாசகங்களை நான் இங்கே படித்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். **

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவல்களைத் தரக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், இது உங்களுடைய கன்னிப் பேச்சு. விவகாரத்தை உண்டாக்கக்கூடிய கருத்துகள் இடம்பெற வேண்டாம். ஆகவே, கடைசியாக நீங்கள் சொன்ன வாசகங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) திரு. திருமாவளவன், நீக்கப்பட்டு விட்டன. இனிமேல் அதைப்பற்றிப் பிரச்சினை எழுப்ப வேண்டாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. த. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து இல்லை. தெருவெங்கும் எழுதி வைக்கப்பட்டிருக்கிற கருத்துகளை நான் இந்தச் சபையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், நீங்கள் பேசிய அந்தக் கடைசிக் குறிப்புகள், கடைசி வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டன. மறுபடியும் அந்தப் பிரச்சினைக்குள் போகவேண்டாம். பேச்சை முடியுங்கள்.

**திரு. த. முருகவேல் ராஜன்:** அப்படிச் சொன்னால் எப்படி பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாட்டிலே அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 4 மணி நேரத்திற்குள்ளாக தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு முதலமைச்சர் அவர்கள் அப்போதே விளக்கம் சொல்லிவிட்டார்கள். பிரச்சினை முடிந்து விட்டது.

**திரு. இரா. திருமாவளவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. மறுபடியும் நீங்கள் பேசினீர்கள் என்றால் அவைக் குறிப்பில் ஏறும். வேண்டாம், உட்காருங்கள்.

**திரு. த. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அய்யா அவர்கள் தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் இணக்கத்தோடு வாழவேண்டும், இப்படிப்பட்டவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டும் என்றெல்லாம், மானுடத்தை மீட்கின்ற ஒரு மக்கள் காவலராக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவருக்கு இப்போது உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவில் முடித்து விடுங்கள்.



**திரு. த. முருகவேல் ராஜன்:** எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சாதி, மத உணர்வற்று, சமத்துவமாக மக்கள் வாழவேண்டுமென்று சொன்னால் ஆளுநர் உரையிலே ஐந்தாவது சரத்திலே சொல்லப்பட்டிருப்பதைப்போல நடவடிக்கை எடுப்பதுதான் நல்லது. வன்முறையைத் தூண்டுபவர்களை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சரத்து ஒன்றுதான் எனக்கும், நமக்கும் பாதுகாப்பாக இருக்கிறது. நான் இப்படி வேகமாகப் பேசுவதற்குக் காரணம் இருக்கிறது. கடந்த 19 ஆம் தேதி நான் சட்டப் பேரவையிலே சில அலுவல்களுக்காக வந்துவிட்டு என்னுடைய தொகுதியான வந்தவாசிக்குத் திரும்பிப் போகிறபோது இரவு 8 மணிக்கு இராமாவரம் என்கிற இடத்தில் மறைந்திருந்தவர்களால் தாக்கப்பட்டேன். கொடுமையாகத் தாக்கப்பட்டேன். வந்தவாசி நாடாளுமன்ற உறுப்பினர் அருமைக்குரிய அண்ணன் எம்.பி. துரை அவர்களும் கொலை வெறியோடு தாக்கப்பட்டிருக்கிறார்கள். வந்தவாசி தொகுதியிலே சட்டம்-ஒழுங்கு இப்போது சீர்குலைந்திருக்கிறது. ஒரு போர்க்களத்திலே யார் எல்லாம் தாக்கப்படக்கூடாது என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியாத விஷயமல்ல. பெண்கள் தாக்கப்படக்கூடாது, பசுக்கள் தாக்கப்படக்கூடாது, குழந்தைகள் தாக்கப்படக்கூடாது, முதியவர்கள் தாக்கப்படக்கூடாது, நோயாளிகள் தாக்கப்படக்கூடாது என்றிருக்கிறது. ஆனால், வந்தவாசி நகரத்திலே திட்டமிட்டு ஓர் இயக்கத்தினுடைய பெயர்ப் பலகையின்மீது அவர்களே சாணியை வீசியடித்துவிட்டு, அதற்குக் காரணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக் கூட்டணியிலே இருக்கக்கூடிய கட்சிகள்தான் என்று தரக்குறைவாகவும், தவறாகவும் பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவில் முடித்துவிடுங்கள்.

**திரு. த. முருகவேல் ராஜன்:** அவர்களால் தாக்கப்பட்டவர்களில் குறிப்பிடக்கூடியவர் நாகம்மா என்கிற ஒரு பெண். டீக்கடையிலே விற்பதற்காக தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணை 50 பேர் சூழ்ந்துகொண்டு, கொடிய வாளால் வெட்டுகிறார்கள். அந்தப் பெண் கையெடுத்துக் கும்பிடுகிறாள். 'நான் என்ன தவறு செய்தேன், எனக்கு எந்த சாதி உணர்வு இருக்கிறது, என்னை விட்டுவிடுங்கள்' என்று சொல்லியும் கேளாமல், வெட்டி வீசினார்கள் தெருவிலே குற்றுயிரும், கொலையுயிருமாக. அடுத்து, நிறைமாதமாக இருக்கக்கூடிய ஒரு பசு

தாக்கப்பட்டு, அந்தப் பசு உயிருக்காகப் போராடிய காட்சி எல்லாம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அப்பாவிகள் எல்லாம் வழிமறித்துத் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் எதற்காகத் தாக்கப்படுகிறார்கள், என்ன காரணத்திற்காகத் தாக்கப்படுகிறார்கள் என்று உணர்ந்து கொள்ள முடியவில்லை. வந்தவாசி மருத்துவமனையில் தாக்குண்டு காயம்பட்டவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு 16 ஆக உயர்ந்திருக்கிறது. எனவே, அவர்களாக அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்துக்கொண்டு ** திட்டமிட்டு சாதிக் கலவரத்தைத் தூண்டி தமிழ்நாட்டில் அமைதியைக் கெடுத்து, சாதி, மத இணக்கத்தைச் சீர்குலைக்கும் இதுபோன்ற சக்திகளைப் புரட்சித் தலைவி அவர்கள் அடையாளம் கண்டு, நடவடிக்கை எடுத்து, இந்த அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பான அரசு என்பதை நிரூபிப்பதற்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையே இணக்கத்தை உருவாக்குகிற ஒரு நல்ல அரசாக இருக்கவேண்டும் என்கிற ஒரு அடிப்படையோடு இரும்புக்கரம் கொண்டு இதுபோன்ற தீவிரவாத சக்திகளை ஒடுக்கவேண்டும் என்று சொல்லி கடைசியாக இரண்டே இரண்டு கோரிக்கைகளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம், இதோடு உரையை முடித்துவிடுங்கள். நீண்ட நேரம் ஆகி விட்டது. அடுத்த உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன். (குறுக்கீடு) இன்னும் உங்களுக்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. சரி, விரைவில் முடியுங்கள்.

**திரு. த. முருகவேல் ராஜன்:** கன்னிப் பேச்சிலே கோரிக்கை வைக்காமல் அமர்ந்தால் அது நன்றாக இருக்காது. எனவே கோரிக்கைகளை வைப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கோரிக்கைகளை வைக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் இந்த நாட்டினுடைய நலனுக்காக, புரட்சித் தலைவிக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்பதற்காக இந்தக் கோரிக்கைகளை வைக்கின்றேன்.

நான் பிறந்திருக்கிற தேவேந்திரகுல வேளாளர் சமுதாயம் இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய சபையிலே மந்திரி பதவி பெறாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் இரட்டை இலைக்கு ஓட்டுப் போட்டீர்கள், ஆயிரக்கணக்கான தேவேந்திரகுல மக்கள் இந்த முறை அம்மா ஜெயலலிதா்தான் வர வேண்டுமென்று வோட்டு போட்டீர்களே,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இன்றைக்கு உங்களுக்கு மந்திரி பதவி கொடுத்தார்களா பார்" என்று சொல்லி அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்தி இந்த ஆட்சிக்கு எதிராக கலகம் செய்கிறவர்களாக அவர்களை மாற்றுகிற எத்து வேலைகளை எல்லாம் இப்போது அங்கே ஒரு கூட்டம் செய்து கொண்டிருக்கிறது. அவர் தாயைப் போன்றவர். பந்தியிலே படைத்திருக்கிறார். அவர் வரிசையாகப் பரிமாறியிருக்கிறார். ஒரே ஒரு குழந்தையின் இலையில் மட்டும் சோறில்லாமல் இருக்கிறது. தாய் உள்ளத்தோடு அந்தச் சமுதாயத்திற்கும் பங்கு தர வேண்டும் என்பதை அந்தச் சமுதாயத்திலே பிறந்தவன் என்ற முறையில் நான் கோரிக்கையாக வைத்திருக்கிறேன்.

வந்தவாசியில் உள்ள மருத்துவமனையிலே பெண் மருத்துவர் இல்லாமல் ஒன்றரை ஆண்டு காலமாக ஆண்களே பெண்களுக்கு மருத்துவம், பிரசவம் பார்க்கின்ற கொடிய நிலைமை இருக்கிறது. நம் வீட்டுப் பெண்களுக்கு இந்த நிலைமை என்றால் நாம் ஏற்றுக்கொள்வதில்லை. எனவே, அந்த மருத்துவமனைக்கு ஒரு பெண் மருத்துவரை நியமிக்க வேண்டும். வந்தவாசிக்கு ஒரு பெரிய புதிய பேருந்து நிலையத்தைக் கட்டித் தர வேண்டும். வந்தவாசி பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. எனவே, 5 ஆயிரம் மகளிர் பயன்பெறுகின்ற வகையில் அம்மா அவர்கள் அமைக்கின்ற அந்தத் தொழிற்சாலையை 99 சதவிகிதம் குடிசைகளாக இருக்கக்கூடிய என்னுடைய தொகுதியான வந்தவாசி தொகுதிக்குத் தந்தருள வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள். நீங்கள் மூத்த உறுப்பினர். அனுபவம் வாய்ந்த உறுப்பினர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற சிறந்த உறுப்பினர். அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், உட்காருங்கள். திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் அளித்த ஆளுநர் உரையை வரவேற்றுப் பேச எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேரவையில்

அடித்தளத்து மக்களின் அரசியல் சமூகப் பொருளாதார விடுதலைக்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற ஒரு Ambedkarist ஆகிய என்னை மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுப்பதற்கு வழிவகுத்த எங்கள் வணக்கத்திற்குரிய ரட்சகர் பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட என்னை நன்னிலம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பியிருக்கின்ற நன்னிலம் தொகுதி மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவராக விளங்குகின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், எனது பெருமைக்குரிய தலைவர், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும், மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணியின் அனைத்துக் கட்சிகளுக்கும், எனது வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் எனது வணக்கங்களை இந்த அவையில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி மேலெழுந்தவாரியாக மிகச் சுருக்கமாக என்னுடைய கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். ஆளுநர் உரை என்பது ஒரு நல்ல புத்தகத்திற்கு எப்படி முன்னுரை அதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலே அமையுமோ, ஒரு நல்ல கதைக்கு எப்படி கதைச் சுருக்கம் அந்தக் கதையைப் புரிந்துகொள்கிற வகையிலே சுட்டிக்காட்டுமோ அதைப்போல, வருகிற 5 ஆண்டுக் காலத்திலே இந்த நடப்பாண்டிலே இந்த ஆட்சி செயல்படப்போகிற விதத்தை, இந்த ஆட்சி எந்தத் திட்டங்களைச் செயல்படுத்தப் போகிறது என்பதை மிகச் சுருக்கமாக ஆளுநர் உரையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையிலே ஒரு மாறுதலான, புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு பெண் படிப்பதன் மூலம் அந்தத் தலைமுறையே சிறப்பதற்கான வழி கிடைக்கும். ஒரு குடும்பத்திலே ஓர் ஆடவன் படித்தால் ஏதோ அந்த ஆடவன் மட்டும் அவருடைய நலத்தைப் பெறுகிற அளவிற்கு வழி கிடைக்கும். ஒரு பெண் படிப்பாளேயானால் அந்தக் குடும்பமே சிறப்பதற்கு, கல்வியறிவு பெறுவதற்கு, அதை அடுத்த தலைமுறையும்

222387





பெறுவதற்கு வழி கிடைக்கும். அந்த வகையிலே ஓராண்டுக்கு மேல்நிலைப் பள்ளியிலே படிக்கிற 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிளஸ் 1, பிளஸ் 2 ஆதிதிராவிட பெண்களுக்கு சைக்கிள் வழங்குகிற திட்டத்தை ஆளுநர் உரையிலே புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது படிப்பதற்காகத்தான் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தை வழங்கினார்கள். அவர்களுடைய படிப்பை உயர்த்திக் காட்டியவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த இடத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன், பேசுங்கள்.

*பிற்பகல் 1-35*

**திரு. செ.கு. தமிழரசன்:** விளக்கத்திற்கு நன்றி. இந்த விள்க்கம் தேவையான விளக்கம். ஆக, ஒரு பெண் படிப்பதன் மூலம் அதுவும் அடித்தளத்து சமூகத்தைச் சார்ந்த ஒதுக்கப்பட்ட சமூகமாக இருக்கிற ஆதிதிராவிட பெண் படிப்பதன் மூலம் அடுத்த தலைமுறையே விழிப்படைகிற அளவிற்கு, நலன் பெறுகிற அளவிற்கு வாய்ப்புகள் அதிகம். ஓராண்டுக்கு 50000-க்கும் மேற்பட்ட பெண்கள் என்று சொன்னால் பல கோடி ரூபாய் இதற்குத் தேவைப்படும். பல கோடி ரூபாய் போனாலும் பரவாயில்லை, அடுத்த தலைமுறையினர் விழிப்படைய வேண்டும்; அடுத்த தலைமுறை தலைநிமிர வேண்டும் என்று வழிவகுத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை நாளடைவில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கிற ஆதிதிராவிட ஆண்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பெண்களுக்கு படிப்பதற்கு, சைக்கிள் தருகிற இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற அதேநேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் வசிக்கிற பகுதிகளில் பெண்கள் இப்படிப்பட்ட திட்டங்களால் படிக்கிறார்கள், பயனடைகிறார்கள், உயர்கிறார்கள்.

ஆனால், அந்தக் கிராமங்களில் கழிவறைகள் கிடையாது. கழிவறை இல்லாமல் படித்த பெண்கள், படிக்கிற பெண்கள், பக்கத்திலேயிருக்கிற வயற்காட்டிற்கு, தோட்டம் துரவுக்குப் போகிற ஒரு நிர்பந்தம் ஏற்படுகிறது. அதனால், எவ்வளவு சிக்கல்கள், சங்கடங்கள் உருவாகின்றன என்பதை ஒரு கிராமவாசி என்கிற வகையிலே நான் உணர்வேன். ஆகவே, ஒவ்வொரு தலித் குடியிருப்புகளிலும், தண்ணீர்க் குழாய் வசதியுடன்கூடிய கழிவறைகள் உருவாக்க வேண்டும் என்கிற அந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே, நான் உங்கள் முன்னாலே கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

கடந்த 5 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தலித்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் மிக அதிகம். மேலவளைவு படுகொலை, வேப்பிலைப்பட்டி செழியன் படுகொலை, தாமிரபரணி படுகொலை, புளியங்குடி படுகொலை என படுகொலைகள் பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கும். அந்த அளவுக்கு, 5 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு தலித் விரோத ஆட்சியாகச் செயல்பட்டது. எனவேதான், நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் ஒடுக்கப்பட்ட தலித் மக்கள், மிகப் பேராதரவை மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு அளித்து, இப்போது புரட்சித் தலைவி அவர்களை, முதல்வராக இந்த அரியாசனத்திலே அமர வைத்திருக்கிறார்கள். தலித் மக்கள் மிகப்பெரிய அளவிலே, இந்தத் தேர்தலிலே, ஒன்றுதிரண்டு, கடந்த கால தலித் விரோத ஆட்சிக்கு ஒரு சரியான தீர்ப்பை, பாடத்தைத் தந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு தலித் விரோத ஆட்சி என்று நான் சொல்வதற்குக் காரணம்,, அந்த அமைச்சரவையிலே இருந்த மூன்று அமைச்சர்கள்மீது தீண்டாமை ஒழிப்புக் குற்றச்சாட்டு இருந்தது. மூன்று அமைச்சர்கள் பெயரிலே தீண்டாமை ஒழிப்புக் குற்றச்சாட்டு என்று சொன்னால், திரர்விட முன்னேற்றக் கழக ஆட்சி, தலித் விரோத ஆட்சி என்பதற்கு நான் வேறு உதாரணமோ, எடுத்துக்காட்டோ சொல்லத் தேவையில்லை. அமைச்சர்கள் பெயரிலே அந்தக் குற்றச்சாட்டு இருந்தது. எப்படி வரலாற்றைத் திருப்பிப் பார்த்தாலும் கடந்த 50 ஆண்டுகால சுதந்திரத் தமிழ்நாட்டிலே 5 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்ததைப் போல, இன மோதல்கள், சாதிய மோதல்கள் வேறு எந்த ஆட்சியிலும் நிகழ்ந்தது கிடையாது. தென் மாவட்டங்கள் எல்லாம் பற்றி எரிந்தன. வட மாவட்டங்களும் பற்றி எரிந்தன: இவ்வளவு இன மோதல்கள் வேறு எந்த ஆட்சியிலும் நிகழ்ந்தது இடையாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** எனவேதான் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இனி இவற்றைத் தடுக்க வட்ட அளவிலே, மாவட்ட அளவிலே, சமூக நல்லிணக்க உறவை ஏற்படுத்த சமூக நல்லிணக்கக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றை அந்த அளவிலே தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைத் தேர்ந்தெடுத்த நன்னிலம் தொகுதியின் பிரச்சினைகள் சிலவற்றை நான் இங்கே சொல்ல வேண்டும். திருமருகல் என்கிற நகரத்தைத் தலைநகரமாக வைத்து, நாகப்பட்டினத்தில் ஒரு வட்டத்தை உருவாக்க வேண்டும். திருமருகல் பகுதியிலே இருக்கிற பலர் சாதாரண சாதிச் சான்றிதழுக்குக்கூட, நாகப்பட்டினத்திற்குப் போக வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, திருமருகலை தலைநகரமாகக் கொண்டு ஒரு வட்டத்தை உருவாக்க வேண்டும். நன்னிலம் பேரூராட்சி, தொன்றுதொட்டு பல ஆண்டுகளாக இருக்கிற பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும். நன்னிலம் தொகுதியிலே ஒரு கல்லூரிகூடக் கிடையாது. மிக விரிந்து பரந்திருக்கிற தொகுதி. அந்தத் தொகுதியிலே ஒரு கல்லூரிகூட இல்லாமல், பக்கத்திலேயிருக்கிற மாயவரத்திற்கோ, கும்பகோணத்திற்கோ, திருவாரூருக்கோ போகவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, நன்னிலம் தொகுதியிலே ஒரு பெண்கள் கல்லூரியை உருவாக்க வேண்டும்.

நன்னிலத்திலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. 5 மருத்துவர்கள் இருக்க வேண்டிய இந்த மருத்துவமனையிலே, ஒரேயொரு மருத்துவர் இருக்கிறார். இந்த மருத்துவர் விடுப்பில் போய்விட்டால் மருத்துவமனைக்கே விடுப்பு. நோயாளிகள் அல்லல்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே உள்ள நன்னிலம் மருத்துவமனையிலே, கட்டாயமாக மருத்துவர் இருக்கிற ஒரு நிலையை உருவாக்கவேண்டும். காலியாக இருக்கின்ற இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-40*

அதேபோல, நாகூருக்கு அருகிலே இருக்கிற பாலம் இடிந்து விழுந்து நாகூர் பகுதிக்கு யாரும் போக முடியாத ஒரு நிலை இருக்கிறது. 80 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டு போக வேண்டிய நிலைமை இருக்கிறது.

தேர்தலின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றபோதுகூட, அந்த மாவட்டத்திற்குப் போக முடியாமல் சுற்றுப் பயணத்தை இரத்து செய்து திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, நாகூர் பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும்.

அடுத்ததாக, முடிகொண்டான் என்கிற பகுதியிலே சியாட்டுமங்கை என்கிற பாலம் நீண்ட காலமாக மூன்று தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களால் இங்கே வலியுறுத்தப்பட்டும்கூடக் கட்டப்படாமல் இருக்கிறது. அதைக் கட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன், மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். நானே முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி வாங்கிக் கொடுத்துவிடுகிறேன். பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஆதிதிராவிடர் அரசு ஊழியர்களுக்கு முறையான பதவி உயர்வை ஏற்படுத்தித் தருகின்ற 44 ஆம் எண் அரசாணையை உடனடியாகச் செயல்படுத்திட வேண்டும். 33 ஆம் எண் அரசாணையை இரத்து செய்ய வேண்டும். கடந்த முறை இந்த 44 ஆம் எண் அரசாணையைச் செயல்படுத்திட வேண்டுமென்றும், திராவிட முன்னேற்றக் கழக அரசு, அரசியல் சட்டத்திற்கு விரோதமாக 33 ஆம் எண் அரசாணை போட்டிருக்கிறது, அது அரசியல் சட்ட மீறல் என்றும் இந்த அவையில் இடம்பெற்றிருக்கின்ற என்னுடைய அருமைச் சகோதரர், விடுதலை சிறுத்தைகளினுடைய அமைப்பாளர் திரு. திருமாவளவனும், நானும், 40-க்கும் மேற்பட்ட இயக்கங்களைக் கொண்டு சென்று ஆளுநரைச் சந்தித்து அரசியல் சட்ட மீறலுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசின் பேரிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். எனவே, உடனடியாக 44 ஆம் எண் அரசாணையைச் செயல்படுத்திட தமிழக அரசு முன்வர வேண்டும்.

அதைப்போலவே, கடந்த 1991-1996-லே இந்த அவையிலே தலித் மக்களுக்கு என்று தனித் தொழிற்பேட்டைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்து அன்றைக்கு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பூரிலே ஒரு தொழிற்பேட்டை ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. அவர்கள் தொடங்கினார்கள் என்பதற்காகவே 5 ஆண்டுகளாக அந்தத் தொழிற்பேட்டையிலே தொழில் தொடங்குவதற்கு, ஆதிதிராவிட தொழில் அதிபர்களுக்கு ஏகப்பட்ட முட்டுக்கட்டைகள் போடப்பட்டு இதுவரையில் திட்டம் நிறைவு செய்யப்படவில்லை. 100



பேர்களைத் தேர்ந்தெடுத்து 50 பேர்களுக்குத் தந்து மீதி நபர்களுக்குத் தடை விதித்து ஏகப்பட்ட சிக்கல்களை உருவாக்கி இதுவரையில் இந்தத் தொழிற்பேட்டை முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை. எனவே, அதை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதைத் தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்களே மீண்டும் இன்றைக்கு முதலமைச்சராக வந்திருக்கிறார். அவர்களே வந்து அந்தத் தொழிற்பேட்டையைத் தொடங்கி வைக்க வேண்டும். அதை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அம்பேத்கர் நூற்றாண்டு விழாவின்போது, அண்ணல் அம்பேத்கருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று அகில இந்திய அளவிலே இருக்கிற நூற்றாண்டு விழா கமிட்டி 50 இலட்சம் ரூபாயை மாநில அரசுக்கு ஒதுக்கியது. அந்த நேரத்திலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அம்பேத்கர் நூற்றாண்டு விழாவிற்கு ஒன்றும் செய்யவில்லை. அதற்குப் பிறகு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் வலியுறுத்தி, அம்பேத்கர் மணி மண்டபம் கட்டுவதற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்கி, 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, இராஜா அண்ணாமலைபுரத்திலே அதற்கான அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினோம். இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், ஏதோ ஒரு குடையைக் கவிழ்த்து வைத்திருப்பதைப்போல, சாதாரண வாயிற்படிகள் கூட அங்கே இல்லாமல், திறந்தவெளிக் கூடமாக அம்பேத்கர் மணி மண்டபம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீடு செய்யப்பட்ட 5 கோடி ரூபாய் என்ற அளவிலே இல்லாமல் 50 இலட்சம் ரூபாய்கூட அதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்காது. 50 இலட்ச ரூபாய்கூட அதன் மதிப்பு பெறாது என்கிற அளவிலே அந்த மணிமண்டபம் ஒரு குடையைப் போல கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் அதைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து உறுப்பினர் திரு. இரவிராஜ். திரு. தமிழரசன் எஞ்சியவற்றை அடுத்த உரையில் வைத்துக் கொள்ளுங்கள்.

***திரு. கோ. இரவிராஜ்:** 12-வது சட்டமன்றப் பேரவையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திலே நான் நுழைவதற்கு நல்ல வாய்ப்பினைத் தந்து, என் போன்றவர்களை சட்டமன்றத்திற்கும்,

[திரு. கோ. இரவிராஜ்] [2001 மே 29

பாராளுமன்றத்திற்கும் அனுப்பி, மந்திரி பதவிகளை வகிக்கக்கூடிய நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தி, நான் மட்டும் பதவிகளை வகிக்கமாட்டேன் என்று சொல்லி, வாழும் பெரியாராக வாழ்ந்து கொண்டிருக்கிற, தமிழகத்திலே நடந்து கொண்டிருந்த கருணாநிதி அவர்களுடைய ஆட்சியை அகற்றாமல் ஓயமாட்டேன் என்று சூளுரைத்து, பாட்டாளி மக்கள் கட்சியினர் சார்பில் மத்திய அமைச்சரவையிலே இருந்த இரண்டு அமைச்சர்களை இராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்று மாற்றத்திற்கு ஒரு காரணமாக தமிழினப் போராளியாக வாழ்ந்து கொண்டிருக்கிற டாக்டர் ஐயா அவர்களை வணங்கி, பசுமைத் தாயகத்தினுடைய தலைவர் அண்ணன் அன்புமணி அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணிக்குத் தலைமை ஏற்று 234 சட்டமன்றத் தொகுதிகளுடைய வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த தமிழகத்தினுடைய வரலாற்றை மாற்றியமைத்து, முதல்வர் பொறுப்பினை ஏற்று, இந்த அவையிலே அமர்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியினையும், வணக்கத்தினையும் பணிவோடு சமர்ப்பித்து, என்னைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய என்னுடைய தாயாரையும், தந்தையாரையும் வணங்கி 13,923 வாக்குகள் வித்தியாசத்திலே என்னை வெற்றி பெறச் செய்த திருத்தணி வாக்காள நெஞ்சங்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

*பிற்பகல் 1-45*

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே தமிழகத்தினுடைய தொழில் வளத்தைப் பெருக்க உரிய நடவடிக்கை, கச்சத் தீவை மீட்க உறுதி, விவசாய மக்களுக்கான நலத் திட்டங்கள், 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி அளிப்பது, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மத்திய அரசை வலியுறுத்தும் என்கிற வாக்குறுதி, தலித் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள் மற்றும் பெண்களுக்கான நலத் திட்டங்களையும் மற்றும் பல அற்புதமான திட்டங்களையும் முன்வைத்துள்ள ஆளுநர் உரை என்பது நன்முத்துக்களால் தொடுக்கப்பட்ட மணிமகுடமாக உள்ளது என்பதை இந்தப் பேரவையிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 மே 29] [திரு. கோ. இரவிராஜ்]

ஆளுநர் உரையிலே ஏறக்குறைய எமது கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஐயா அவர்களின் எண்ணங்களை அப்படியே நான் காண்கின்றேன். இப்படிப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை ஆளுநர் உரையின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தமிழக மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்; போற்றுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழும் திருத்தணி தொகுதியிலே அடிப்படை வசதிகளான குடிநீர், சாலைகள், தெரு விளக்குகள் போன்ற வசதிகள் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். பெருமைமிக்க திருத்தணி நகர மக்களுக்கு இதுநாள் வரையிலே குடிநீர்ப் பிரச்சினை என்பது தீராத ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்த நிலையினைப் போக்க குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென இந்த அவையிலே வேண்டுகோளாக நான் முன்வைக்கிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம், தொகுப்பு வீடுகளைக் கட்டித் தரக்கூடிய திட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டுமென இந்த அவையிலே நான் கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

இரண்டு ஆண்டுக் காலமாக தமிழகத்திலே மழை பொழியாமல் சரியான மழை இல்லாத காரணத்தினாலே வறட்சியுற்றிருக்கிற நிலையிலே திருத்தணி தொகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தின் போது வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வறட்சி நிவாரணம் வேண்டுமென்று கேட்டு மனு கொடுத்தார்கள். அந்த மக்களின் கோரிக்கை ஏற்கப்படாமல் மனு கொடுத்தவர்கள்மீது, அவர்கள் பெற்ற கூட்டுறவுச் சங்கக் கடனுக்காகக் கடந்த ஆட்சிக் காலத்திலே ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** எனவே, விவசாயிகள்மீது நம்முடைய ஆட்சியிலே ஜப்தி நடவடிக்கைகள் சற்று நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருத்தணி தொகுதியிலே ஏழை எளிய இளைஞர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே ஒரு தொழிற்சாலையை அமைக்க

[திரு. கோ. இரவிராஜ்] [2001 மே 29

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருத்தணி நகரத்திலே சரியான மருத்துவ வசதி இல்லாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிற மக்களுக்கு, திருத்தணி அரசு பொது மருத்துவமனையைச் சீரமைத்து, தரமான மருத்துவ வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-50*

பேருந்து வசதிகள் என்பது குறைவாக இருக்கக்கூடிய திருத்தணி தொகுதியிலே பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயிகள் கடந்த ஆட்சிக் காலத்திலே கரும்புகளை வெட்டி ஆலைக்கு அனுப்பியும் அவர்களுக்கு இதுநாள் வரையிலே பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறது. திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே மக்கள் அவதிப்படக்கூடிய அந்த நிலையினை மாற்றி, அந்த விவசாயிகளுக்கு உடனே பணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல திருத்தணி தொகுதியிலே பல்வேறு கிராமங்களிலே ரேஷன் அட்டை இல்லாமல் இருக்கக்கூடிய பாமர மக்களுக்கு உடனடியாக ரேஷன் அட்டை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே 15 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய தற்காலிகப் பணியாளர்கள் 350 பேரையும் மற்றும் பல்வேறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றக்கூடிய தற்காலிகப் பணியாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட டிவி.-க்கள் இன்றைக்கு தி.மு.க.-வினருடைய இல்லங்களிலே, தி.மு.க. ஊராட்சிமன்றத் தலைவர்களுடைய இல்லங்களிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் அலுவலகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து மக்களுக்கு பயன்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

சென்னையிலே இருக்கக்கூடிய B. & C. ஆலையிலே பணியாற்றிக்கொண்டிருந்த 14 ஆயிரம் தொழிலாளர்கள் தி.மு.க.



2001 மே 29] [திரு. கோ. இரவிராஜ்]

ஆட்சியிலே வெளியிலே இழுத்துத் தள்ளப்பட்டு, அவர்களுடைய குடும்பங்கள் தவித்துக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இது ஒரு பெரிய பிரச்சினை. அத்தோடு பேச்சை முடித்தாயிற்று. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள்.

*** திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30 ஆண்டுக் காலமாக ஆலைத் தொழிலாளர்கள் முதல் அமைப்புசாராத் தொழிலாளர்கள் வரை கருத்தாலும் கரத்தாலும் உழைக்கின்ற தோழர்களுக்காக பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு, முதன்முதலாக சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிட வாய்ப்பு அளித்த, வெற்றி பெற்று இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு வாய்ப்பு அளித்த உழைப்பவர் போற்றும் உத்தமத் தலைவர், பாட்டாளிகளின் பாதுகாவலர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான வணக்கத்திற்குரிய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கழகத்தின் பொருளாளர் மரியாதைக்குரிய அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், சென்னை மாநகரத்தின் தந்தை, எங்களுடைய இளைய தலைவர், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், சைதை தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மக்கள் தொண்டர் சைதை கா. கிட்டு அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த சைதை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்திட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும் முதலிலே என்னுடைய கன்னிப் பேச்சிலேயே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே நேற்றையதினம் உரையாற்றியபோது எங்கள் உறுப்பினர்களால் பல்வேறு கருத்துகள் எங்கள் இயக்கத்தின் சார்பிலே தெளிவாக எடுத்து வைத்து விளக்கப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து என்னுடைய கருத்துகளை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடு இந்த மன்றத்திலே உரையாற்றிய ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்துப்

பேசியிருக்கிறார்கள். நான் அப்போதேகூடக் குறுக்கிட்டு, ஒரு தவறான தகவல் தரப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி பேச வாய்ப்புக் கேட்டேன். கிடைக்கவில்லை. என்றாலும் இப்போது அதற்கான விளக்கத்தைச் சொல்வது என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

நேற்றைய விவாதத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் நெய்வேலி சுரங்கத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சுரங்கத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்களா? பேச்சுவார்த்தை நடத்தினார்களா? தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஏதேனும் அறிவுரைகள் வழங்கினார்களா? எதுவுமே இல்லாதபோது சுமுகமாகத் தீர்த்து வைத்ததாக எப்படி நன்றி தெரிவித்தார்கள் என்பதுதான் எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுக்குப் பல்வேறு பணிகள் இருந்திருக்கலாம். அந்தப் பிரச்சனையிலே அக்கறை காட்டி அமைச்சர் அவர்கள் தலையிட்டார்களா? அதிகாரிகள் தலையிட்டார்களா என்றால் அப்படி யாருமே தலையிடவில்லை. அந்த நிலையிலே பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் அந்தப் பேரவைத் தலைவர் அவர்களும், நானும் பேசி முடித்திருக்கிறோம். இன்றைக்கு... (கூச்சல்-குழப்பம்)

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. வை. பெருமாள்:** இது என்னுடைய கன்னிப் பேச்சு,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு, கன்னிப் பேச்சாகவே இருக்க வேண்டும். குறுக்கீடுகளை வலுக்கட்டாயமாக இழுக்கக்கூடாது. விளக்கம் சொல்ல வேண்டிய அளவுக்கு நீங்கள் பேசிவிட்டீர்கள், விளக்கத்தை அவர் சொல்லட்டும்.

**திரு. வை பெருமாள்:** நான் உரையாற்றிய பிறகு சொல்லலாம். கன்னிப் பேச்சிலே குறுக்கீடு செய்வது சபை மரபு ஆகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுவதைக் கேளுங்கள்.





*** மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி அனல் மின் நிலையப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் பிரச்சினை. மத்திய அரசினுடைய நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய அரசின் நிறுவனத்திற்கும், மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கும் உள்ள பிரச்சினை. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் அங்கிருந்து நாம் மின்சாரத்தைப் பெறுகின்றோம். இதுதான் தமிழ்நாடு அரசினுடைய நிலை. 1997 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை இருந்தது. அப்போது ஐக்கிய முன்னணி அரசாங்கம் இருந்தது. அப்போது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வக்கில்லாதவர்கள் இவர்கள். இந்தப் பிரச்சினையைத் தூண்டிவிட்டு நம்முடைய போற்றுதலுக்குரிய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் அம்மா அவர்களுடைய ஆட்சிக்குக் கெட்ட பெயர் வரவேண்டும் என்பதற்காக இருண்ட ஆட்சி நடத்தியவர்கள். தமிழகம் இருட்டாக இருக்க வேண்டும் என்கின்ற அந்தச் சதியை முறியடித்து ஒளிவிளக்கை ஏற்றி வைத்தார்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆத்திரத்தின் வெளிப்பாடு பளிச்சிடுவதைத்தான் என்னால் உணர முடிகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூச்சல் போட்டு என்னைத் தடுக்கலாம் என்று நினைத்தால் அது நடக்காது. (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெருமாள் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது உங்களுடைய கன்னிப் பேச்சு. நீங்கள் உரியவர்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்தி வந்தீர்கள். அதைப்போல, கொஞ்சம் மென்மையான அணுகுமுறையோடு உங்கள் தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளை எடுத்து வையுங்கள். இனிமேல் சண்டை போடுவதற்கு நிறைய நேரம் இருக்கிறது. அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே, இவர்களுடைய கூட்டணி அரசாங்கம் நடக்கிறது. அந்தப் பிரச்சினையை இவர்கள் தீர்ப்பதற்கு வக்கில்லாமல் அந்தப் போராட்டத்தைத் தூண்டிவிட்டு ஆதாயம் தேட நினைத்தார்கள்; புரட்சித் தலைவி அவர்கள் முறியடித்தார்கள். இதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களே, பிரச்சினை முடிந்துவிட்டது. முடிந்துவிட்டதைப்போய் எதற்குக் கிளறுகிறீர்கள். வேறு பிரச்சினைக்கு வாருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பெருமாள் அவர்கள் கன்னிப் பேச்சு என்ற காரணத்தினால் இடையிலே சில வார்த்தைகளைச் சொன்னதன் காரணமாக குறுக்கிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உண்மை என்னவென்றால், இந்தப் பிரச்சினை, இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக அந்த நிர்வாகத்தோடு தொடர்ந்துள்ளது. தீர்மானங்கள் போட்டு, தொழிற்சங்கம் சார்பாக அனைத்துக் கட்சித் தொழிற்சங்கங்களும் சேர்ந்து வாதாடி ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் கிடைக்கவேண்டிய நிலைமையில், ஏறத்தாழ பதினைந்தாயிரம் பேருடைய பிரச்சினை தொக்கி நின்று அந்த நிர்வாகம் சற்று பிடிவாதம் காட்டி, கடைசியாக இந்தக் காலகட்டத்தில் அங்கே இருந்த காவல் துறை அல்லது மத்திய அரசைச் சார்ந்த காவல் துறை தொழிலாளர்களைத் தாக்கி அதன் காரணமாக தொழிலாளர்கள் அனைவருமாகச் சேர்ந்து ஒரு வேலைநிறுத்தத்தில் இறங்க வேண்டிய இக்கட்டான நிலையில் அந்த வேலைநிறுத்தம் ஏற்பட்டது என்பதைத்தான் பெருமாள் அவர்கள், அது வெற்றிகரமாக இன்று முடிந்தாலும்கூட, அந்த அடிப்படையிலே ஏற்பட்டதே தவிர, இந்த ஆட்சி வந்ததற்கும், அந்தப் போராட்டம் நடந்ததற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத்தான் அவர் விளக்க முற்பட்டார். அது வேறுவிதமான கருத்துகளை உருவாக்கிவிட்ட நிலையில் அந்த விளக்கத்தைச் சொல்லுகிற வாய்ப்பு தவறிவிட்ட காரணத்தால், இந்த விளக்கம் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது அமைச்சர்கள் மீதோ, அதிகாரிகள் மீதோ குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களே, நீங்கள் சொல்ல வந்ததைப் பேராசிரியர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிட்டார்கள். வேறு பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் முதல்வருக்கு எப்படி நன்றி சொன்னார்கள் என்பதை நான் சொல்ல வந்தேனே தவிர, வேறு பழி சொல்வதற்காக அல்ல. அந்தப்



பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாங்கள் சிறப்பான ஒப்பந்தத்தை செய்து முடித்திருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தை மாண்புமிகு முன்னாள் முதல்வராக இருக்கக்கூடிய, கழகத்தின் தலைவராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞருடைய பெருமுயற்சியாலே எங்களுடைய மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசோடு தொடர்பு கொண்டு அதை வலியுறுத்தி, இரவு பகலாகப் பேசி, ஒரு மிகச் சிறப்பான ஒப்பந்தத்தை முடித்து, இந்திய நாட்டினுடைய வரலாற்றிலேயே, பொதுத் துறை நிறுவனங்களினுடைய சரித்திரத்திலேயே அது மாநில அரசு...

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. பெருமாள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. பெருமாள்:** மாநில அரசுத் துறை நிறுவனமானாலும், மத்திய அரசுத் துறை நிறுவனமானாலும் இவ்வளவு பெரிய ஊதிய உயர்வு இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு 60 சதவீத ஊதிய உயர்வைப் பெற்று, மாதத்திற்கு 2,500 ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வைப் பெற்றுக் கொடுத்து, குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபாயிலிருந்து அதிகபட்சம் ஒன்றே முக்கால் இலட்ச ரூபாய் வரை, நிலுவைத் தொகையையும் பெற்றுக் கொடுத்து, அந்தச் சிறப்பான ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறோம்.

இந்த நேரத்திலே இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போராட்டத்திலே தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மட்டுமல்ல, ஆளுங்கட்சியைச் சார்ந்த அண்ணா தொழிற்சங்கம், பாட்டாளி தொழிற் சங்கம், சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. உள்ளிட்ட அனைத்துத் தொழிற்சங்கங்களும் இறுதிவரை ஆதரவாய் இருந்து குரல் கொடுத்தார்கள், போராடினார்கள், இதற்குத் துணை நின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் அரசியல் உள்நோக்கம் என்பதற்கு கிஞ்சித்தும் இடம் கிடையாது. ஒட்டுமொத்தத் தொழிலாளர்களின் பிரச்சினை என்பதால், ஒருமித்த கருத்தோடு நின்று இன்னும் அதிகம் பெற்றுத் தர வேண்டுமென்ற உணர்வோடுதான் இதர சங்கங்களும் துணையாக நின்று குரல் கொடுத்தன.

அங்கேயுள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைப் பொறுத்தவரை 32 ஆண்டுக் காலமாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம். சமீபத்திலே நடைபெற்ற

தேர்தலிலேயும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் 5,758 வாக்குகளைப் பெற்று முதலிடம் பெற்றது. அப்படிப்பட்ட அங்கீகாரம் பெற்ற சங்கம், அந்த அங்கீகாரத்தோடு, தன்னுடைய தனித் தன்மையோடு அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கெல்லாம் மிக முக்கியமாக, ஊக்கப்படுத்தி, இந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே எப்போதுமே துணை நிற்கிற தலைவர் கலைஞர் அவர்களுடைய அந்தச் செயல்பாட்டாலேதான் நெய்வேலியிலே 32 ஆண்டுக் காலம் அந்த அங்கீகாரத்தை எங்களால் தக்க வைத்துக் கொண்டிருக்கவும் முடிகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, வேலைநிறுத்த அறிவிப்பு என்பது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கொடுக்கப்பட்டதல்ல. 18-4-2001 அன்று வேலைநிறுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டது. 3-5-2001 அன்று-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களே, கொஞ்சம் நெய்வேலியிலிருந்து சைதாப்பேட்டைக்கு வந்து எங்களை மகிழ்ச்சியோடு மதிய உணவிற்கு அனுப்பி வையுங்கள்.

**திரு. வை. பெருமாள்:** ஆகவே இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை, அரசியல் காரணங்களும் எதுவும் இல்லை என்பதை நான் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் அரசியல் நோக்கம் இல்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற விவரங்களில் பக்கம் 15-ல் 'செலுத்த இயலுகின்ற கட்டணத்தில், மக்கள் பயணம் செய்வதற்கும் சரக்குகள் எடுத்துச் செல்வதற்கும் அதிக வசதிகள் செய்து கொடுக்கும் நோக்குடன் போக்குவரத்துத் துறையின் நிலை ஆய்வு செய்யப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது என்னவென்றே புரியவில்லை. மக்கள் செலுத்தும் சக்தி என்று சொன்னால் போக்குவரத்துக் கழகங்களிலே கட்டணத்தைக் குறைக்கப் போகிறீர்களா? மக்கள் விருப்பம் என்று சொன்னால் கட்டணமே இல்லாமல் இலவசமாக என்று சொன்னால்கூட மக்கள் பெரிதும் விரும்புவார்கள். ஆக என்ன செய்யப் போகிறீர்கள்? எதற்காக இந்த ஆய்வு என்பது தெரியவில்லை.

அது மட்டுமல்ல. பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே 11-வது மற்றும் 12-வது வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும்



பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டத்தை பக்கம் 21-ல் அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கக்கூடியதுதான். அதே திட்டத்தினை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் அதை விரிவுபடுத்தி வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பு இழந்த பணியாளர்கள் விரைவில் மறுவாழ்வு பெறும் வகையில் பலதரப்பட்ட தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பை இழந்த தொழிலாளர்கள், அவர்களுக்குப் பலதரப்பட்ட தொழில்களிலே பயிற்சி அளிப்பது என்று சொன்னால், அது புரியவில்லை, தெளிவான விளக்கமில்லை. வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஆளுநர் உரையிலே இருப்பதைப் பற்றி ஒரு விளக்கம் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக உற்பத்தித் திறன் குறைந்தோ மற்ற காரணங்களாலோ சில தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. வேண்டுமென்றே தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற நிலையில் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இப்படி இருக்கும்போது அவர்களுக்கு மறுவாழ்வு தர வேண்டுமென்றால், அவர்கள் மீண்டும் தொழில் அமைக்க வேண்டுமென்றால், பல்வேறு தொழில்களைக் கற்றுக்கொண்டால்தான் இந்தக் காலத்திலே முடியும். இருக்கும் தொழிற்சாலைகளைக்கூட மேம்படுத்தி, Modernisation என்று வருகிறபோது பலதரப்பட்ட பயிற்சிக்ள் தர வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு multifarious discipline பயிற்சிகள் தருவதன் மூலமாக அவர்கள் மற்ற வேறு தொழில்களைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான், ஒரு நல்லெண்ணத்துடன்தான் அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் கிடையாது.

பிற்பகல் 2-05

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கத்தை நான் குறை சொல்லவில்லை. எங்கே வாய்ப்பு என்பதுதான் பிரச்சினை. அதனாலேதான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வேலையிழந்திருக்கக் கூடியவர்களுக்கு இருக்கிற நிறுவனங்களைத் தவிர்த்து, புதிதாக நிறுவனங்களை உருவாக்கி வேலை தருகிறோம் என்று சொன்னால் அதற்கு

வாய்ப்புகள் உண்டு, வரவேற்க முடியும். ஆனால் வாய்ப்பு அளிக்கப்படும் என்று சொல்கிறபோது, இருக்கிற நிறுவனங்களிலே எங்கே பார்த்தாலும் surplus என்ற நிலை வருகிறபோது, இவர்களை எங்கே பயன்படுத்துவீர்கள் என்பதற்கான விளக்கத்தைத்தான் கேட்டேனே தவிர, வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு, அந்த ஆலைகளைத் திறப்பதற்கான செயல்திட்டங்கள் எதுவும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை என்றாலும், முதல்வர் உரையிலே பிறகு சொல்வார்கள் என்று நம்புகிறோம். சொல்லவேண்டுமென்றும் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 250...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள், நிறுத்துங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்து. 1996 ஆம் ஆண்டு உங்களுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சர், U.F. Government-லே தொழில் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். உங்களுடைய கட்சியைச் சார்ந்த அமைச்சர் அதிலே தொழில் துறை அமைச்சராக இருந்து இன்றைய B.J.P. அரசிலேயும் அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்து கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்திலே பலமுறை நாங்கள் Hindustan Photo Films தொழிற்சாலை sick ஆக இருக்கிறது என்ற கோரிக்கையை விடுத்தோம். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. Salem Steel Plant-ஐப் பற்றிப் பலமுறை நாங்கள் கோரிக்கை விடுத்தோம். அதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 1996-லிருந்து 2001 வரையில் தொழில் துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. முரசொலி மாறன் அவர்கள் தமிழ்நாட்டில் தொழில் துறை நலிவடைவதற்கு எந்த அளவிற்குக் காரணமாக இருந்திருக்கிறார் என்பது இதிலிருந்து தெரியும். அமைச்சராக இருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையிலும் எடுக்கப்படவில்லை. Hindustan Photo Films தொழிற்சாலைக்கு மட்டுமல்லாமல் பலமுறை வேறு பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் நான் என்பதை அருமைச் சகோதரர் திரு. பெருமாளுக்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**திரு. வை. பெருமாள்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து வேறாக இருக்கலாம். ஆனால், திரு. முரசொலி மாறன் அவர்கள் 1996-லேயிருந்து மத்தியில் தொழில் துறை அமைச்சராக இல்லை என்பதை மட்டும் மாண்புமிகு அமைச்சருக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-லே U.F. Government-லே அவர் தொழில் துறை அமைச்சர். இப்போதைய B.J.P. அரசிலேயும் அவர் தொழில் துறை மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்து கொண்டிருக்கிறார். நானே சில கேள்விகளை அவரிடத்திலே கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களே, பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hindustan Photo Films நிறுவனத்திலே நாங்களும் ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். அந்த நிறுவனத்திலே நாங்கள் பல முறையீடுகள் கொடுத்து இன்று அந்த நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்றாலே அதற்கு அடிப்படைக் காரணம் அண்ணன் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய பெருமுயற்சி என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது ஒரு பக்கம் இருக்க, இப்போது நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் மூடப்பட்டிருக்கிற ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று சொல்லி தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது முடிவெடுத்து...

*** மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கை, மூடப்பட்டுக் கிடக்கிற ஆலைத் தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணம் என்று கேட்கிறார். எனக்கு முன்பு இந்தத் தமிழகத்தினுடைய தொழில் துறையை நிர்வகித்தவர் அவருடைய கட்சியினுடைய தலைவர் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆவார்கள். நான் இங்கே ஒரு கருத்தை

[திரு. வி. ஜெயராமன்] [2001 மே 29

மிகுந்த பணிவன்போடு என்னுடைய கன்னிப் பேச்சிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த 1991 முதல் 1996 வரையிலான காலத்திலே தமிழகத்தினுடைய அரசுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகளினுடைய நிலைமையைப் பற்றிய வெள்ளை அறிக்கையையும் வைப்போம். 1996-க்குப் பிறகு சற்று முன்பு வரையிலேயும், தமிழகத்தினுடைய முதலமைச்சராகவும், தமிழகத்தினுடைய தொழில் துறை அமைச்சராகவும் இருந்த திரு. கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொழில் துறையை நிர்வகித்திருக்கின்ற காலக்கட்டத்திலே எத்தனை ஆலைகள் மூடப்படக்கூடிய, கடுமையான, சோதனையான, ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதற்குண்டான வெள்ளை அறிக்கையையும் வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மீது, அனுபவரீதியான, ஆத்திரமில்லாத ஒரு பொறுப்பான வாதம் செய்வதற்காக உங்களுடைய கட்சியினுடைய தலைவர் இங்கே வருவதற்குத் தயாராக இருக்கிறாரா என்கிற என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, மூடப்பட்ட தொழிற்சாலைகள் எப்போது மூடப்பட்டன என்பது பிரச்சினை அல்ல. அந்த பிரச்சினைக்குள்ளே போனால் மிகச் சிக்கலாகும். அவர், மூடப்பட்ட தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கக்கூடிய தொழிலாளிகளைப் பற்றி இப்போது பேசுகிறார். மற்ற பிரச்சினைகளைப் பின்னாலே பார்த்துக்கொள்ளலாம்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளிலே, தொழில் துறையில், தமிழகத்திலே மிகவும் பலவீனமான ஒரு சூழ்நிலையிலே, கேட்பார் இல்லாத நிலையிலே, நாதியற்றுப் போய் எவ்வகையான நிர்வாகமும் இல்லாமல், மிகவும் நசிந்து நலிவடைந்து இருக்கிறது. அரசுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகள் அனைத்தையும் எப்படி மீண்டும் உயிர்ப்பித்து ஓட்டுவது என்று திணறக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சபையில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.



2001 மே 29]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராகவா, ஜனநாயகப் பேரவை உறுப்பினராகவா, எது என்று தெரியவில்லை. திரு. பெருமாள் பேசிக்கொண்டிருக்கிறார், அவர்களே விளக்கம் சொல்வார்.

**திரு. ப. ரங்கநாதன்:** அமைச்சருடைய பேச்சுக்கு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. ரங்கநாதன்.

* **திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996 வரையில், இந்தியாவிலேயே, அனைத்து மாநில தொழில் வரிசையுடைய விகிதாச்சாரத்தைப் பார்க்கின்றபோது, அந்த 5 ஆண்டுக் காலத்தில், தமிழகம் 13-வது இடத்தில் இருந்தது. ஆனால், 1996-லிருந்து 2001 வரையில், தொழில் துறையிலே இந்தியாவிலேயே 2-வது மாநிலமாக உயர்வு பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ரங்கநாதன் அவர்களே, இராமாயணத்திலே எல்லாம் முடிந்து பட்டாபிஷேக நேரத்திலே, நீங்கள் கோசலை பாயாசம் சாப்பிட்டதில் ஆரம்பிக்கிறீர்கள். இது பிரச்சினைகளை ரொம்ப வளர்த்துக்கொண்டு போகும். திரு. பெருமாள் அவர்கள் கொஞ்சம் சுருக்கமாக ஆளுநர் உரையைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காக, மாதம் 250 ரூபாய் உதவித் தொகை வழங்கினார்கள். அந்த உதவித் தொகை குறித்து...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரே ஒரு clarification.

[2001 மே 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. பெருமாள்:** அதற்கான கோப்புகள் அரசாங்கத்தில் இருக்கின்றன. தொழிலாளர் நலத் துறையிலே இருக்கின்றன. தேவைப்படுபவர்கள் பார்க்கலாம். (கூச்சல்-குழப்பம்) இப்படி இடையூறு இருந்தால் நான் எப்படிக் கருத்து சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 250 ரூபாய் உதவித் தொகை பற்றி.... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால கருணாநிதி அரசு வெறும் அறிவிப்போடு நிறுத்தி விட்டது. இப்போது 250 ரூபாய் நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள்., நான் சார்ந்திருக்கின்ற வடசென்னைப் பகுதியில், மெட்டல் பாக்ஸ் கம்பெனி இருக்கின்றது. சட்டசபையிலே, கருணாநிதி அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள், மூடப்பட்ட அந்த மெட்டல் பாக்ஸ் கம்பெனியிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். இதுவரை தந்தார்களா என்றால் தரவில்லை.(குறுக்கீடு)

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம் சொல்லட்டும், உட்காருங்கள்.

**திரு. வை. பெருமாள்:** ஆட்சி, அதிகாரம், அந்த விவரங்களைக் கையில் வைத்து இருக்கிறவர்கள், அரசாங்கத்திலே இருக்கின்ற கோப்புகளை வாங்கி, எந்தெந்தத் தொழிலாளர்களுக்கு, எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை அவர்களே பார்க்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், முடிக்கட்டும்.

**திரு. வை. பெருமாள்:** அதற்காகத் தொழிலாளர் நலத் துறைச் செயலாளர் தலைமையிலே குழுவும் இருக்கிறது. அனைத்துக் கட்சித் தொழிற் சங்கங்களைச் சார்ந்தவர்கள் அதிலே பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். அதிலே விவாதிக்கப்பட்டு—



2001 மே 29]

(மாண்புமிகு திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, திரு. ஆர். சாமி ஆகிய மூவரும் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்களும் உறுப்பினரும் அமரலாம். அவர் பேசவேண்டிய கருத்தைப் பேசி முடிக்கட்டும்.

**திரு. வை. பெருமாள்:** அங்கீகரிக்கப்பட்ட விதிமுறை ஆலைகளுக்குண்டான தொழிலாளர்களுக்கு அந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டு, அந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது. குறைபாடுகள் இருந்தால் அதைச் சீர்படுத்துங்கள். நீங்கள் சரி செய்யுங்கள், ஆட்சேபணை இல்லை. ஆனால், ஒன்றை நான் சொல்கிறேன். 250 ரூபாயைத் தலைவர் கலைஞர் வழங்க ஆணையிட்டார். அப்போது குறை சொன்னீர்கள். அதை உயர்த்தி வழங்கவேண்டும்...(கூச்சல்-குழப்பம்). இப்படி கூச்சல் போட்டு பேச விடக்கூடாது என்பதுதான் நோக்கமாக ஆளும் தரப்பில் இருக்குமானால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமரலாம். திரு. சாமி உட்காருங்கள், அவரே சொல்லிவிட்டார், குறைபாடுகள் இருந்தால் அதைச் சீர்படுத்துங்கள் என்று சொல்லிவிட்டார். மற்றபடி அவர் பேசட்டும், மேற்கொண்டு பேசட்டும்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசவே விடக்கூடாது என்று முடிவெடுத்துத் தடை செய்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அவர் பேசுவது கன்னிப் பேச்சு. பேசி முடிக்கட்டும். பிறகு விளக்கம் சொல்வதற்குப் போதுமான நேரம் இருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகை 250 ரூபாய் குறைவு என்று சொன்னவர்கள், அதைக் கூடுதலாக அறிவித்திருந்தால் ஆளுநர் உரையில் வரவேற்கத்தக்க வகையிலே அமைந்திருக்கும் என்பதற்காகத்தான் அதை நான் குறிப்பிடுகிறேன்.

அது மட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள மூன்றரை இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள், ஊதிய உயர்வுக்காகக் கோரிக்கைகள் வைத்து, வேலைநிறுத்த அறிவிப்புக் கொடுத்து,

பேச்சுவார்த்தை நடத்தி, அரசின் சார்பிலே 10(பி) உத்தரவு மூலமாக ஊதிய உயர்வு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுத்த நேரத்தில், தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறவேண்டும் என்று சொல்லி ஒரு சிக்கல் வந்தது. அதற்காக அனுமதி கோரி எழுதினார்கள். அனுமதி கோரி எழுதியிருந்தபோது, தேர்தல் ஆணையத்திடமிருந்து அதற்குப் பதில் வராத காரணத்தினால், அந்த 10 (பி) உத்தரவு பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்கு ஆணை பிறப்பிக்கப்படாமல் போய்விட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இப்போது தேர்தல் எல்லாம் முடிந்துவிட்டது. புதிய அரசு அமைந்திருக்கிறது. மூன்றரை இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிக்கை மீது, தொழில் தகராறு சட்டம், பிரிவு 10(பி)-ன்கீழ் இடைக்கால உயர்வை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று அரசை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2.15

அதேபோல, நிலுவையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவு வங்கி ஊழியர்களுடைய Streamline Committee recommendations அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதேபோல, நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களுடைய ஓய்வூதியம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இவையெல்லாம், தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரத்திலே முடிவு எடுக்க முடியாமல் நிலுவையில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம், விரைவாக நடவடிக்கை எடுத்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, 1996-லே ஆட்சிப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக இரண்டு குழுக்களை நியமித்தார்கள். அமைப்புசாரா தொழிலாளர்களில் மூட்டை சுமப்பவர், பாரவண்டி இழுக்கிறவர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர், ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுபவர் என்று சொல்லி, அமைப்புசாரா தொழிலாளர் என்கிற வகையில் இருக்கிற 67 வகையான தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைப்பது குறித்து, சமூக நலப் பாதுகாப்பு குறித்து அந்தக் குழு பரிசீலித்து அரசுக்கு அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நல வாரியங்கள் அமைத்துக் கொடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. அதனை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



அந்தத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. அந்த ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சொல்லப்போனால், அந்தத் தொழிலாளர்களிலே பெரும்பகுதியாக இருக்கிறவர்கள் அமைப்புசாரா நிலையிலே இருக்கிறவர்கள், பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறவர்கள். அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பு, கடமை என்ற வகையிலேதான் இந்திய நாட்டிற்கே வழிகாட்டக்கூடிய வகையில் 67 தொழில்களுக்கு சமூகப் பாதுகாப்பை உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைவிட, தலைவர் கலைஞர் செய்ததைவிட, அந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகள் நாங்கள் செய்கிறோம் என்று நீங்கள் செய்தால் அதைப் பாராட்டி, வரவேற்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த வகையிலே அந்தத் தொழிலாளர்களுக்கு அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களை உயர்த்துவதற்கு...(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் யாரும் எழுந்திருக்கக் கூடாது. அமைச்சர் கொஞ்சம் உட்காருங்கள். திரு. சீனிவேல் உட்காருங்கள்.

(மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா எழுந்து நின்றார்.)

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** தொழிலாளர்கள் இன்று பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்...

**திரு. வை. பெருமாள்:** இதை அனுமதிக்கக் கூடாது. பிறகு நாங்களும் இதுமாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களே, இது உங்களுடைய கன்னிப் பேச்சு. விவகாரங்களை வளர்க்கக்கூடிய வகையிலே பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டாம். சில கருத்துகளைச் சொல்லுங்கள். சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவருடைய தலைவர் முன்னாள் முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒரு குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, கட்டடத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு வாரியத்தை அமைத்து, அப்படி அமைக்கப்பட்ட வாரியத்திற்கு பொருளாதார நிதியாதாரங்கள் வேண்டுமென்ற அடிப்படையில் திட்டமிட்டுச் செயல்பட்டு அறிவித்ததே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாரியத்தில்தான் 38 கோடி ரூபாய்க்கு இன்று இருப்பு இருக்கிறது என்பதையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுதவிர, அவர் சொன்னதைப்போல, ஐந்தாண்டுகள் அவர்கள் ஆய்வு செய்து, தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, ஏழெட்டு வாரியங்கள் என்று பெயரளவிலே அறிவித்து, அறிவிக்கப்பட்ட வாரியங்களுக்கு நிதியாதாரங்கள் எதுவுமில்லாமல், மொட்டையாக அப்படியே வைத்துவிட்டு, இந்தக் கட்டடத் தொழிலாளர்கள் வாரியத்தில் இருக்கிற நிதியை எடுத்து அதில் போட்டு, அவர்களுக்கும் சேர்த்துச் செய்யலாம் என்று ஒரு முடிவை மேற்கொண்டு, அந்த முடிவையும் செய்ய முடியாமல், அந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு முன்னாள் முதல்வர் படத்தைப் போட்டு, ஒரு அடையாள அட்டையை வழங்கி, தேர்தலுக்காக வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்கிறார்களே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையில் அவர்களுக்கு உதவ வேண்டுமென்று முன்னாள் முதல்வரும் கருதவில்லை, அந்த அரசும் கருதவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ற்பகல் 2-20

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறையைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் என்ற முறையிலே விளக்கத்தை அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்தில் முன்னாள் முதலமைச்சருடைய தலைமையிலே இருந்தபோது, அப்போது அமைக்கப்பட்ட இந்தக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வாரியம்



மாநகராட்சிகளுக்கு மட்டுமே அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி; மதுரை மாநகராட்சி; கோவை மாநகராட்சி; மற்ற யாருக்கும் அல்ல. அந்த ஆட்சி முடிகிறபோது அதிலேயிருந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 25000 பேர். அப்போது அவர்கள் வைத்துவிட்டுச் சென்ற தொகை 25 இலட்சம் ரூபாய்தான். கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் அதனுடைய எண்ணிக்கை 25000-லிருந்து இன்று 8 இலட்சம் பேர் என்ற எண்ணிக்கைக்கு உயர்த்தப்பட்டு, 38 கோடி ரூபாய் இருப்பும் வைக்கப்பட்டது கலைஞருடைய ஆட்சியில்தான். He is the real founder என்ற அடிப்படையிலே இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, அவர் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. எங்களுடைய உறுப்பினர் சொல்கின்றபோது, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு இவ்வளவு செய்திருக்கிறோம், நீங்களும் செய்யுங்கள் என்று கேட்கும்போது, ஏன் இவ்வளவு சத்தம் வரவேண்டும்? (கூச்சல்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துகளைச் சொல்கிறபோது, எங்களைப் பேசவிடுங்கள், தயவுசெய்து, கருத்துகளைப் பேசுகின்றபோது இதுபோன்று–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் அமைச்சர் அவருடைய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார். இன்னாள் அமைச்சர் அவர்கள் எல்லா நிலைமைகளையும் விளக்கி அவர், அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெருமாள் அவர்கள், அவருடைய உரையின் நிறைவு கட்டத்திற்கு வந்து, இரண்டு நிமிடத்திலே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், 2-23 மணிக்கு பேரவை முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததெல்லாம், யாரையும் குறை சொல்கிற நோக்கத்தில் அல்ல. அமைப்புசாரா தொழிலாளர்களைப் பொறுத்தவரை, நான் சொல்ல வந்த விளக்கங்கள், நான் அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தவன் என்ற முறையிலே நான் அந்த விவரங்களைச் சொன்னேனேதவிர, வேறு எதுவும் அல்ல. அதுமட்டுமல்ல, கட்டடத் தொழிலாளர் வாரியத்திற்கு நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் என்னுடைய கருத்தும்கூட. நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், இன்னும் சிறப்பாகச் செயல்படுகிற வகையிலே வரவேண்டும் என்பதற்காகத்தானே தவிர, நிலுவையிலுள்ள பிரச்சினைகளில் தேர்தல் வந்த காரணத்தினாலே நிறுத்தி

வைக்கப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளில், அரசின் சார்பிலே ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய, அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய உறுதிமொழிகளையும் செயல்படுத்துகின்ற விதத்திலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த விவாதத்திலே பங்கேற்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(30-05-2001)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *2-22* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1.* *2000* ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் தொலைக்காட்சி கம்பிவடங்கள் அமைத்தல் ஒழுங்குமுறை விதிகளில் திருத் தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் *28-11-2000* ஆம் நாளிட்ட *676* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1919* ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1919) 348*(டி) பிரிவு, *1920* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *5/1920) 304(2)* பிரிவு, *1971* ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *15/1971) 432(2)* பிரிவு, *1981* ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *25/1981) 431(2)* பிரிவு, *1994* ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *27/1994) 11(3)* பிரிவு, *1994* ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *28/1994) 11(3)* பிரிவு, மற்றும் *1994* ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *29/1994) 11(3)* பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*2.* எந்த ஒரு மீன்பிடி விசைப்படகும் அல்லது நாட்டுப்படகும் (அவற்றின் அளவுகள் அல்லது பயன்படுத்தப்படும் இயந்திர வகைகளை கணக்கில் கொள்ளாமல்) இரட்டைமடி வலைகள் மற்றும் சுருக்குமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பு மேற்கொள்வது தமிழ்நாடு சார்ந்த



கடல் பகுதியில் (Territorial Waters) மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தடை செய்யப்படுவது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் *25-3-2000* ஆம் நாளிட்ட *40* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *8/1983) 26(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1.* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

*2. 2001* ஆம் ஆண்டு மே திங்கள் *25* ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

*3. 1956* ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *74/1956)* கீழ் வணிக வரிகள் துறையின் *2-6-2000* ஆம் நாளன்று உருவாகி, *2-6-2000* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட மி(1)வவ*/45*, (இ3)/*2000* ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்துள்ளது குறித்து வணிக வரிகள் துறையின் *6-12-2000* ஆம் நாளிட்ட *182* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

***

222387
D
V27, 8/01
P01.21